கல்கி

திருவண்ணாமலை ஸ்பெஷல்

KALKI
7.4.2002
ரூ. 6.00



வைரவிழா ஆண்டு



ஆசிரம ரகசியங்கள்!







கல்கி

அடுத்த இதழில்...

வாஸந்தி

எழுதும்

பொய்யில் பூத்த நிஜம்

முத்திரை பதிக்கும் தொடர் ஆரம்பம்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் எல்லாருமே பொடோ சட்டம் பற்றி உணர்ச்சி வசப்பட்டுத்தான் பேசினார்கள். They take the floor only to hit the ceiling என்று சொன்னால் தப்பில்லை.

பிரதமர்ஜியும் சோனியாஜியும் பரிமாறிக் கொண்ட வாதப் பிரதிவாதங்களைப் பத்திரிகைகளில் படித்தபோது அத்தனை சூடாகத் தெரியவில்லை. ஆனால் இவரில் கொஞ்சம் அவரில் கொஞ்சம் என்று ஸ்டார் நியூஸ்காரர்கள் மாற்றி மாற்றிக் காட்டியபோது டீ.வி பெட்டியின் மீது கல்லை வைத்துத் தோசை வார்த்திருக்கலாம். அப்படியொரு அனல் பறந்தது.

ஆனால் வாஜ்பாய் பேசிய சமயங்களில் மட்டும் ஒரே ஆரவாரம்; கைதட்டல். (அவருடைய கருத்தை ஆதரித்தா எதிர்த்தா என்று தெரியவில்லை.) சோனியாகாந்தி பேசியபோது எந்தப் பரபரப்பும் காணோம். காரணம் முன்னவர் பேசியது இந்தியில். பின்னவரின் பேச்சு ஆங்கிலத்தில். உணர்ச்சியைத் தட்டி எழுப்ப வேண்டுமானால் தாய்மொழியைத்தான் துணைக்கு அழைக்க வேண்டும் என்பது நிதர்சனம்.

மெரீனா, முட்டுக்காடு, மாமல்லபுரம், ஊட்டி, கொடைக்கானல், பெங்களூர் என்று ஆரம்பித்து, சிங்கப்பூரை எட்டிய விஜயசாரதி இப்போது தேம்ஸ் நதிக்கரையில் நிற்கிறார். (ஸன் - 'நீங்கள் கேட்ட பாடல்' ஆனால் குளிர்காலம், பாவம். காலோடு தலை கனத்த கம்பளி உடைகளைப் போர்த்திக் கொண்டு அதே கோலத்தில் உள்ள தமிழர்களைச் சந்தித்து அளவளாவினார். பின்னணியில் தென்பட்ட லண்டன் காட்சிகள் அபாரம்.

விஜயசாரதி அவசர அவசரமாகப் பேசினாரே தவிர, அவர் அவசரம் அவருக்குத் தெரியும். அடுத்த வாரம் பாரிசில் இருக்க வேண்டுமாம் - லண்டன்வாசிகள் relaxed, slow life வாழ்வதாகச் சொன்னார்கள். இங்கே எல்லாரும் விரும்பிக் கேட்கும் பாடல்களைத்தான் அங்கே அவர்களும் கேட்கிறார்கள். ஒன்று மாதவன்- ஷாலினியின் 'சிநேகிதனே'. இன்னொன்று, 'ரோஜாக்கூட்டம்' ஸ்ரீகாந்த் - பூமிகா. இரண்டிலுமே நாயகிகளின் கிளாமர் அமர்க்களம்தான். To be popular a girl should do the wrong thing at the right time என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

லண்டன்வாசியான ஒரு பெண்மணி, 'நாங்கள் எங்கள் கலாசாரத்தை மறப்பதில்லை. வீட்டில் எங்கள் பெண் இங்கிலீஷில் பேசினால் நாங்கள் தமிழில் பதிலளித்து அவளையும் தமிழில் பேச வைக்கிறோம்' என்றார். குறிப்பிட வேண்டிய விஷயம்: இவர் ஓர் இலங்கைப் பெண்மணி.

• காரைக்குடி மணி

எவ்வளவு தினேஷ் மோங்கியாக்கள் வந்து அதிரடி ரெய்டு நடத்தினாலும், எவ்வளவு கைஃப்புகளும் யுவராஜ்சிங்குகளும் களமிறங்கிக் கலங்கடித்தாலும், ஒரு சீசன் பூரா டெண்டுல்கரைப்

• ஹர்ஷா

ரிமோட்





கல்லை வைத்துத் தோசை வார்த்திருக்கலாம்!



• சோனியா காந்தி

பார்க்க முடியாமல் போனது ஏமாற்றம்தான்.

அதற்கு ஆறுதல் பரிசாக அமைந்தது ஹர்ஷா ஆன் லைனில் அவர் மனம் திறந்து கொடுத்த பேட்டி. (ஸ்டார் ஸ்போர்ட்ஸ்) 'பண மழை கொட்டுவதால்தான் விளம்பரப் படங்களை ஒப்புக் கொள்கிறீர்கள் என்று சொல்கிறார்களே, சரிதானா?' என்று ஹர்ஷத் கேட்டார். 'மக்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பு கிடைக்கிறது என்பதற்காக விளம்பரப் படங்களில் நடிக்கிறேன்' என்று பதிலளித்த சச்சின், 'பணம் ஒரு பாதுகாப்பு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் பணம் உன்னை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காதே என்று என் தந்தை சொன்னதை நான் மறப்பது கிடையாது' என்றார்.

உண்மையில் நடுத்தரக் குடும்பத்தின் தயக்கங்களும் கூச்சல்களும்தான் அவர் பேட்டியில் தென்பட்டதேயொழிய எந்தப் பணக்கார ஜபர்தஸ்தும் இருக்கவில்லை. All great men come out of the middle classes என்று எமர்ஸன் சொன்னது ஞாபகம் வருகிறது.

'நீங்கள் தெய்வபக்தி உள்ளவரா?' என்று இ-மெயிலில் ஒரு ரசிகர் கேட்டார். 'நிச்சயமாய். காலையில் எழுந்ததும் பூஜை அறையில் உள்ள எல்லாத் தெய்வங்களையும் வணங்கிவிட்டு, என் தாய்க்கு நமஸ்காரம் செய்தபிறகுதான் மற்ற வேலைகளைக் கவனிக்கிறேன். கூட்டம் கூடிவிடக் கூடாது என்பதால் இரவு பன்னிரண்டு மணிக்குக் கோவிலுக்குப் போகிறேன்' என்றார்.

கணேஷ் சதுர்த்தி, ஹோலி, ஜன்மாஷ்டமி, தீபாவளி முதலான ஒவ்வொரு பண்டிகை நாளில் அவர் ஒவ்வொரு சாதனை நிகழ்த்தியிருப்பதைத் தேதி வாரியாக எடுத்துச் சொன்னார் ஹர்ஷா. 'அட, அப்படியா! எனக்குத் தெரியாதே!' என்று ஆச்சரியப்பட்டார் எல்லாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிற டெண்டுல்கர்.

'ஜுகல்பந்தி என்பது சுத்தக் கோமாளித்தனம்!' என்று சுப்புடு ஒருமுறை காய் காயென்று காய்த்துத் தள்ளினார் ஏனோ கொஞ்ச காலமாக அதன் மவுசு குறைந்திருக்கிறது.

ஆனால் ஃப்யூஷன் என்ற தலைப்பில் காரைக்குடி மணி நடத்திய லய விருந்து லயிக்கும்படி இருந்தது. கிட்டத்தட்ட ஜாஸ் பாணிதான். புல்லாங்குழல் ஜேமி பாம், கிடாரிஸ்டுகள் கென் வெஸ்ஸெல், ஜெரோம் ஹாரிஸ் ஆகியோருடன் இணைந்து அவர் எழுப்பிய தாள மாளிகை அபாரம். (ஓரமாக இரண்டு கைகள் கோட்டு வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தனவே, அந்த முகம் காட்டப்படாத மர்மக் கலைஞர் யார்?)

கே.டீ.வியில் இவர்களை இசைக்க வைத்துப் பேட்டி கண்ட குமாரிக்குச் சங்கீதம் அவ்வளவு பரிச்சயமான விஷயம் என்று தோன்றவில்லை. காரைக்குடி மணியைப் பார்த்து, 'தேசபக்தர் சுப்பிரமணிய சிவா மாதிரி தாடியும் முடியும் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, ஏன்?' என்று கேட்டார்.

என்ன அறிவுபூர்வமான கேள்வி! இதனால்தான் ஞானி நீட்ஷே, Better know nothing than half know many things என்றார்.



• கலைஞர்



• ஜெயலலிதா

'ஆடு உறவு; குட்டி பகை?' என்று கிராமங்களில் ஒரு சொலவடை உண்டு. தி.மு.க. – பா.ஜ.க. தொடர்பும் அப்படித்தான் இருக்கிறது. என்.டி.ஏவில் இருப்பதன் காரணமாக தேசிய அளவில் பா.ஜ.கவுடன் உறவு, ஆனால் தமிழக பா.ஜ.கவுடன் 'பகை' என்று சொல்லாமல் 'நட்பு' என்று கண்ணியமாகச் சொல்லியிருக்கிறார் கலைஞர். அவரது இந்த ஸ்டேட்மென்ட் வந்தவுடன் "அவர்கள் போனால் போகட்டுமே!", "மத்தியிலிருந்து விலகத் தயாரா?"என்றெல்லாம் எகிறிக் குதித்தனர் தமிழக பா.ஜ.க. தலைவர்கள். தில்லியிலிருந்து 'டோஸ்' வந்தவுடன் "தி.மு.க. எங்களுடன் உறவைத் துண்டித்துக் கொண்டது துரதிஷ்டமே" என்று கொஞ்சம் மென்மையாக இறங்கி வந்திருக்கிறார்கள். உறவைப் பற்றிய முதல் அறிவிப்பு மூலம், தி.மு.க. தனது வழக்கமான பாணியிலிருந்து விலகி, முதலடி அடித்திருக்கிறது.

போன சட்டமன்றத் தொடரிலேயே "எனக்கு சிக்னல் கிடைத்து விட்டது" (அ.தி.மு. க.வுடன் உறவு வைத்துக் கொள்ள) என்றார் சட்டமன்ற பா.ஜ.க. தலைவர் கே.என். லட்சுமணன். கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து சங்கப் பரிவாருக்கு சந்தோஷம் ஏற்படுத்தும் வகையில் அறிக்கை விட்டது, அன்னதானம் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஆன்மிக வகுப்புகளை துவங்கியது; அந்த விழாவுக்கு பா.ஜ.க. பிரமுகர்களை முக்கியத்துவம் கொடுத்து அழைத்தது, போன்றவை பா.ஜ.க.வினரைக் குஷிப்படுத்தி ரொம்பவே அம்மாவுடன் நெருக்கிவிட்டது.

ஆனால் இவற்றையெல்லாம் விட, சட்டமன்றத்தில் பா.ஜ.கவின் செயல்பாடுகள்தான் கழகத்திற்கு ஆத்திரத்தைத் தூண்டி விட்டன. 'அம்மா ஜால்ராவை ஓங்கி அடித்தது மட்டு மல்லாமல் மரபுக்கு மாறான வார்த்தைகளை ஜெயலலிதா பொன்முடிக்கு எதிராகப் பிரயோகப்படுத்தியபோது பா.ஜ.க. கண்டு கொள்ளாமல் இருந்ததுதான் எரிச்சலை மேலும் வளர்த்தது. அதனால் வந்ததுதான் கலைஞரின் அறிவிப்பு!

அம்மாவுக்கு பா.ஜ.கவுடன் நெருங்கி வருவதற்கான அவசரமும் அவசியமும் இருக்கிறது. முக்கியமாக, தி.மு.கவினருக்கு எதிராக போலீஸ் நடவடிக்கைகள் எடுக்கும்போது மத்தியிலிருந்து எந்தவிதமான முணுமுணுப்பும் இருக்கக் கூடாது! அது தவிர, சுமுகமாக இருப்பதன் மூலம் எந்த பிரச்னையுமில்லாமல் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு வேண்டிய நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அடிப்படையில்தான் காய்களை நகர்த்தி பச்சைக் கொடி காட்டியிருக்கிறார் ஜெயலலிதா. உண்மையிலேயே பா.ஜ.க. விருப்பப்படி 'மெஜாரிட்டி அரசியல்' நடத்த அவர் முயன்றால், காலப் போக்கில் தமிழகத்தைப் பொறுத்த வரை பா.ஜ.கவுக்கு இயல்பான கூட்டணி கட்சியாக (சிவசேனை போன்று) அ.தி.மு.க. உருவாகிவிடும். இப்படிப்பட்ட ஒரு நிலையைத்தான் தமிழக பா.ஜ.க. விரும்புகிறது போலும். ஆனால் அம்மாவைப் பொறுத்தவரை தேர்தலுக்குத் தேர்தல்தான் மற்ற கட்சிகளைப் பற்றிக்



க்டர் கிருபாநிதி



• இல. கணேசன்



• லக்ஷ்மணன்

பலியாகிறதா, தமிழக பா.ஜ.க!

கவலைப்படுவார். அப்போது வெற்றிக் கூட்டணி அமைப்பதே அவர் நோக்கமாக இருக்கும். வேறு எதைப் பற்றியும் கவலைப்படமாட்டார். பா.ஜ.கவைவிட காங்கிரஸைத்தான் முதலில் அணுக விரும்புவார்.

இந்த விவகாரத்தின் மூலம் தமிழக காங்கிரஸ் போல, தமிழக பா.ஜ.கவுக்குள்ளும் பல குரல்கள் ஒலிப்பது தெரிய வந்தது. லட்சுமணன், ராஜா போன்றவர்கள் அம்மா பாசத்தோடு இருப்பதும், எல். கணேசன் அறிவாலயத்தோடு உறவு தொடர வேண்டும் என்று நினைப்பதும், 'நானே தலைவர்' என்று கிருபாநிதி அவர் பாட்டுக்கு தமது கருத்துக்களை அள்ளி விடுவதும் நடந்தது. ஆனால் கழகத்தில், கலைஞரைத் தவிர வேறு யாரும் இந்தப் பிரச்னையில் கருத்து சொல்லத் தயங்குகிறார்கள்.

தில்லியில் எந்த பிரச்னையும் கொடுக்காமல் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் தி.மு.கவை இந்த சமயத்தில் பகைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று சில பா.ஜ.க. பிரமுகர்கள் கருதுகிறார்கள். 1998ல் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு பட்ட அவஸ்தையை எப்படி அவர்களால் அவ்வளவு சுலபத்தில் மறக்க முடியும்? 'சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்தபோது பிரதமர் கொடும்பாவியை எரித்தவர்கள் அ.தி.மு.கவினர்தான்' என்பதையும் தமிழக பா.ஜ.கவில் சிலர் தங்கள் வசதிக்கேற்ப மறந்தாலும், கலைஞர் அதைச் சரியாகச் சுட்டிக் காண்பித்திருக்கிறார். தமிழகத்தில் உள்ள சங்க பரிவாரின் கழகத்தில் தமிழக பா.ஜ.க. செயல்படுமானால், நாளை இரு கழகங்களும் அதைக் கைவிட்டுவிடும் ஆபத்திருக்கிறது. இதை உணர்ந்த மத்திய அமைப்பு "பாதுகாப்பாக ஆடுங்கள். எங்களையும் சிக்கலில் மாட்டி வைத்து விடாதீர்கள்" என்று எச்சரித்திருக்கிறது.

வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குள் பா.ஜ.கவை தி.மு.க. கைகழுவி விட்டு, காங்கிரஸுடன் நெருங்க முயற்சி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த இரு கட்சிகளும் நெருங்காமல் இருப்பதற்கு, கலைஞரை பிடிக்காத காங்கிரஸ் கோஷ்டிகள் பயன்படுத்தும் அஸ்திரம் 'ராஜீவ் கொலை விவகாரம்.'

சில சலுகைகளைப் பெற பா.ஜ.க.வுடன் சமரசம் பேசும் அ.இ.அ.தி.மு.கவின் போக்கு காங்கிரஸ் தலைமைக்கு எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது. குறிப்பாக 'பொடோ' விவகாரத்தில் காங்கிரஸ் தரப்பை அம்மா ஆதரிக்காமல் இருந்தது பற்றி காங்கிரஸில் கடும் அதிருப்தி இருக்கிறது. இருந்தும் மேலிடத்தில் உள்ள தமது ஆதரவாளர்கள் மூலம் அங்கும் தகவல் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார் அம்மா. இரு திராவிட கட்சிகளையும் தேசியக் கட்சிகள் தங்கள் வசதிக்குப் பயன்படுத்த விரும்புவதுதான் யதார்த்த நிலை. இரு கழகங்களுக்கும் இது தெரியாமலில்லை! யார் அதிகபட்ச பயன் அடைவது என்பதில்தான் பலத்த போட்டி!

— கௌசி

இனி பிள்ளை வரம் வேண்டி எங்கும் அலைய வேண்டாம்

ஹோமியோ - சித்தா - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பெறலாம்!

குழந்தை இல்லாத தம்பதிகள் பிள்ளைவரம் வேண்டி இனி எங்கேயும் அலைய வேண்டாம். குழந்தை பெறாமைக்கு குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி. ஹோமியோ-சித்தா-ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் ஆண் மலட்டுத் தன்மையும், பெண் மலட்டுத் தன்மையும் அறவே நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறார்கள் டாக்டர் **ஏ.அர்ஜுனா, டாக்டர் வி.ஏ.ஆண்டாள்.** இவர்கள் 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னையில் வடபழனி 100 அடி சாலையிலும் வெற்றிகரமாக சிகிச்சை நிலையங்கள் நடத்தி வருகிறார்கள்.

குழந்தைப் பெற்றுக் கொள்ள சிகிச்சைக்கு வரும் தம்பதிகளை டாக்டர் **ஏ.அர்ஜுனா** முதலில் கணவனின் உயிரணு உற்பத்தியை விந்து பரிசோதனையின் மூலம் குறைபாடுகளைக் கண்டறிகிறார். பிறகு மனைவியின் குறைபாடுகளை சில பரிசோதனைகளின் மூலம் தெரிந்து கொண்டு ஆண் மலட்டுத்தன்மை, பெண் மலட்டுத் தன்மை நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளிக்கிறார்.



• உலகப் புகழ் பெற்ற மருத்துவத் திலகம் டாக்டர் A. அர்ஜுனாவுடன் சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த, உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் தற்போது 6மாத கர்ப்பவதியாக உள்ள திருமதி தமிழரசி - முருகன் தம்பதிகள்.

''சென்னை கோடம்பாக்கத்தில் சம்பத் என்ற நபர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது அவரது விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 70 மில்லியனும், மொட்டிலிட்டி 70%ம் இருந்தது. 2 மாத சிகிச்சைக்குப்பின் விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 142 மில்லியனும், மொட்டிலிட்டி 80% உயர்ந்துள்ளது.

இது முக்கூட்டு மருத்துவத்தில் ஒரு சாதனையாகும்.

சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்த, அறவே உயிரணு இல்லாத ரவி எங்களிடம் சிகிச்சை பெற வந்து 2 மாத முக்கூட்டு மருந்தில், நல்ல முறையில் உயிரணு உற்பத்தியாகியுள்ளது.

கோவை பெரியநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த லோகநாதனுக்கு அறவே உயிரணு இல்லை. அவருக்கு ஒரே மாத முக்கூட்டு மருந்தில் கவுண்ட் 110 மில்லியன், மொட்டிலிட்டி 20% உற்பத்தி ஆகியுள்ளது.

திருவாரூரைச் சேர்ந்த அறிவழகனுக்கு அறவே உயிரணு இல்லை. அவர் 7 மாதம் தொடர்ந்து முக்கூட்டு மருந்து சாப்பிட்டு உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

உயிரணு குறைவாக இருந்த கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த சேதுமாதவனுக்கு 16.6.2000ல் கவுண்ட் 20மில்லியன், மொட்டிலிட்டி 50% இருந்தது. 13.7.2001ல் கவுண்ட் 60மில்லியன், மொட்டிலிட்டு 50% என்று முன்னேற்றம் கண்டது.

மகாராஷ்டிர மாநிலம் நியூபாம்பே வாஷி பகுதியைச் சேர்ந்த ஜெயராமனுக்கு உயிரணு குறைவாக இருந்தது. 28.12.2000ல் இருந்த கவுண்ட் 45 மில்லியன், மொட்டிலிட்டி 50% ஒரே மாதத்திற்குள் 26.1.2001ல் கவுண்ட் 92மில்லியன், மொட்டிலிட்டி 30% என்று உயர்ந்தது.

சென்னையைச் சேர்ந்த, உயிரணு குறைவாக இருந்த ரகுவுக்கு 6.5.2000ல் கவுண்ட் 29 மில்லியன், 50% மொட்டிலிட்டி இருந்தது. எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் அவருக்கு 20.8.2000ல் கவுண்ட் 160 மில்லியன் உயர்ந்தது.

சென்னை வண்ணாரப்பேட்டையில் மனோகரன் என்பவருக்கு 6 மாத முக்கூட்டு சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

காஞ்சீபுரத்தில் கணேசன் என்பவருக்கு சில மாத சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

வேலூரில் சுப்ரமணியன் என்பவருக்கு உயிரணு நார்மல் ரிசல்ட் உண்டாகியிருக்கிறது.

ஆண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்திருந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்

தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், தன்னைவிட வயது முதிர்ந்த பெண்களிடம் தாம்பத்திய உறவு கொண்டாலும் அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்கிறோம்.

பெண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

பெண்களில் கருப்பை ஓவரி வளர்ச்சியே இல்லாமல் இருப்ப வர்களுக்கு வளர்ச்சியடைச் செய்கிறோம். வீட்டு விலக்கு ஒழுங்கில்லாதவர்களுக்கு ஒழுங்குபடுத்துகிறோம். சிலருக்கு வீட்டு விலக்கின் போது வரும் சூதக வயிற்றுவலியால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையை முக்கூட்டு மருந்துகளால் நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருமுட்டை உண்டாக்கி கருவுறச் செய்கிறோம். பெண்களிடமுள்ள பிரதான பெரிய பிரச்னை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி கருத்தரிக்க செய்கிறோம்.

சென்னை புதுப்பேட்டையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தம்பதிகளுக்கு எங்கள் வைத்தியத்துக்குப் பின், இரட்டைக் குழந்தை பிறந்தது.

பெங்களூர் ஜெயநகரைச் சேர்ந்த வள்ளி - சேகர் தம்பதியருக்கு எங்கள் சிகிச்சை மூலம் அண்மையில் பெண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா – அலமேலு தம்பதியர் திருமணமாகி நான்கு வருடங்கள் குழந்தை இல்லாதிருந்து. அவர்களுக்கு முக்கூட்டு சிகிச்சையளித்ததில், திருமதி ராஜா வுக்கு கடந்த 6.3.2001 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது.

பெங்களூரில் வசிக்கும் ஒரு தம்பதியினருக்கு 20 ஆண்டு காலம் குழந்தை இல்லாமல் இருந்து முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் குழந்தை பிறந்துள்ளது. மதுரையைச் சேர்ந்த அரசாங்கத்தில் பணிபுரியும் ஒரு மாவட்ட அதிகாரிக்கு 23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்து எங்களிடம் சிகிச்சை பெற்ற அவரது மனைவிக்கு கடந்த 5.6.2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது.

❍ சென்னை கிண்டியில் கோபால் – சித்ரா தம்பதிகளுக்கு பல ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து எங்கள் முக்கூட்டு சிகிச்சையினால் பெண் குழந்தை பிறந்துள்ளது.

❍ விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அவலூர் பேட்டையில் சந்திரமூர்த்தி தம்பதிகளுக்கு ஆண் மகன் பிறந்துள்ளது.

❍ சென்னை, வடபழனி, கங்கையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த, எங்களிடம் சிகிச்சைப் பெற்ற ஒரு முஸ்லிம் பெண்மணி புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

❍ தஞ்சாவூர் புரசகுடியில் சௌந்தர்ராஜன் வனரோஜா தம்பதிகளுக்கு ஒரு பையன் பிறந்துள்ளது. மீண்டும் வனரோஜா தற்போது கர்ப்பமாக உள்ளார்.

❍ பாண்டிச்சேரி கணபதிபட்டில் சாந்தி செல்வராஜ் தம்பதிகளுக்கு பெண்ணும், பையனும் பிறந்துள்ளார்கள்.

இப்படி எங்கள் சிகிச்சையில் பல ஊர்களில் மாதா, மாதம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், சியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

எங்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்தவர்கள் கர்ப்பமடைந்த பின் 6 மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு என்றார்'' டாக்டர் அர்ஜுனா. சுகப்பிரசவத்திற்கு மருந்து உண்டு என்கிறார் அவர்.

நீங்களும் குறைந்த செலவில் புத்திரபாக்கியம் அடைய டாக்டர் ஏ. அர்ஜுனா, அவரது மனைவி டாக்டர். வி.ஏ.ஆண்டாள் அவர்களை அணுகவும்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம்: எண் 65 நெற்குன்றம் பாதை, (டி.எஸ். கவுரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை - 600 026. போன் : 4833464 எஸ்டிடி.044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் -
வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி.
திருவண்ணாமலை மாவட்டம் - 604 408
போன்: 25208, 26180 எஸ்டிடி. 04183

ADVT

காணாமல் போன சச்சின்!

ஆஸ்கரில் லகான் 'ஊத்திக்கிட்டதே' என்று யாரும் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திக் கொள்ளவில்லை; ஆனால் அந்த அளவுக்கு ஏமாற்றத்தில் தகித்தார்கள். 'எப்படிக் கிடைக்காமல் போகும்?' என்ற தீவிர சோகத்தில் மூழ்கியவர்கள் ஏராளம்; 'கிடைக்க வேண்டுமே' என்று, ஆவேசப் பிரார்த்தனையில் மும்பையிலுள்ள தெய்வங்களை எல்லாம் ஆட்டி வைத்தவர்கள் அனேகம்; ஆமீரே கவலைப்பட்டது போல், 'நோ மேன்ஸ் லாண்ட்' ஆஸ்கரைத் தட்டிச் சென்றுவிட்டதே! 'அதனாலென்ன? ஆஸ்கருக்கு நாமினேட் ஆனதே பெரிய வெற்றி' என்று சந்தோஷிப்பவர்கள் ஒருபுறம்- 'இதுக்கெல்லாம் கிடைக்காதுன்னு முன்னமே தெரியும்; கிரிக்கெட் பத்தின கட்டுக் கதையிது; அவுங்களுக்கென்னத்தைப் புரிஞ்சிருக்கும்' என்று வேதாந்திப்பவர்கள் மறுபுறம் - இடையே, கிட்டத்தட்ட ஆமிருக்குப் பெண் வேஷம் போட்டது போலிருந்த நடிகை Helie Berry, சிறந்த நடிகைக்கான ஆஸ்கரை ஏற்றுக் கொண்டு, கதறோ கதறென்று கதறியது... நடு நடுவே 'இண்டியா இண்டியா' என்று வேறு இறைந்தது... எல்லாமாகச் சேர்ந்துகொண்டு, நமக்கு ஹாலிவுட்டே ஆறுதல் சொல்வது போல் ஒரு பிரமை... ஹூம்! இன்று புளித்துப் போன ஆஸ்கர் கனி நாளை இனிக்காதா என்ன?

இனிக்காமல் என்ன? குண்டுவெடிப்பில் கற்ற பாடம் மனப்பாடமாகிவிட்டது என்ற நிலை, இனிமையாய்த்தானிருக்கிறது. அண்டை மாநிலமான குஜராத்தில் 'குய்யோ முய்யோ' என்று அலறல் கேட்டுக் கொண்டிருக்க, இங்கே எல்லோரும் அமைதிப் புறாக்களாகச் சிறகடிப்பது சந்தோஷமான சமாசாரம்தானே? ஆனால்... அடுத்தவரை அடிக்க முடியாவிட்டால் என்ன? தன்னைத்தானேயாவது அடித்துக் கொள்வது என்று இறங்கி விட்டார்களே சிலர்? பாருங்களேன்... காட்கோபாரிலுள்ள கஸால்ஃபா கிராமப் பகுதியில் வசித்த ஒருவருக்கும் அங்கிருந்த சிவசேனைக்காரர்களுக்கும் ஏதோ சிறிய தகராறு; உடனே ஷாகா பிரமுக் ராதோட், இன்னும் பல சைனிக்குகளை அழைத்துக் கொண்டு வர,



• சச்சின் கையில் 'அர்ஜுன்' அவார்டு!



• முரளிதரன் கையில் 'சியட்' அவார்டு

• கிடைக்காத ஆஸ்கருக்காக அழுதவர்கள்



விஷயம் முற்றி விடப் போகிறதே என்று மஞ்ச்ரேகர் என்ற 45 வயது சிவசேனைக்காரர் சமரசம் செய்ய முற்பட்டிருக்கிறார். அவ்வளவுதான்; கோபம் இவர் மீதே திரும்ப... மொத்து மொத்தென்று மொத்தியே சாய்த்து விட்டார்கள்!

சாய்த்து விடுவதென்று முடிவு கட்டிவிட்டால், அது அரசாகவே இருந்தாலும்கூட விட்டு வைப்பதில்லை இந்த அரசியல்வாதிகள்! எங்கே ஜனநாயக முன்னணியே சாய்ந்து விடுமோ என்ற பீதி எல்லோருக்கும் கவ்விக்கொண்டுவிட்டது. கூட்டணியில் ஐந்து மந்திரிகளை வைத்துக் கொண்டிருக்கும் பி.டபிள்யூ.பி (பெசண்ட்ஸ் அண்ட் வர்கர்ஸ் பார்ட்டி), என்.ஸி.பி மந்திரியான தத்கரே உடனே பதவி நீக்கம் செய்யப்படாவிட்டால், தங்கள் ஆதரவை வாபஸ் பெற்று விடுவதாக மிரட்டியது. காரணம், ராய் கட் ஜில்லா பரிஷத் பிரசிடெண்ட் தேர்தலில், இவர்கள் நிறுத்தியிருந்த வேட்பாளரை ஆதரிக்காமல், தத்கரே சிவசேனைக்கு வோட்டுப் போட்டு, அவர்களை ஜெயிக்க வைத்துவிட்டார்! பதிலுக்கு ஒரு என்.ஸி.பி வேட்பாளரை அவர்கள் வைஸ்-பிரசிடெண்ட் ஆக்கி விட்டனர். கொதித்துவிட்டது பி.டபிள்யூ.பி. நாற்காலிகள் ஆடத் துவங்கவும், பூஜ்பல் வேறு வழியில்லாமல் தத்கரேயை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டார். "ஐயகோ... ராய்காடில், என்.ஸி.பியை வேரூன்றச் செய்த தந்தை தத்கரே" என்று இப்போது என்.ஸி.பிகாரர்களே போர்க்கொடி உயர்த்துகிறார்கள். விலாஸ்ராவ் தேஷ்முக்கும் புஜ்பலும் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' பாடிக்கொண்டே நாற்காலிகளில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.



• கிடைத்த ஆஸ்கருக்காக அழுதவர்

ஆடிக் கொண்டிருப்பவர்களுக்கு முடி சூட்டுவதென்பது 'சியட்'டுக்கு கைவந்த கலை; மரகதத் தீவின் மாணிக்கமான முத்தையா முரளீதரனை, சென்ற ஆண்டின் சிறந்த இண்டர்நேஷனல் கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுத்து கௌரவித்தது. பிரபோர்ன் ஸ்டேடியத்தில் நடந்த விழாவில், விஸாரேயும் சேகர் சுமனும் அறிவிப்பாளர்களாக தூள் கிளப்பினார்கள். அங்கே குழுமியிருந்த நட்சத்திரக் குவியலைக் கண்டவர்களுக்கு, இப்போதெல்லாம் விளையாட்டில் அரசியல் கலப்பைவிட பாலிவுட் கலப்புதான் அதிகம் என்பது புரிந்திருக்கும். பார்வையாளர்கள், விருதை சச்சினுக்கு அறிவித்தவுடன் கூட்டத்தில் ஒரே எதிர்பார்ப்பு; ஆனால் பரிசை வாங்க வந்தது என்னவோ சச்சினின் உடன்பிறப்பு! சச்சின் தான், தன் குழந்தை இரண்டரை வயது அர்ஜுனின் 'ப்ரே ஸ்கூல்' நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டாரே! அங்கு வந்திருந்த மற்றொரு நட்சத்திர அப்பா 'ஷாருக்கான்'! சச்சினின் மனைவி அஞ்சலி, பெருமையாக, "காலையிலிருந்து இவர் குழந்தைக்கு ட்ரெஸ்ஸெல்லாம் பண்ணிவிட்டார்" என்று பூரித்துக் கொண்டிருந்தார். குழந்தை நடித்தது பட்டாம் பூச்சியாக!

பட்டாம் பூச்சி போல் பறந்து, சுழன்று ஆடினாள் அந்தப் பெண் - ஒரு பத்து நிமிடத்துக்கு ஒரே குலுக்கலும் மினுக்கலுமாக! அரங்கத்தில் ஒரே கைதட்டல், விசில்! மூவேந்தர் நாடக மன்றம் காளிதாஸ் ஹாலில் அரங்கேற்றிய 'எல்லாமே வேஷம்தான்' நாடகத்தில், கதாநாயகன் 'லேடீஸ் பாருக்கு போவதுபோல் ஒரு காட்சி; அதற்கு உண்மையிலேயே ஒரு பார் நடனக்காரியை அழைத்து வந்து விட்டார்கள்! நாடகத்துக்குக் கூட்டம் வரவழைக்க இப்படியும் ஒரு யுக்தி!

- ஜெய்ஸ்ரீ ராஜ்

புக்பேங்க்

நாஸ்டர்டாமஸின் தீர்க்கதரிசனங்கள்



பைபிளுக்கு அடுத்தபடியாக, அதிகமாகத் தொடர்ந்து அச்சாகிக் கொண்டிருக்கும் புத்தகம் இது. நானூறு வருடங்களாக உலகின் பல முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி அவை எவ்வாறு எப்படி நடக்கப் போகின்றன என்பதை முன்பே கணித்துச் சரியாக எழுதியிருக்கிறார் என்று நாஸ்டர்டாம்ஸ் பற்றிச் சொல்லப்படுகிறது. அமெரிக்காவின் டுவின் டவர்ஸ் இடிந்து விழுந்ததற்குப் பின் இவரைப் பற்றிய ஆர்வம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை _ 17. விலை ரூ. 36/-

நேற்றின் நிழல்கள் _ மாலன்

வார இதழ் ஒன்றில் தொடராக வெளி வந்த கட்டுரைகள். ஒவ்வொரு செய்திக்குப் பின்னும் வரலாறைத் தோண்டித் துருவி ஆசிரியர் தந்திருக்கும் தகவல்கள் ஆச்சர்யமூட்டுகின்றன. வாசிக்க வேண்டிய நூல்.

பூஞ்சோலைப் பதிப்பகம். ஜி 3/8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார். தி. நகர் சென்னை - 17. விலை ரூ. 65.

ரோஸ் _ இரா. நடராசன்






'ஆயிஷா' கதை மூலமும் குறும் படம் மூலமும் ஏராளமான பாராட்டுகளைப் பெற்ற ஆசிரியரின் இந்த குழந்தை நாவல் (நாடகம்?) சமூக அக்கறையோடு எழுதப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் உள்ளங்களை மக்கிப் போகச் செய்கிற பெற்றோர் மற்றும் ஆசிரியரின் அறியாமையை ஆவேசத்தோடு சுட்டிக் காட்டுகிறது இந்நூல். விலை ரூ. 40.

எங்கும் வானம் – காவேரி

தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளில் எழுதிவரும் எழுத்தாளர்களில் காவேரியும் ஒருவர். அவரது எட்டு சிறுகதைகளும், ஒரு குறுநாவலும் அடங்கிய தொகுப்பு இது.



காவ்யா, 14, (34) முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம். சென்னை _ 24. விலை ரூ. 60/-

அபிவிருத்தீஸ்வரம் _ முருகன்

மண் மணத்தோடு வருகின்ற கவிதை தொகுப்புகளில் குறிப்பிடப்படும்படியாக அமைந்திருக்கிறது இத்தொகுப்பு. நகரம் வருகின்ற கிராமத்துக் கவிஞர்கள் தத்தம் நெஞ்சுக்குள் கிராமத்தையும் சுமந்து கொண்டே வருகிறார்கள் என்பதற்கு முருகனின் இத்தொகுப்பு எடுத்துக்காட்டு. போலித்தனமில்லாத இயல்போடு பேசுகிறது ஒவ்வொரு கவிதையும்.

பல்லவி பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை – 78. விலை ரூ. 15/-

அழகி

இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய வரப்பிரசாதம்!

SWETHA walker HEALTH FITNESS MACHINE

அலுவலகம் செல்லும் சகோதர, சகோதரிகள் நிறைய பேருக்கு காலையில் walkiing போக நேரம் கிடைப்பதில்லை. அப்படியே நேரம் கிடைத்தாலும் சென்னை போன்ற பெருநகரங்களில் எந்தவித இடையூறும் இல்லாமல் நடந்து போகக் கூட சாலைகளில் இடமில்லை. வீட்டில், தோட்டத்தில், முக்கியமாக அடுக்குமாடி குடியிருப்புகளில், மாடியில் எங்கு வேண்டுமானாலும் ரிலாக்ஸ்டாக எந்த தொந்தரவும் இல்லாமல் ஹாயாக நடப்பதற்கு ஒரு புதிய இயந்திரம் ஸ்வேதா வாக்கர். காலை (அ) மாலை சுமார் 10 நிமிடம் பயிற்சி செய்தால் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்த பலன் கிடைக்கும். உபயோகிப்பது மிகவும் சுலபம். இயந்திரத்தை மடித்து எங்கும் வைத்துக் கொள்ளலாம். தயாரிப்பு விலையில் ஒரு வருடம் உத்திரவாதம் தருகிறோம்.

மேலும் விபரங்களுக்கு ☎ **484 7701**

Sunday holiday **Timing: 9 a.m - 7 p.m**



ASIAN ENTERPRISES

Mfrs of: Health Fitness Machine & Office Filing Systems

25, Perumal Koil South 1st Cross Lane, Vadapalani, Chennai - 26.

விற்பனை ஆர்வமுள்ளவர்கள் அணுகவும்

DISCOUNT SALE



RANI. V. SUNDARRAO
FOUNDER OF
"RANEE SAREES"

ஸ்ரீ :

சென்னை தி.நகர்

ராணி சாரீஸின்

தள்ளுபடி விற்பனை


01.04.2002 முதல் 07.04.2002 வரை

✣ ராணி சாரீஸ் புடவைகள் ✣ கைத்தறி புடவைகள்
✣ மற்றும் அனைத்து ரக ஃபேன்ஸி புடவைகள் ✣ வேஷ்டிகள்

RANEE SAREES

Exclusive Shopee

Gold Crest Complex, 1st Floor, 54-55, North Usman Road,
Opp. Saradha Vidhyalaya School, (Near Petrol Bunk), Panagal Park,
T.Nagar, Chennai - 17. Ph. : 8217308, 8217309





2002 ஏப்ரல் 7
விஷு பங்குனி 24
மலர் : 60
இதழ் : 36

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பொடோ : கூட்டணி கட்சிகளின் பொறுப்பு!

இன்றையச் சூழலில் பொடோ சட்டம் அவசியமற்றது என்று சொல்வது ஆபத்து. செப்டம்பர் 11 சம்பவங்களுக்குப் பின், அனைத்து நாடுகளிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் வரையப்பட வேண்டும் என ஐ.நா. சபையே வலியுறுத்தியிருக்கிறது. ஆனால் எதிர்க் கட்சிகள் அச்சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றன.

'பொடோ அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும்' என்பதை காங்கிரஸின் முதல் ஆட்சேபணையாக முன் வைத்திருக்கிறார் சோனியா காந்தி.

'சிறுபான்மையினருக்கு எதிராக அதனை துஷ்பிரயோகம் செய்யும் போக்கு ஏற்கெனவே தென்படுகிறது' என குஜராத் கொடுமைகளை உதாரணமாகச் சுட்டிக் காட்டுகிறார். கோத்ராவில் சபர்மதி எக்ஸ்பிரஸ்ஸை எரித்த சிறுபான்மை இனத்தவர் மீது மட்டும் பொடோ பிரயோகிக்கப்பட்டிருப்பதையும் வன்முறைக் கொடுமைகள் இழைத்த ஹிந்து அடிப்படைவாதிகள் பேரில் தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்கப் படாததையும் முன் வைத்து காங்கிரஸ் வாதாடுவதை வரவேற்கலாம்.

அந்த வாதத்துக்கு வலு சேர்க்கும் வகையில் மனித உரிமை கமிஷன் குஜராத்தில்



சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெற்ற குரூரங்களைக் கண்டித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

ஆகவே, பொடோ விவாதங்களின்போது, 'பரிவார் அமைப்புகளிடம் பிரதமர் மண்டியிட்டுவிடக் கூடாது!' என்று சோனியா எச்சரித்தது நியாயம்தான்.


இந்த எச்சரிக்கையைத் தனிப்பட்ட முறையிலான தாக்குதலாகக் கருதி பிரதமர் பதில் கூறுயிருப்பதுதான் ஏற்புடையதாக இல்லை.

கடந்த ஒரு மாத காலமாக அயோத்தி விவகாரத்திலும் அதைத் தொடர்ந்த நாடு தழுவிய விளைவுகளிலும் பி.ஜே.பி. நடுநிலையாகச் செயல்படவில்லை. வி.எச்.பி, பஜ்ரங் தள், ஆர்.எஸ்.எஸ். போன்ற ஹிந்து அடிப்படைவாத அமைப்புகளுக்கு ஆதரவாகத்தான் செயல்பட்டிருக்கிறது. எனவே, சோனியா காந்தி எதிர்ப்பும் கவலையும் தெரிவிப்பதில் ஆச்சர்யமில்லை.

அந்த எதிர்ப்புக்கும் இதர எதிர்க் கட்சியினரின் எதிர்ப்புக்கும் நம்பிக்கையூட்டும் பதில் வாதங்களை முன் வைக்க, மத்திய அரசு முன் வராததுதான் ஏமாற்றம்.

'என்னைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினால் சும்மாயிருக்க மாட்டேன்!' என்று பிரதமர் எகிறுவதும் நவாஸ் ஷரீபைச் சந்திக்கும்படி அமெரிக்க அதிபர் கிளின்டன் கேட்டபோதுகூட தாம் பணியவில்லை என்று பெருமை பேசுவதும் ரசனைக் குறைவாக உள்ளன.

கிளின்டன் சொல்வதைக் கேட்கிற கட்டாயம் வாஜ்பாய்க்குக் கிடையாது. ஆனால் சங் பரிவார் அமைப்புகளுடன் இங்கே அவர் ஒத்துழைக்காவிட்டால் அடுத்த தேர்தலில் பி.ஜே.பி. பெறக்கூடிய வோட்டுகள் பாதிக்கப்படும். இது சோனியாவுக்குத்



தெரிவதால்தான் எச்சரிக்கிறார்; வாஜ்பாய்க்குத் தெரிந்தாலும் தெரியாததுபோல் பேசுகிறார்.

பொடோவுக்கு ஓர் அவசியம் இருக்கிறபோது அந்த அவசியத்தின் தீவிரத்தை முன் வைத்துத்தான் அச் சட்டத்தை ஆட்சியினர் நியாயப்படுத்த வேண்டும். 'சட்டத் தைப் பிரயோகிப்பதில் நடுநிலை காக்கப்படும்; பயங்கரவாதத்துக்கு எதிராக மட்டுமே அது பிரயோகமாகும்' என்று உறுதியளித்து எதிர்க்கட்சியினருக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் நம்பிக்கையூட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் சிறுபான்மை யினரும் நம்பிக்கை பெறுவார்கள்; எதிர்க் கட்சியினரும் அடங்கிப் போவார்கள்.


உலகளாவிய பயங்கரவாதத்தின் ஊடுருவல் நம் நாட்டிலும் நிகழ்ந்து இங்கேயுள்ள அடிப்படைவாதிகளின் கரங்களைப் பலப்படுத்தியிருக்கிறது. அதை எதிர் கொள்ளவும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பொடோ போன்ற சட்டம் தேவைதான். துஷ் பிரயோகமாகக் கூடும் என்ற ஒரே காரணத்துக்காக அதனை நிராகரிக்கலாகாது. காவல் துறையின் அதிகார மமதையாலும் அத்துறைச் செயல்பாட்டில் நிகழும் அரசியல் தலையீடினாலும் ஏற்கெனவே நிறைய சட்டங்கள் துஷ்பிரயோகம் ஆகிக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆட்சியில் இருப்பவர்களின் நேர்மையும் தார்மிகப் பண்புகளும்தான் எத்தகைய சட்டத்தையும் சரிவர பிரயோகிக்கவும் மக்களைக் காக்கவும் உதவும். நல்லவேளையாக, இன்றைய மத்திய அரசில் பி.ஜே.பி. தவிர தெலுங்கு தேசம், தி.மு.க. போன்ற ஹிந்துத்வா தொடர்பற்ற கட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

பொடோ துஷ்பிரயோகமாகாமல் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு இந்தக் கட்சிகளுக்குத்தான் மிக அதிகம். O

ஈகோவை உதறினால் எவரெஸ்டை அடையலாம்!

''சென்னை என்ன... உலகத் தரத்துக்கு ஒப்பான கல்வியை திருவண்ணாமலைக்கே கொண்டு வருவேன்'' என்று உழைத்துக் கொண்டிருப்பவர் எ.வ.வேலு. அரசியல்வாதியாகவும் மற்றொரு முகத்தை வைத்திருக்கும் வேலுவைக் கொஞ்சம் ஊடுருவிப்பார்க்கலாமா!





வேலுவுக்குச் சொந்த ஊர் தண்டராம் பேட்டு அருகிலுள்ள சே. கூடலூர் கிராமம். அப்பா விவசாயி. ''பள்ளிக்கூடம் படிக்கும் போதே கலைஞர்கிட்டே ஒரு குரு மரியாதை. காரணம் அவரது தமிழ். என் சொந்தக்காரர் ஒருவர் தி.மு.க. அவர் வீட்டுக்கு 'முரசொலி', 'முத்தாரம்' பத்திரிகைகள் வரும். அதில் வரும் கவிதை, கட்டுரை, நாடகங்களைப் படித்து கலைஞர் மீது பித்தாகிப் போனேன். இத்தனைக்கும் அப்பா காங்கிரஸ்காரர்'' என்கிறார் வேலு.

தன் பள்ளித் தோழர்களைச் சேர்த்துக் கொண்டு பதின்மூன்று வயதிலேயே மேடையேறி விட்டார் வேலு. நாடக மேடை அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. கலைஞரின் நாடகங்களை, திருவண்ணாமலை மற்றும் சுற்றுவட்டாரங்களில் அதே பெயரில் நடத்திக் காட்டினார். 'நீதியின் தீர்ப்பு', 'கள்வனா?' ஆகியவை வெகு பிரபலம்.

ஒருமுறை பாண்டிச்சேரியிலிருந்து நடிகை ஒருவரை நடிக்க அழைத்திருந்தார்கள். நாடகம் முடிந்த பிறகு சம்பளம் கொடுக்க பணமில்லை. கையில் கட்டியிருந்த 'கெமி' வாட்சை மார்வாடியிடம் விற்று அந்த நடிகையை பஸ் ஏற்றிவிட்டார் வேலு.

அன்றிலிருந்து கையில் கடிகாரம் கட்டுவதையே விட்டு விட்டார். இன்று வரை அதுதான் நிலை! கலைஞர் 'தூக்குமேடை' என்று நாடகம் போட்டால், இவர் 'எனக்கா தூக்கு?' என்று நாடகம் போடுவார். 1967 தேர்தலையொட்டி, 'இன்றைய எமதர்மன்'

என்று காமராஜைக் கிண்டல் செய்து ஒரு நாடகம் போட்டார். அவர் அப்பாவுக்கு வந்ததே கோபம், மகனை வீட்டை விட்டே வெளியேற்றிவிட்டார்!

"அவர் வெளியேற்றியது கூட நல்லதாகப் போச்சுங்க... ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் கிடைத்த அனுபவங்கள் இன்று வரை வாழ்க்கையைச் செழுமைப் படுத்த உதவியிருக்கின்றன" என்கிறார் வேலு. தனியார் பஸ் கம்பெனியில் செக்கிங் இன்ஸ்பெக்டர், லாரி டிரான்ஸ்போர்ட், அச்சகம் எனறு பல தொழில்கள். கூடவே உள்ளூர் அரசியலிலும் கால் ஊன்றத் துவங்கினார். அப்போது திருவண்ணாமலை வட்டாரத்தில் தி.மு.க. என்றால் ப.உ. சண்முகம் வைத்தது தான் சட்டம். வேலுவுக்கும் அவருக்கும் சரிப்பட்டு வரவில்லை. அந்த சமயம் பார்த்து எம்.ஜி.ஆர். கழகத்தை விட்டுப் பிரிந்து தனிக்கட்சி துவங்கவே ப.உ.ச. மீதிருந்த கோபத்தில் எம்.ஜி.ஆருடன் இணைந்து விட்டார். "கலைஞர் மேல அப்போ எனக்கு எந்தக் கோபமும் கிடையாதுங்க."

தண்டாரம்பேட்டு தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது 1984.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு ஆறேழு வருடங்கள் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கியே இருந்தார் வேலு. அந்தக் கால கட்டத்தில் சினிமா விநியோகஸ்தர், தயாரிப்பாளர் என்ற அவதாரம் எடுத்துவிட்டார். அப்போது சம்பாதித்த பணத்தை வைத்து சொந்த ஊருக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்ற வெறியில் துவங்கியது தான் அருணை பொறியியல் கல்லூரி. கல்லூரிக்கு ஜெயலலிதா பழைய ஆட்சிக் காலத்தில் நிறையவே குடைச்சல்கள். எல்லாவற்றையும் நீதிமன்றம் சென்று சமாளித்தார் வேலு. இந்த எட்டு வருட காலத்தில் இரு பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், பெண்கள் கலை அறிவியல் கல்லூரி, பள்ளிக் கூடம் என்று வேலுவின் முயற்சி கிளை விட்டிருக்கிறது. கல்வியின் தரத்திலும், வசதிகள் செய்து கொடுப்பதிலும், கொஞ்சம் கூட சமரசம் செய்து கொள்வது கிடையாது.

இந்தியாவில் எல்லா பொறியியல் கல்லூரிகளும் தேசிய தொழிற்கல்வி கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுத்தான் துவக்கப்படுகின்றன. ஆனால் அதற்கு மேலேயே National Board of Accreditation என்ற உயர் அமைப்பின் அங்கீகாரத்தை மூன்று பாடப் பிரிவு வகுப்புகளுக்குப் பெற்ற முதல் சுயநிதி பொறியியல் கல்லூரி அருணை கல்லூரி தான்.

காற்றாடி உயரே பறந்தாலும், நூல் கண்டு விடுபவர் கையில் இருப்பதுபோல வேலுவின் வேர் கிராமிய மண்ணில்தான் இன்னமும் இருக்கிறது. "இன்றைக்கும் உழுவது முதல், அறுவடை வரை எல்லா விவசாய வேலைகளையும் செய்வேன்" என்கிறார்.

2001ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பாக தண்டாரம்பேட்டு தொகுதியில் நின்று வெற்றி பெற்றார் வேலு. "இன்றைக்கு எம்.ஜி.ஆர். தொண்டர்கள் அனைவரும் கலைஞர் தலைமையில் அணி வகுக்க வேண்டும். எம்.ஜி.ஆரைவிட கலைஞரை அணுகி கருத்துப் பரிமாற்றம் செய்வது எளிது" என்கிறார் வேலு.

மாவட்ட தி.மு.க. செயலாளராகவும் இருக்கும் வேலு, கரை வேட்டி கட்டிக் கொண்டு கல்லூரிக்குள் வருவதில்லை. வளாகத்துக்கு வெளியிலேயே அவரது அரசியல்வாதி முகம் கழற்றி வைக்கப்பட்டு விடுகிறது. கேட்டை அடைந்தவுடன் டிரைவர் ஞாபகமாக கீழே இறங்கி முன்னே இருக்கும் கழகக் கொடியை எடுத்து காரினுள் வைத்த பிறகே வண்டியை கல்லூரிக்குள் விடுகிறார்.

சந்திப்பு: **ஸ்ரீநிவாசன்**

"உன் வீட்டுக்காரியை 'பபிள்கம்'னு சொல்றியே... கோவிச்சுக்கமாட்டாளா?!"

"மாட்டாள். 'ஜவ்வு மிட்டாய்'னு சொன்னால்தான் கோவிச்சுப்பா!"

— கேஜி.எஸ். கோவிந்தன்



● தமிழினியன்

ஒற்றை ரூபாய்



சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம்.

"யா... அல்லாஹ்... இனி என்னால் முடியாது இறைவனே. நீதான் இந்த அறியாப் பெண்ணின் மனத்தை ஆறப்படுத்த வேண்டும்."

கால் சோர்ந்துபோன அப்துல்லா, படைத்தவனைத் துதித்தவராய் உட்கார இடம் தேடினார்.

விமானம் புறப்பட்டு விட்டபடியால் வழியனுப்ப வந்த கூட்டம் கலைந்து பிளாஸ்டிக் நாற்காலிகள் காலியாய்க் கிடந்தன.

"அல்ஹம்துலில்லாஹ்" என்று உட்கார்ந்தார்.

அதோ... கம்பிக் கிராதியோடு கிராதியாய் ஒன்றிப்போன அபிதா - அவரது மகள்.

அழுது சிவந்த கண்கள். கண்ணீர்த் தடம் பதிந்த கன்னங்கள். பரிதாபமாய்த்தான் இருந்தது அவளைப் பார்க்க.

என்ன செய்ய முடியும்?

பாரதத்தில் பாதிபேர் பிழைப்பு வெளி நாட்டில்தானே இருக்கிறது!


அவரது மாப்பிள்ளை ஹாஜாவுக்கு ரியாத்தில் வேலை. இரண்டு மாத லீவில் வந்தவன் அபிதாவின் அன்புக் கணவனா னான். புது மணத் தம்பதி. முழுசாய் ஒரு மாதம்கூட தேனிலவு அனுபவிக்கவில்லை. மீண்டும் பறந்துபோய்விட்டான். பிரிவுக் கொடுமை. பேதை மனம் தவிக்கத்தானே செய்யும்.

அவன் கைக்குட்டையால் கையசைத்து மறைந்த அவ்வழித் தடத்தையே விழி கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள், அபிதா.

''இப்படி நின்னுட்டே இருந்தால் ஹாஜா வந்துடு வானாம்மா. வாம்மா, ஊருக் குக் கிளம்பலாம்.''

''எல்லோரும் போயிட் டாங்க. சவுதி ஃபிளைட் டுக்கு வந்தவர்களில் நாம் மட்டும்தான் பாக்கி.''

மகளை அங்கிருந்து





"என்னடி இது, நம்ம சரோ எதுக்கு நவகிரஹத்தை ரிவர்ஸிலேயே சுத்தி வரா?"

"வலம் வரும்போது ஏதோ ஞாபகமா பத்து தரம் சுத்திட்டாளாம். ஒரு பிரதட்சணத்தை மைனஸ் பண்ணுறா!"

- ஒழவெட்டியார்

நகர்த்த அரைமணி நேரமாக என்ன வெல்லாமோ சொல்லிப் பார்த்தார், அப்துல்லா. ஆனால், கம்பியைப் பிடித் திருந்த அபிதாவின் கை இம்மியும் தளரவில்லை.

பாவம். பெரியவரால் அதற்குமேல் பேசவோ நிற்கவோ முடியவில்லை.

இறைவனிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு உட்கார்ந்து விட்டார், அவர்.

அப்போது,

"சார், எக்ஸ்க்யூஸ் மீ..."

யாரோ ஒரு நடுத்தர வயதுக்காரர். சட்டையை உள் இட்டு மடிப்புக் கலையாத பேண்ட்டுடன் செழிப்பாய் இருந்தார்.

"ம்... என்ன?"

"அவசரமாய் வீட்டுக்கு ஃபோன் பண்ண ணும். உங்களிடம் ஒற்றை ரூபாய் நாணயம் இருந்தால் கொடுங்களேன், ப்ளீஸ். இங்கே ரூபாய் நோட்டுக்கு யாரும் சேஞ்ச் கொடுக்க மாட்டேங்கிறாங்க."

பிச்சையைவிட மோசமாய்க் கெஞ் சினார் அவர். இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலை சகஜம்தான். ஏன்... அப்துல்லாவே கூட தவித்திருக்கிறார் ஒற்றை ரூபாய் இல்லாமல்.

பேண்ட் பாக்கெட்டைத் துழாவியவர், என்னவோ நினைத்தவராய், "அபிதா... உன்னிடம் ஒரு ரூபாய் காயின் இருக் காம்மா..." என்று கேட்டார் பத்தடி தொலை வில் நின்ற மகளிடம்.

"ஏன்...?" சட்டென்று திரும்பி கோப மாய்த் தந்தையைப் பார்த்தாள் அவள்.

புரிந்து கொண்ட அப்துல்லா, "சார்... ஃபோன் பேசணுமாம். என்னிடம் ஒற்றை ரூபாய் இல்லே... அதனால் உன்னிடம் கேட்கலாமென்று..."

"ஆமாம் மேடம். ப்ளீஸ். அவசரமா ஒரு விஷயம் பேசிட்டு. நான் மலேஷியா பிளைட்டைப் பிடிக்கணும்."

அபிதாவின் முகமும் மனமும் இளகியது. கைப்பையைத் திறந்து ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

"தாங்க் யூ மேடம். தாங்க் யூ வெரி மச். தாங்க்யூ சார்."

அரக்கப் பறக்க ஓடினார், அப்பிரயாணி.

புன்னகை சிந்த அதை வேடிக்கை பார்த்த அபிதா, "வாங்க அத்தா போகலாம்" என்றாள். கணவனின் பிரிவால் உண்டான கனம் இப்போது இலேசாகி இருந்தது.

அப்துல்லாவுக்கு ஏக மகிழ்ச்சி.

மகளுக்கு மனசாறிவிட்டது என்பதால் மட்டுமல்ல. அதுக்குக் காரணமாய் அவள் மனத்தைத் திசை திருப்பிய தமது சாமர்த் தியத்தையும் எண்ணி அவர் பூரித்தார்.

அவரிடமும் ரூபாய் நாணயம் இருந்தது. ●

"கேடி கபாலிக்கு ரொம்பத்தான் இடம் கொடுத்திட்டீங்க ஸார். வி.ஆர்.எஸ். வாங்கிக்கிறேன்றான்!"

"வாங்கிட்டுப் போகட்டுமே, அதுக் கென்னயா?"

"பிரிவு உபசார விழாவுக்கு நீங்கதான் தலைமை தாங்கணும்னு கேட்கறான், ஸார்!"

- இரா. கணேசன்



KALKI SHOPPING PAGE

PGC

போன் : 21540

கவரிங் நகையின்
தனி உலகம்

பன்னீர்
கோல்டு கவரிங்

எங்களிடம் 1 கிராம், 1/2 கிராம், 1/4 கிராம் தங்கம் கலந்த செயின், வளையல், கம்மல், நெக்லஸ், ஆரம், கேரண்டி உடன் கிடைக்கும் மற்றும் சுபவிசேஷங்களுக்கு தேவையான கவரிங் நகைகள் வாடகைக்கு கிடைக்கும்.

1/10, 1/11, 2 வட ஒத்தவாடை தெரு, (பெரிய கோபுரம் வடக்கு புரம் & இரட்டைப் பிள்ளையார் கோவில் அருகில்), திருவண்ணாமலை.

அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

J.திவ்யநாதன்

சிற்ப ஆசிரியர்.

✆ : (04175) 24615, 24993

அனிதா கிராப்ட் சென்டர்

கல்லிலும் மரத்திலும் - கதவில் சித்திர வேலைப்பாடுகள், சூரிய பலகை, கெஜலக்ஷ்மி, அன்ன பறவை, திருகுடும்பம் பூ டிசைன், அருவகால் மற்றும் கதவு பூ டிசைன் மற்றும் பச்சைக்கல், மாவுகல், வெள்ளேருக்கு வேர், சந்தன கட்டை சோப்பு, சாமி சிலைகள் மற்றும் வீட்டு அலங்கார பொருட்கள் ஆர்டரின் பேரில் சிறந்த கலைஞர்களை கொண்டு சிறந்த முறையில் செய்து தரப்படும் கைராசி நிறுவனம்.

Showroom : First Toys Store, 1, Then Othavadai Street, Thiruvannamalai - 606 601.
Factory : Sho Kilnachipattu, Tindivanam Road, Thiruvannamalai - 606 611.

DSM

✆ : 21135, 22479
Fax : 04175-22311

ஸ்ரீ சரவணா லாட்ஜ் A/c
ஸ்ரீ சரவணா டூர்ஸ் & டிராவல்ஸ்

கார், வேன், சுமோ, குவாலீஸ், பஸ் வாடகைக்கு கிடைக்கும்.

கிளை
சென்னை, கோவை, கொச்சின்

78, சன்னதி தெரு,
திருவண்ணாமலை -1
E-mail : sivadsm@yahoo.com

கஸ்டமர் சர்வீஸ் 14.04.1960

சல்வார் சூட், சோலிகள் சரியான நேரத்தில் பொருத்தமாகவும் தைத்துக் கொடுக்கப்படும்

சல்வார் ரூ. 75.00
சுடிதார் ரூ. 90.00

A ONE

லேடீஸ் டைலர்,
313, பூந்தமல்லி ஹைரோடு,
அமைந்தகரை,
சென்னை - 29.
போன் : 6472119

தொப்பைக்கு குட்பை!

கூட்டணி அமைப்பதில் பல படா படா கட்சிகளே அங்கிட்டும் இங்கிட்டுமாகத் தடுமாறிக் கொண்டிருக்க, எல்லா கூட்டுக்கும் சர்வசாதாரணமாக வாசனை கூட்டி விடுகிறது கறிவேப்பிலை.

'கமகம' மணம் இதனுடைய ஸ்பெஷாலிடி என்றால் மருத்துவ குணம் சூப்பர் ஸ்பெஷாலிடி!

ஜீரண உறுப்புகளில் ஏதாவது சில்லறைப் பிரச்னை என்றால்கூட பசி மந்தப்படும். செரியாமை ஏற்படும். இப்படியொரு ஸ்டார்டிங் டிரபிள் இருந்தால், அது பின்னாளில் மெகா வியாதிகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டுவிடும். அதற்கு சின்ன டிப்ஸ்! கைப்பிடியளவு கறிவேப்பிலையுடன், சுட்டபுளி, இந்துப்பு, நான்கு மிளகு இட்டு மைய அரைத்து, துவையலாக்கவும். இதை, சூடான சாதத்திலிட்டுப் பிசைந்து நல்லெண்ணெய் விட்டு, சாப்பிட, ஜீரணக் கோளாறுகள் நீங்கும். நல்ல பசியெடுக்கும். தினமும் துவையல் அரைக்க நேரமிருப்பதில்லை என்பது தானே உங்கள் புகார்! சரி, கறிவேப்பிலைப் பொடி தயார் செய்து கொண்டு விடுங்கள். அதே காம்பினேஷன்தான். ஆனால் புளி தேவையிருக்காது. கறிவேப்பிலையைச் சுத்தம் செய்து, நிழலில் காய வைத்து, பொடித்துக் கொள்ளவும். மிளகு, உப்பு, சீரகம், சுக்கு சேர்த்து பொடியாக அரைத்துக் கொண்டால் தேவைப்படும் போது, சாதத்தில் பிசைந்தோ, இட்லி, தோசைக்குத் தொட்டுக் கொண்டோ சாப்பிட, பெருஞ்சுவையாக இருக்கும். அதோடு, வயிறை உறுதியாக்கி, பசியைத் தூண்டும்.

நீரிழிவுக்காரர்கள் தினமும் ஒரு பெரிய தம்ளர் மோரில், அரை டேபிள் ஸ்பூன் கறிவேப்பிலை விழுதைச் சேர்த்து சாப்பிட்டால், சர்க்கரை நோய் கட்டுப்படும்.

ஜுரம் வந்த வாய்க்கு எதுவுமே ருசியாக இருக்காது. என்ன சாப்பிட்டாலும் தவிடு சாப்பிட்டது போல இருக்கும். அரை டீஸ்பூன் ஓமம், அரை டீஸ்பூன் சீரகத்துடன், கறிவேப்பிலை சிறிது, உப்பு, புளி, வெல்லம் என எல்லாமே ருசிக்குத் தக்க அளவில் சேர்த்து இடித்து, சிறு உருண்டைகளாக்கிச் சாப்பிட்டால் வாய் கசப்பிருக்காது. நாக்கின் ருசி மொட்டுக்கள் ஆரோக்கியமாக இருக்கும்.



'உன் குற்றமா... என் குற்றமா?' என்றெல்லாம் பார்க்காமல, பொதுவாகவே உணவுக் குற்றங்கள் எனப்படும் பித்தம், வாய்வு, மந்தம் மூன்றையும் கறிவேப் பிலை 'ஸ்வாஹா' செய்து விடும் நல்ல இயல்புடையது.

கறிவேப்பிலை சர்க்கை வறுத்து, பெருங்காயத்துடன் சேர்த்து வெந்நீரில் கலக்கி அருந்தினாலே வாய்வுத் தொல்லை சட்டென்று விலகும்.

வயிற்றுவலி, பேதி என வயிறு கொஞ்சம் 'கடமுடா' செய்தால், நான்கைந்து கறிவேப்பிலையை அரை டீஸ்பூன் நெய்யில் வதக்கிச் சாப்பிட்டுவிடுங்கள். கறிவேப்பிலை



மூலிகை கேலரி - 12

ராஜம் முரளி



உள்ளே போனதும் வயிற்றுவலி சமாதானக் கொடியைப் பறக்கவிட்டு, பேதிக்கும் 'ரெட் கார்டு' போட்டுவிடும்!

சிலருக்கு வாய்புண் தொல்லை அடிக்கடி வந்து எரிச்சல் கிளப்பும். சூடாக குடிக்க முடியாது. உரைப்பாக சாப்பிட முடியாது. பேஜார்தான்! ஒரு டீஸ்பூன் கறிவேப்பிலைப் பொடியுடன், ஒரு டீஸ்பூன் கடுக்காய்ப் பொடி சேர்த்து, தேனில் குழைத்துத் தொடர்ந்து சாப்பிடுங்கள். பூரண குணம் தெரியும். வாயெல்லாம் புண்ணாக இருந்த நீங்கள், அப்புறம் வாயெல்லாம் பல்லாகச் சிரிப்பீர்கள்!

தோட்டத்துப் பக்கமாகப் போகிறீர்கள். என்னவோ 'சுள்' என்று பட்டு கை கால் எல்லாம் நமைச்சல். கம்பளிப்பூச்சியா, விஷப் பூச்சியா.. இல்லை ஏதாவது விஷமுள்ளா.. எரிச்சலும், அரிப்பும் அதிகமாகி விடும் நிலையில், அந்த இடத்தை சுத்தமான நீரால் கழுவி, நான்கைந்து கறிவேப்பிலையை நசுக்கி, சாற்றை 'பர பர' என்று பூசுங்கள். எரிச்சல் அடங்கிவிடும்.

டீனேஜ் பருவத்தினருக்கு, பரீட்சையைவிட பயமுறுத்தும் விஷயம் முகப்பரு! முகப்பரு வெடித்தால் ஆர்.டி.எக்ஸ். வெடித்தது போல இளம் பெண்கள் பயந்து அலறுகிறார்கள்.

கறிவேப்பிலை துணையோடு, முகப் பருவை வடுவே இல்லாமல் குணமாக்கலாம். கறிவேப்பிலைப் பொடி ஒரு டேபிள் ஸ்பூன் எடுத்துக் கொள்ளுங்கள். அதனுடன் சோம்புப் பொடி அரை டீஸ்பூன் சேர்த்து, பன்னீர் சில சொட்டு விட்டு, குழைக்கவும். இதை முகப்பரு மேல் பூசி வந்தால், பருக்கள் காய்ந்து உதிர்வதோடு, தழும்பும் விரைவில் மறைந்து விடும்.



குப்பையில் இட வேண்டியதையெல்லாம், இரைப்பையில் இட்டால் தொப்பை விழாமல் என்ன செய்யும்? பார்லி அரிசியைக் குழைய வடித்து, கஞ்சி இறக்கி அதனுடன் ஒரு டீஸ்பூன் கறிவேப்பிலைத் தூள், ஒரு டீஸ்பூன் கொள்ளுத்தூள் கலந்து சாப்பிட்டுப் பாருங்கள். தொப்பை, தன் தப்பை உணர்ந்து இளகிக் கரைந்து விடும்! நான்பட்ட போலீஸ் தொப்பைக்கும் இது பொருந்தும்!

படம் : ஸ்ரீஹரி



''நான் பண்ணின ஆப்ரேஷன்ல உங்க மாமியார் இறந்திருக்கலாம். அதுக்காக என் பேரைப் போட்டு வால் போஸ்டர் ஒட்டி 'நன்றி' தெரிவிக் கிறது கொஞ்சம்கூட நல்லா இல்லே.''

- குருவை
சோலோ செல்வா



''என்ன அந்தப் பையன் நோயற்ற 'வால்வே' குறைவற்ற செல்வம்னு எழுதியிருக்கிறான்?''

''அவன் ஹார்ட் ஸ்பெஷலிஸ்டோட மகனாம்!''

- வி. சகிதா முருகன்

சிரிச்சா என்ன... செலவா ஆகும்?

''படம் முடிஞ்சு வெளியே வர்றவங்க சொல்லிக்கிட்டே போகிற மாதிரி படத்துக்கு டைட்டில் சொல்லுங்க பார்ப்போம்...''

'''சே... இதெல்லாம் ஒரு படமா'னு வையுங்களேன்!''

- வி. சகிதா முருகன்



''ஆச்சர்யமா இருக்கே, பொண் வீட்டுக்காரங்க சொன்ன 'ஜோக்'குக்கு நீ சிரிச்சதுக்காக உன்னைப் பிடிக்கலேன்னு சொல்லிட்டாங்களா!''


''ஜோக்குக்கு குபீர்னு சிரிச்சப்ப பல்செட் கழண்டு கீழே விழுந்து மானத்தை வாங்கிடுச்சு!''

- எஸ். மீனலோசனி





இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், மாரடைப்பு, இருதய வால்வு குறைபாடு, இருதய ஓட்டைகள் போன்றன வராமல் தடுக்க - தெய்வீக மூலிகை மருத்துவம்!



இதயம் என்பது பிறப்பிலிருந்து இறப்பு வரை இடைவிடாது மற்ற உறுப்புகளுக்கு இரத்தத்தை பாய்ச்சும் ஒருபம்ப் (PUMP) ஆகும். இதயம் வேலை செய்வதற்கு, அதற்கும் இரத்தம் தேவைப்படுகிறது. இவ்வாறான இதயத்தில் நம்முடைய தவறான வாழ்க்கை முறையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதய வால்வுகள், ASD, VSD என்று சொல்லக்கூடிய இதய அறைகளில் ஓட்டைகள், இரத்தக் குழாய்களில் அடைப்பு போன்ற குறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான நோய்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றி நாம் தெரிந்துக் கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல், எவ்வித பின் விளைவுகளும் இல்லாத தெய்வீக மூலிகை மருந்துகள், இயற்கை உணவுகள், வாழ்க்கை சீரமைப்பு மூலம் குணம் பெறலாம்.

இதய நோய்க்கான காரணங்கள் : கர்ப்ப காலத்தில் தாய் உட்கொள்ளும் வீரிய மிக்க இரசாயன மருந்துகள், சத்தியான உணவுகள் கிடைக்காமை, அடிக்கடி நோய் வாய்ப்படுதல், X-RAY எடுத்தல் போன்ற காரணங்களால், குழந்தைகளுக்கான - பிறவி குறைபாடுகளும், புகைத்தல், மது வகைகள், B.P., SUGAR போன்றவற்றால் இதய தசைகளில் கோளாறுகளும், அதிக எடை, தொப்பை, TENSION & STRESS உள்ளவர்கள், வாழ்க்கையில் நிதானம் அற்றவர்கள், சோம்பேறிகள், அதிகம் கோபப்படுபவர்கள், கொழுப்பு சத்துள்ள உணவுகள் உட்கொள்பவர்களுக்கு மற்றும் LIPOPROTEIN 'A' என்கின்ற கொழுப்புச்சத்து ஜீன்களினால் மாரடைப்பும், எதிர்ப்பு சக்தி இல்லாத காரணத்தாலும், சத்தியான உணவுகள் கிடைக்காததாலும் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் என்னும் கிருமிகளால் இதய வால்வுகளும் - பாதிக்கப்படுகின்றன.

இதய நோய்க்கான அறிகுறிகள் : நெஞ்சுவலி, மூச்சிரைப்பு, படபடப்பு, வியர்த்தல் போன்றவை இதய நோயின் பொதுவான அறிகுறிகள் என்றாலும், அவை பாதிப்புக்குள்ளான பகுதியை பொறுத்து அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். மூச்சுத் திணறல், உடலெல்லாம் நீல நிறமாக மாறுதல் போன்றவை பிறவி குறைபாடுகளிலும், மூட்டுக்களில் வீக்கம், மூட்டுவலி, கை, கால் வலி, காய்ச்சல், வறட்டு இருமல் போன்ற அறிகுறிகள் இதய வால்வுகள் பாதிக்கப்படும் போதும், மார்பு பகுதியில் எரிச்சல், நெஞ்சுவலி, வியர்த்தல், நெஞ்சு படபடப்பு, இடது தோள்பட்டையில் வலி, மூச்சுத் திணறல், உடல் சோர்வு, திடீர் மயக்கம், நாடி துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் குறைதல் போன்ற அறிகுறிகள் மாரடைப்பு ஏற்படும்போது காணப்படும்.

இதய நோயாளிகளுக்கான தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, அத்தியிலை, அருகம்புல், வெந்தயம், நெல்லிக்காய், கடுக்காய், ஆவாரம்பூ, தூதுவளை, தும்பை, செம்பருத்தி, தாமரை, மருதம்பட்டை போன்றவைகள் பொடி செய்து பின் சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து ஒரு ஸ்பூன்தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் சுமார் மூன்று மாதம் முதல், ஆறு மாதம் வரை உட்கொள்ளவும். இந்த மூலிகைகளில் உள்ள சக்திகள் இதயம் நன்றாக சுருங்கி விரியவும், இதயத்தை தொற்று நோய்களில் இருந்து காப்பாற்றவும் உதவுகின்றன.

இதய நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : இந்நோயாளிகள் தினம் காலை அல்லது இரவு ஒரு வேளை பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கறிகள் தேவையான அளவு பழ ஜூஸ்கள், Vegetables Salads, Fruit Salads போன்றவைாக உட்கொள்ள வேண்டும். மற்ற இரண்டு நேரம் வழக்கமான சமைத்த சைவ உணவுகளை மட்டும் உட்கொள்ள வேண்டும். சமைத்த உணவுகளிலும் வறுத்த, பொரித்த உணவுகளையும் ஊறுகாய், அப்பளம், வனஸ்பதி, நெய், Icecream, சாக்லேட், தயிர் போன்றவைகள் தவிர்க்க வேண்டும். சமைத்த உணவுகளையும், சமைக்காத உணவுகளையும் சேர்த்துண்ணக் கூடாது. இவைகளை 2 அல்லது 3 மணி நேர இடைவெளிகளில்தான் உட்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சிகள் : இந்நோயாளிகள் தினம் காலை மாலை 20 நிமிடம் இயன்ற வரை எளிய உடற்பயிற்சிகள் செய்தல் வேண்டும். நடத்தல், கை கால் விரல்களை நீட்டி மடக்குதல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், முடிந்தால் சைக்கிள் ஓட்டுதல், மூச்சுப் பயிற்சிகள் போன்றன செய்தல் வேண்டும்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.100/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.100/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.100/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பேகவுடா ரோடு. : ✆ 080-2265374, 2873813


மக்கள் எல்லாம் மாடர்ன் ஆயிட்டா என்ன?
மாட்டுவண்டியிலேதான் இன்னும் சினிமா விளம்பரம்!



அட, நம்புங்க! திருவண்ணாமலை
கடைவீதிதான்;
ஆட்டோ சந்தை இல்லை!

''நாற்பது வருஷமா ரமணாசிரமத்துல
தூபம் போடுறேன்!''





கிளிக் காமிரா!



போஸ் கொடுத்துக் காசு கேட்கும் சாமியார்!



அண்ணாமலையிலே அமைதி கிடைச்சது... ஆனால், அசுத்தமில்லாத தண்ணி கிடைக்குமா...?



வயித்துக்கு யாராவது போட்டுட்டா, காவி என்ன... கோட்டையே கட்டலாம்!

கொஞ்சம்

வார இதழில் முழுநேரப் பத்திரிகையாளராகப் பணிபுரிபவர்கள் துணுக்கு எழுதாமல் இருக்க முடியுமா? நானும் நூற்றுக்கணக்கான துணுக்குகளை எழுதியிருக்கிறேன்.

துணுக்குகள் பலவகை. நம்மைத் தேடி வரும் செய்திகளைத் துணுக்காக்குவது ஒருவகை. புத்தகத்தில் படிக்கும் முக்கியச் செய்தியைத் தகவல் துணுக்காக்குவது இன்னொரு வகை. நகைச்சுவைத் துணுக்கு எழுதுவது ஒரு தனி வகை. எல்லாவகைத் துணுக்குகளையும் நான் என் பெயரிலும் பெயரில்லாமலும் எழுதியது உண்டு. நான் எழுதிய துணுக்குகளில் என்னால் மறக்க முடியாதவை என்று சில உண்டு.

அன்று காலை சுமார் ஆறுமணி இருக்கும். தொலைபேசி ஒலித்தது. எடுத்தேன். பேசியவர் டாக்டர் முத்துக் கண்ணப்பர். இளவயதில் நான்கு ஆண்டுகள் ராமகிருஷ்ண மடத்தின் ஆதரவில் வளர்ந்தவர். நா.பா.பிஎச்.டி. படிப்பை மேற்கொண்டபோது நெறியாளராக இருந்தவர். (நா.பா.வுக்கு பிஎச்.டி.பட்டம் வழங்குவதற்கு இறுதியாக நடத்தப்படவேண்டிய வைவா என்னும் நேர்காணல் மட்டும் பாக்கி இருந்தது. மற்றபடி அவர் ஆய்வேடு சமர்ப்பித்து உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் ஒப்புதல் எல்லாம் வந்துவிட்டது. இறுதிக் கட்ட வைவா நடக்காமல் பிஎச்.டி. பெற வாய்ப்பில்லை. சரியாக வைவா நடக்கவிருந்த அதே தினத்தில் நா.பாவின் இறுதிச் சடங்கு நடந்தது தான் துரதிர்ஷ்டம். தம் ஐம்பத்துநான்காம் வயதில் கூட கல்வி கற்ற நா.பா., டாக்டர் பட்டம் பெறுவதற்கும் முன், முந்திக் கொண்டு அமரர் பட்டம் பெற நேர்ந்தது.)



• கி.வா.ஜ.

முத்துக்கண்ணப்பர் 'கி.வா.ஜ.வின் மனைவி காலமானார்' என்ற செய்தியை நாளிதழில் படித்துவிட்டு, சோகம் தாங்காமல் தொலைபேசியில் விம்மி விம்மிக் கரைந்து கொண்டிருந்தார்.

அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் தான் கி.வா.ஜ. காலமானார். அப்போது நான் மந்தைவெளிக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஓடியது நினைவு வந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அவர் உடலை உற்றுப் பார்த்தேன். அவர் சிலேடை சொல்லாமல் இருந்தது அப்போது மட்டும்தான் என்று தோன்றியது. கடைசியாக மருத்துவர் அவரிடம் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னபோது கூட, 'ஐ டேக் ரெஸ்ட் அண்ட் லீவ் த ரெஸ்ட் டு யு!' என்று ஆங்கிலத்திலும் சிலேடை உதிர்த்தவர் அல்லவா! அதுதான் அந்தத் தற்காலக் காளமேகத்தின் கடைசிச் சிலேடையாக இருந்திருக்க வேண்டும். அந்த மாபெரும் தமிழறிஞர் மறைவுக்குப் பின் சில ஆண்டுகள் கழித்து இப்போது அவர் மனைவி காலமாகியிருந்தார்.

தொலைபேசியில் முத்துக்கண்ணப்பர் உருகி உருகிப் பேசினார். 'நான் கி.வா.ஜ.விடம் கொஞ்ச காலம் இலக்கணம் கற்றுக் கொண்டேன். நூற்பாக்களை உரக்கச் சப்தம் போட்டுச் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்துவார். ஒரு மணி நேரத்தில் தொண்டை வறண்டு விடும். கி.வா.ஜ.வின் மனைவி 'இபபடிச் சப்தம்போட்டுச் சொல்கிறீர்களே! கொஞ்சம் பால் சாப்பிட்டுவிட்டு அப்புறம் பாடம் கற்கலாமே' என்று சொல்லி எனக்குக் காய்ச்சிய பசும் பால் கொண்டு தருவார். அவர், என்பால் கொண்ட அன்பால் தந்த அந்தப் பாலை நினைத்துக் கொள்கிறேன். என் சகோ



• நா.பா.

தரிக்கு உண்மையிலேயே நாளை பால்!' என்று நெகிழ்ந்தார் அவர். என் மனமும் கசிந்தது.

இந்தக் தகவலைக் கணையாழியில் சின்னப் பெட்டிச் செய்தியாக எழுதினேன். வாசகர்களிடையே அந்தத் துணுக்கின் பாதிப்பு அபரிமிதமாக இருந்தது. எந்தப் படைப்பிலக்கியமும் போல, துணுக்கும் கூட ஒரு நியாயமான தகவலோடு இருந்தால் பலரைப் பாதிக்கும் என நான் புரிந்து கொண்டது அப்போதுதான்.

வாசித்த புத்தகங்களிலிருந்து சுவாரஸ்யமான செய்திகளைத் துணுக் காக்கியதும் உண்டு. 'இந்தப் புத்தகத்திலிருந்து எடுத்தது' என்று குறிப்பிட்டால், புத்தகத் தைப் பலரும் வாங்கி வாசித்துப் பயன டையவும் அந்தச் சிறு துணுக்கு உதவக்கூடும். கல்கி இதழில் மதிப்புரை செய்வதற்காக பெ.சு. மணியின் 'பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம்' என்ற உயர்தரமான நூலை நான் ஆழ்ந்து வாசிக்க நேர்ந்தது. அதில் ஒரு தகவல்: பாலகங்காதர திலகரின் வேத ஆய்வுக்கு ஊக்கமளித்தவர் ஜெர்

துணுக்குறைவாமா?

திருப்பூர் கிருஷ்ணன்

மானியரான அறிஞர் மாக்ஸ்முல்லர். அவர்களிடையே கடிதத் தொடர்பு இருந்தது. திலகர் சிறையில் அடைக்கப்பட்ட போது இத்தகைய மகாவித்வான் சிறையில் கஷ்டப் படுவது முறையல்ல என்று எண்ணி விக்டோரியா மகாராணியிடம் முறையிட்டுத் திலகர் விடுதலைக்குப் பாடுபட்டார் மாக்ஸ் முல்லர். இந்தத் தகவலை எடுத்து எழுதிய போது வாசகர்கள் நூல் எங்கு கிடைக்கும் என ஆர்வத்தோடு விசாரித்தார்கள்.

வ.வே.சு. ஐயர் வரலாறில் திகைக்க வைக்கும் ஒரு தகவல். தம் மகள் சிறுமி சுபத்ராவுடன் பாபநாசம் அருவியில் குளிக்கப் போனார் 'குளத்தங்கரை அரச மரம்' என்ற தமிழின் முதல் சிறுகதையை எழுதிய வ.வே.சு. ஐயர். அருவிக்கரையில் தியானத்தில் ஈடுபட்டிருந்த ஓர் இளைஞரி டம் மாற்றுத் துணியைக் கொடுத்துவிட்டு அவர்கள் குளிக்க இறங்கினார்கள். ஒரே கணத்தில் சுபத்ரா கால் தவறி அருவியில் விழுந்து காலமானாள். அவளைக் காப் பாற்றக் குதித்த ஐயரையும் அருவி உடனே அடித்துச் சென்றுவிட்டது. மாற்றுத் துணி யோடு காத்திருந்த இளைஞரின் கண் ணெதிரே நடந்த சம்பவங்களால் அவர், உடலே ஒரு மாற்றுத்துணிதான் என்ற ஞானம் அடையப்பெற்றார். பின்னாளில் அவரே சுவாமி சித்பவானந்தர் ஆனார். அவர்தான் சி. சுப்பிரமணியத்தின் சித்தப்பா.

இத் தகவலை நான் துணுக்காக்கினேன். ஒரு சிறந்த சிறுகதை பெறும் வரவேற்புக்கும் மேலான வரவேற்பை இந்தத் துணுக்கு பெற்றது.

என் ஆர்வங்கள் கதை, கவிதை, விமர்சனம் என்றெல்லாம் இருந்ததால், அவசர நிர்பந்தத்தின் காரணமாகத் துணுக்கு எழுதினேனேயன்றி மற்றபடி நான் துணுக்கு எழுதுவது படிப்படியாகக் குறைந்து பின் நின்றே போய்விட்டது. என்றாலும் இன்றைய பத்திரி கைகளுக்கு ஆதாரமாக இயங்கும் துணுக்கு எழுத்தாளர்கள் மேல், எனக்கு மட்டற்ற அன்பும் மரியாதையும் தொடர்ந்து இருந்து கொண்டே வந்தது. சிறுகதை, நாவல் ஆசிரி யர்கள் பல வகைகளில் சிறப்பிக்கப்படு கிறார்கள். ஆனால் துணுக்குத் தான் ஓரத்தில் கட்டம் கட்டி வெளியிடப்படுகிறதென்றால், துணுக்கு எழுத்தாளர்களுமே கூட ஓரங் கட்டப்படுவது சரியல்ல. இந்நிலையை மாற்றி, துணுக்கு எழுத்தாளர்களைப் பெரு மைப்படுத்துகிற மாதிரி ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று ஆவலோடு காத் திருந்தேன். அதற்கும் என் கடந்த காலப் பத்திரிகைப் பணியில் ஓர் அருமையான சந்தர்ப்பம் வாய்த்தது. அது–

(தொடரும்)



நமது நாட்டில் ஃபோனை எடுத்தவுடன் 'ஹலோ' என்கிறோம். ஆனால் போலந்து நாட்டில் ஃபோனை எடுத்தவுடன் 'சுகம்' என்கிறார்கள். அதற்கு, 'சொல்லுங்கள் கேட்கிறேன்' என்று பொருள்.

- ஆர்.பிரகாசம்



பொதுவாகச் சமையல் எரிவாயுவுக்கு நிறம், மணம் எதுவும் கிடையாது. கசிவை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக 'மெர்காப்சன்' என்னும் வேதி பொருள் கலக்கப்படுகிறது. அதனால்தான் ஒருவித நெடியுடன் உள்ளது.

— எஸ். தமிழ்மணி

எடுடா தம்பி ஐட்டம்!



கவிஞர் கண்ணதாசன் ஒரு சமயம் நண்பர் வீட்டுக்குச் சென்றார். வாசல் கதவைத் தட்டினார். உள்ளேயிருந்து, "யார்?" என்று கேட்டார்கள். அதற்குக் கவிஞர் சொன்னது: "An outstanding poet standing out side!"

— கே. கவின்

சுசீந்திரம் திருக்கோயிலில் இரட்டை எலிகளை வாகனமாகக் கொண்டு நீல கண்ட விநாயகர் எனும் பெயரில் விநாயகர் காட்சி தருகிறார்.

- பா. குணா







'ஜான்' என்ற விறகு வெட்டி ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்தான். ஐந்து வருடமாக அவனுக்கு ஊதிய உயர்வு கிடைக்க வில்லை.

நிறுவனம், 'பில்' என்பவனைப் புதிதாக வேலைக்குச் சேர்த்தது. ஒரு வருடத்தில் அவனுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது.

ஜான் தன்னுடைய முதலாளியிடம் இது பற்றிக் கேட்டான். முதலாளி அதற்கு, ''ஐந்து வருடமாக ஒரே எண்ணிக்கையில தான் மரங்களை வெட்டுகிறாய். ஆனால் பில் அதிகமான மரங்களை வெட்டுவதால் நிறுவனத்திற்கு லாபம். அதனால் அவனுக்கு உயர்வு கொடுக்கிறோம்'' என்று கூறினான்.

ஜான், பில்லிடம் சென்று ''உன்னால் எப்படி அதிகமான மரங்களை வெட்ட முடிகிறது'' என்று கேட்டான். அதற்கு பில், ''நான் ஒவ்வொரு மரத்தை வெட்டியதும், இரண்டு நிமிடம் செலவிட்டு என்னுடைய கோடாரியைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன். நீ கடைசியாக எப்போது உன் கோடாரியைக் கூர்மையாக்கினாய்?'' என்று கேட்டான். ஜானுக்குத் தன்னுடைய தவறு புரிந்தது.

நாம் எப்போது தம் புத்தியைக் கூர்மையாக்கிக் கொண்டோம்?

- கலா

ஐ.ஏ.எஸ். நேர்முகத் தேர்வில் வந்தவரிடம் கேட்கப்பட்டது.

"உங்கள் பொழுதுபோக்கு என்ன?"

"கராத்தே கற்பது."

"எதற்காகக் கராத்தே?"

"வம்பு செய்ய ஐந்து பேர் வந்தால் சமாளிக்கத்தான்."

"பத்துப்பேர் வந்தால் என்ன செய்வீர்கள்?"

உடனே வந்தவர் பதில் சொன்னார்,

"அதற்குத்தான் ஜாக்கிங் கற்று வருகிறேனே."

(- 'ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறுவது எப்படி?' எனப் பேசியதில் கேட்டது.)

லால் சுரேஷ்பாபு.

ஒரு வியாபாரிக்குப் பெருத்த நஷ்டம் வந்துவிட்டது. இடிந்து போய் விட்டார். தம் மகனைக் கூப்பிட்டு, "நாம் நஷ்டமடைந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்று எச்சரித்தார்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என மகன் கேட்டான்.

"ஒருவர் தமது கஷ்டங்களை மற்றவர்களிடம் சொல்லாமல் இருப்பது நல்லது. அதைச் சொல்லும் போது மீண்டும் நமக்கு மன உளைச்சல் வரும். நண்பர்கள் மனம் வருந்துவார்கள். இதை அறிந்தால் எதிரிகள் சந்தோஷப்படுவார்கள். உறவினர்கள் கேலி செய்வார்கள். அறிமுகமானவர்கள் ஏசுவார்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள் கேவலப்படுத்துவார்கள். இதனால் மீண்டும் மீண்டும் நமக்கு அதிக மன வருத்தமே ஏற்படும். எனவே நமது கஷ்டங்கள் நமக்குள்ளேயே இருக்கட்டும்'' என்றார் தந்தை.

– ஆதித்யன்

அமெரிக்கப் பத்திரிகைகளில் ஒரு சமயம் பின் வரும் விளம்பரம் வந்தது _

''வாலிபமும் அழகுமுள்ள ஒரு கோடீஸ்வரருக்கு மணப்பெண் தேவை. பெண், '...........' என்ற நாவலின் கதாநாயகியைப் போல் இலட்சணங்கள் உள்ளவளாக இருக்க வேண்டும்.''

பலன்: விளம்பரத்தில் குறிப்பிட்ட நாவலின் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் 24 மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தன.

- ப சந்திர ஜோதி



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. **Tel & Fax: 237 6129.**
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 120 மாணவர்களும் 30 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

அருணை

ஒரு கோடியா? அப்பாடியோவ்...

''பௌர்ணமி அன்று மட்டும் திருவண்ணாமலைக்குச் சுமார் இரண்டு இலட்சம் பக்தர்கள் வருகிறார்கள். காஸெட்டுகள், கற்பூரம், கோயில் உண்டி காணிக்கை என்று அன்று மட்டும் ஒரு கோடி ரூபாய் இங்கே புரள்கிறது. ஆனால் வருகின்ற பக்தர்களுக்குத் தேவையான வசதி செய்து தர முடியாத நிதிநிலை நகராட்சியிடம். லாட்ஜுகள் பெருகிவிட்டன. பௌர்ணமி அன்று நூற்றுக்கணக்கில் தெருவோர உணவுக்கடைகள் உருவாகின்றன. நன்றாகத் திட்டமிடும் பட்சத்தில், நகராட்சி வருவாயைப் பெருக்க வாய்ப்பிருக்கிறது. முக்கியமாகப் பாதாளச் சாக்கடை உடனே போட வேண்டும். இல்லையேல் சுகாதார சீர்கேடுகள் பெருகும். கிரிவலப் பாதையில் கடைகள் போடுவோரிடமிருந்து வாடகையைக் கோயில் பெற வேண்டும். திருப்பதி வளர்ச்சிக்கு தேவஸ்தானம் உதவுவது போல திருவண்ணாமலை நகர வளர்ச்சிக்கும் கோயில் உதவலாமே'' என்கிறார் கடந்த முப்பது வருடங்களாக அங்கே காப்பிப் பொடி கடை வைத்திருக்கும் சந்தானம். ஏழ்மை நிலையிலிருப்பவர்கள் இறந்து போன தகவல் வந்தால், அடுத்து நடக்க வேண்டிய காரியங்களுக்கு உதவி செய்ய அங்கே ஆஜராகி விடுகிறார் இவர்.



குளம் கண்டுபிடிப்பு!

திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்துக்கு எதிரிலேயே தூர்ந்து போய்க் கிடக்கிறது ஸ்ரீசக்கர தீர்த்தம். இன்றோ நேற்றோ அல்ல. சுமார் நூற்று ஐம்பது வருடங்களாக மண் மேடிட்டுக் கிடக்கிறது. இதற்கு, மழைக்காலங்களில் திருவண்ணாமலையிலிருந்து தண்ணீர் பாய்ந்து வந்து குளத்தை நிரப்புமாம். ஆனால் தற்போது இதன் நீர்வழி நெடுகிலும் சவால் மிகுந்த ஆக்கிரமிப்புகள். பாதாளச்சாக்கடை திட்டம் இல்லாததால் தெருதோறும் ஓடும் கழிவுநீர் கால்வாய்கள். நல்லவேளையாக சேவாபாரதி அமைப்பு மூலம் இதற்கு விடிவுகாலம் வந்திருக்கிறது. கல்வி, மருத்துவம், சுற்றுச்சூழல் ஆகியவற்றில் அதிக அக்கறை காட்டும் இந்த அகிலபாரத அமைப்பின் திருவண்ணாமலைக் கிளையைச் சேர்ந்தவர்கள், நகரசபைத் தலைவர் ஸ்ரீதரன் தரும் ஒத்துழைப்போடு, கரசேவா மூலம் குளத்தைத் தூர் வாரிக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீசக்கர தீர்த்தத்தின் புராணச் சிறப்பு என்ன தெரியுமா? சிவபெருமானின் அடிமுடி காண, விஷ்ணு வராக அவதாரம் எடுத்தபோது, தமது சக்கரத்தால் இந்தக் குளத்தை உருவாக்கி இங்கேதான் தமது அவதாரத்தை முடித்தாராம். எப்படியோ, புதைபொருள் ஆராய்ச்சி துறையிடம் 'இங்கேதான் ஒரு காலத்தில் குளம் இருந்தது' என்று காட்டாமல், பொதுமக்களே குளத்தை மறு கண்டுபிடிப்பு செய்தார்களே!



ழுத்துக்கள்!

திருவண்ணாமலையில் சங்கரமடம்!

கிரிவலப் பாதையில் சிம்ம தீர்த்தத்திற்கு எதிர்ப்புறமுள்ள வைரக்கல் குன்று அருகே ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் சங்கரமடம் கட்டும் பணியைத் தொடங்கியிருக்கிறார்கள்.


பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையாம் இது. இதற்காக வரலட்சுமி என்ற பக்தை இலவசமாக நிலம் கொடுத்துள்ளார். மேற்படி நிலத்தில், ஸ்ரீ ஜெயேந்திரர் அடிக்கல் நாட்டி, ஆதிசங்கரர் விக்ரகம் ஒன்றையும் பிரதிஷ்டை செய்துள்ளார். தினசரி பூஜைகள், அபிஷேகம், அர்ச்சனை நடைபெற்றுவரும் இவ்வாலயத்தை ஒட்டி, கிரிவல பக்தர்களுக்காக தங்கும் அறைகள் கட்டப்பட உள்ளன. திட்டமதிப்பு நாற்பது இலட்ச ரூபாய்!

ஆட்டோ நகரம்!

இந்த துக்கிளியூண்டு ஊரில் இருக்கும் ஆட்டோக்களின் எண்ணிக்கை நாலாயிரத்து ஐந்நூறு என்றால் நம்பித்தான் ஆக வேண்டும். தெருவில் நடப்பவர்கள் கொஞ்சம் ஏமாந்தால் மோதி மூக்கை உடைப்பது ஆட்டோக்கள்தான். தொழில்துறையில் மிகவும் பின்தங்கியிருக்கும் திருவண்ணாமலையில், பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்துவிட்டு, வருகிற ஏழை மாணவர்கள் தேர்ந்தெடுப்பது ஆட்டோ ஓட்டும் தொழிலைத்தான்.

''கிரிவலத்தன்று கிடைக்கும் ஒருநாள் வருமானத்தில் பலநாள் வயிற்றுப்பாடு தீர்கிறது. ஆனால் மற்ற நாட்களில் மிகக் குறைவாகக் கட்டணம் வாங்குகிறோம். ஆட்டோக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் வந்துவிட்டதை நாங்களே உணர்ந்து, அதை மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்தியும் வருகிறோம்'' என்கிறார் திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலைய வாயில் ஆட்டோ ஓட்டுனர் சங்கத் தலைவர் மோகன். இத்தனை நெரிசலான பேருந்து நிலைய வாசலிலேயே ஆட்டோ நிறுத்தம் இருப்பது ஆபத்து! இஷ்டத்திற்குப் பேருந்து





அருணை முத்துக்கள்!

நிலையத்திற்குள் நுழைந்து இடைஞ்சல் தருகிறார்கள். எனவே இந்த ஸ்டாண்டை இடமாற்றம் செய்ய வேண்டும் என நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகிறார்கள் பொதுமக்கள்... ஆனால் காவல்துறை, ஆட்டோ அண்ணாச்சிகள் பக்கம்!?

அருள்வாக்கு அம்மா!



எத்தனையோ மகான்களும், சித்தர்களும் அவதரித்த புண்ணிய பூமி திருவண்ணாமலை. அப்படிப்பட்ட சித்தர்களில் இசக்கி சித்தரும் ஒருவர். கிரிவலப் பெருமையைப் பக்தர்களுக்கு உணர்த்தியதில் பெரும் பங்கு இவருக்குண்டு. ஆசி வாங்க வருபவர்களிடம் "நீ இத்தனை நாள் கிரிவலம் வர வேண்டும்" என்று கட்டளையிட்டு விடுவாராம். இப்படித்தான் முத்துக்குமாரசாமியை மணம் புரிந்து கொண்ட உமாதேவி, கணவருடன் இசக்கி சித்தரைப் பார்த்து ஆசி வாங்கச் சென்றிருந்தார். "உனக்கு ஞான மார்க்கம்தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லி உமாதேவியை 48 நாட்கள் கிரிவலம் வரச் சொல்லி விட்டார் இசக்கி சித்தர். அவர் சொல்படியே கிரிவலம் வந்து உபதேசமும் வாங்கிக்கொண்டார். இது நடந்து முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. துறவறம் வாங்கிக்கொண்ட உமாதேவி இப்போது சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆசிரமத்தில் அருள்வாக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். அவரிடம் அருள்வாக்கு கேட்க நமது மக்களைத் தவிர ஏராளமான வெளிநாட்டுக்காரர்களும் வருகிறார்கள். அருள்வாக்கு மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆசிரம வளர்ச்சிக்கு செலவிடப்படுகிறதாம்!

- ரமா

கல்கி - VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 5 முடிவு

ஜன்மபூமி ஜோக் எழுதச் சொல்லிக் கேட்டிருந்தோம் 'கிஷ்கிந்தா' போல ஜோக் படையே திரண்டு வந்து நிறைபடித்துவிட்டது. சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த இரண்டு நகைச்சுவைத் துணுக்குகள் தலா நான்கு கிராம் தங்கம் பரிசாகப் பெறுகின்றன.

சீதை: ஸ்வாமி, என்ன யோசனையில் இருக்கிறீர்கள்?
ராமர்: சீதே, நம் குழந்தைகள் லவா, குசா காட்டில் பிறந்த மாதிரி நானும் காட்டில் பிறந்திருந்தால் இந்தியா பிழைத்திருக்குமே!

சரோஜா ராமச்சந்திரன்,
533, 11வது 'ஏ' குறுக்கு,
வித்யாரண்யாபுரா,
பெங்களூர் - 97

சீதை: என்ன சுவாமி சிந்தனை?
ராமர்: கோவில் கட்டிய பின் நம்மைக் கும்பிட ஆளிருப்பார்களா என்பதுதான்!

பெ. பொன்ராஜபாண்டி,
நியூ பாரதி ஸ்டோர்,
சொக்கலிங்கநகர்
மெயின் ரோடு,
மதுரை - 625 016

குடித்திருந்தான், வழக்கம்போல.

குடி பல விநோதமான உள்ளக் கிளர்ச்சிகளை ஏற்படுத்துகிறது. குடித்தாலே மாப்பிளைக்குத் தனி கெத்துதான். அந்தஸ்துதான்.

படகுச்சவாரி தரைமீதே அனுபவிக்கலாம். ஒரு ஜோக் அவனுக்கு ஞாபகம் வந்தது. குடிக்கும்போது பல விஷயங்கள் மேலெழுந்து வரும். சில கீழே மறைந்து கொள்ளும். ஞாபகம் இருக்க வேண்டியது மறந்துவிடும். எப்போதோ மறந்து போனது ஞாபகம் வரும்.

அது மறந்து போனதே ஞாபகத்தில் இராது. ஞாபகப்பாம்பு வழவழவென்று உள்ளே நழுவிக் காணாமல் போகும்.

எதையோ நினைத்துக் கொண்டிருந்தோமே என்று கயிற்றை விட்டுவிட்ட பதற்றத்துடன் தேடினால் கிடைக்காது. மாட்டை முதலில் கட்டாமல் வண்டியைக் கீழே வைக்கிற போது சில வண்டி - மாடுகள் ஓட்டமெடுத்து விடும். அதைப் பிடித்துக் கட்டுவதற்குள் ஓம்பாடு எம்பாடு ஆகிவிடும். அதைப்போல...

எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்? ஆ... அவனாவது மறக்கிறதாவது? அவன் யார்? சிங்கராஜ். ராஜா அல்லவா அவன்? அவனை மிஞ்ச முடியுமா? அவனுக்கு ஒரு மாபெரும் சந்தேகம் வந்தது. எதிரில்



எஸ். ஷங்கரநாராயணன்

நடந்து வருகிறவனை நிறுத்தி நெஞ்சை நிமிர்த்தி மார்தட்டி "டாய், நான் யார்?" என்று கேட்டான்.

''பொறம்போக்கு நாய்...'' அவன் கடந்து போனதைப் பார்த்து ஒருகணம் திகைத்தான்.

"அக்ஹ்..." என்று அனுபவித்துச் சிரித்தான். "பொறம்போக்கு நாய்!... நான்!... அட கபோதி, நீதான்... கேள்விக்கு பதில் தெரியாத நீதான் பொறம்போக்கு..." ரொம்ப அனுபவித்துச் சிரித்தான். படித்துறைத் தண்ணீர் போல அவன் நெஞ்சில் சளப் சளப்... சொகமாய் இருந்தது...

தானறியாமல் தெருவின் அந்தப் பக்கத்துக்கு வந்திருந்தான். தெரு இருட்டிக் கிடந்தது. தெருவில் மனுஷாள் நடமாட்டமில்லை. நான் நடமாடுகிறேனே? நடனமாடுகிறேனே?... நான் ஆளில்லையா? அட, நான் மனுசனில்லையா? அக்ஹ்!

குடி வேண்டித்தான் இருக்கிறது. தினசரி அலுவலகம் விட்டு வீட்டுக்கு வரவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அலுவலகமே பிடிக்கவில்லை. யாரும் அவனுக்கு யோசனை சொல்வது, அவனைத் தட்டிக் கேட்பது பிடிக்கவில்லை...

வரவர எதுவுமே பிடிக்காமல் போய்விட்டது. எதிலும் ஒரு சலிப்பு. ஓர் அலுப்பு. நித்தியப்படி நியதிகள்... அந்தக் கண்ணிகளில் மாட்டிக் கொள்ள வெறுப்பாய் இருந்தது.

மினி தொடர்

நியதிகளுக்கு அடிபணிய மறுத்தது மனம். நான் சுதந்திரப் பறவை. பறவையா? நானா?... அப்போ சிறகுகள்?... ஆ, அதுதான் விஷயம். குடிக்கும்போது திடீரென்று மனத்துக்குச் சிறகுகள் முளைத்து விடுகின்றன.



ஆகாயத்தில் முட்டிக் கொண்டேன்

பட்டம்போல அப்போது மனம் படபடத்துப் பறக்கிற பரவசம். மிதக்கிற உல்லாசம். டப்பாலங்கடி கிரிகிரிகிரி... என்னா புலவன் இப்பிடி எளுதிப்பிட்டான். குடிச்சிப்பிட்டு எளுதிப்பிட்டானா?

குடி மாயாஜாலங்களை நிகழ்த்துகிறது. வயிற்றில் யாரோ பம்பரம் விடுறாங்க டோய். கோழி இறகால் காது குடைகிறாப்போல.. 'மாப்ள...' என்று அவன் உடம்பெங்கும் கிச்சு கிச்சு மூட்டுகிறார்கள்.

அப்படித்தான் இருக்கணுன்றதும் இல்லை. சில சமயம் குடி எத்தனைத் துயரத்தைக் கொண்டு வந்து விடுகிறது. தெருவில் ஓடிக்கிட்டிருந்த சைக்கிளில் இருந்து டமேர். யார் வண்டியோன்னு பாத்தா, நம்ம வண்டிதான்! ட்யூப் வெடித்து மனசில் பஞ்சர். உள்ளே கலவரங்கள். அப்போது உலகமே சோகக் கோலமாகி விடும். வண்டியைப் பிரித்து பாகம் பாகமாய்க் கழற்றிப் போட்டாற் போல, காயலான் கடையாகிவிடும். உள்ளம் சாக்கடை பொங்கி, சூழலே நாறி நாராசமாகிப் போகும்.

வெளியேயும் இருட்டு. உள்ளேயும் இருட்டு. நடக்க ஏலாது. முன்னே கால் வைக்கவே கூசும். துழாவித் துழாவிப் போக வேண்டும். வண்டில இர்... பிரேக் போடுறாப் போ.

இன்றைக்கு நிலைமை எக்கச்சக்கமாகி விட்டது. போதை சற்று அதிகம் ஏற்றிக் கொண்டான். இன்று சாமந்தி இறந்த நாள்.

சாமந்தி நல்ல அழகு. பேரே அழகு. அவனை மாப்பிள்ளை கேட்டுத் துப்பு வந்தது. பெண்பேர் சாமந்தி பேரைக் கேட்டதுமே அவனுக்குப் பிடித்துவிட்டது. உள்ளே வாசனை பரத்தியது அந்தப் பெயர். இனிமே அவ பேர் சாமந்தி சிங்கராஜ். வாய்க்கு வெளியே தெறித்துவிட்டது சிரிப்பு. குச்சி ஐஸ் சாப்பிடுகிறாப் போல எச்சிலை உறிஞ்சிக்கிட்டே சுற்றும் பார்த்தான். இவனை யார் கவனிக்கப் போகிறார்கள். அவனவனுக்கு ஆயிரம் ஜோலி. ஒவ்வொருத்தனையும் நிறுத்தி 'உனக்குக் கல்யாணம் ஆயிட்டதா?' என்று கேட்கலாமாய் இருந்தது.

கல்யாணம்லா சும்மா ஆயிருமாடா வெண்ணே... அதுக்கு ஒரு யோக்யதாம்சம் வேணும்ல. நான் சாதாரண ஆளா? கவர்மெண்டு ஆபிசுல பியூன். ஆபிசர்மாரெல்லாம் அங்க டம்மி. வருமானமும் கம்மி. பியூனுங்க வைச்சதுதான் அங்க சட்டம். வருமானமும் ஜாஸ்தி. பல கிளார்க்குகளுக்கு பியூன்களே வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கி சமூக சேவை செய்றாங்க. ஆபிசர் வெள்ளையுஞ் சொள்ளையுமா போட்டு வந்து சும்மா கையெழுத்துப் போட்டா ஆச்சா? ஒரு கிறுக்கல் கிறுக்க காலேஜ் படிப்பு வேற. கிறுக்குப் பயல்கள். அவங்க ஆபிசர் கையெழுத்தை அவனே போடுவான்!

சிரிப்பு வரவில்லை. மனம் கனத்துக் கிடந்தது. சாமந்தி...

உள்ளே பிள்ளையுடன் பிறந்த வீடு போனவள். ஊர் போய்ச் சேரவேயில்லை. அவள் போன பஸ் விபத்துக்குள்ளாகி ஸ்பாட்லயே ஆள் அவுட். காலையில் தினத்தந்தி பார்த்தால் செய்தி. படம் வேறு. விபத்து நடந்த இடம் இதுதான்... என்று அம்புக்குறி. செய்தி சுவாரஸ்யமாய் இருந்தது.

வீட்டுக்குப் போலீஸ் வந்தது. போலீசைப் பார்த்ததும் மாப்ளைக்கு உள்ளே பர்ரா யிட்டது. எந்தப் பொறம்போக்கு நாயாவது அவன் லஞ்சம் வாங்கினதுக்கு கம்ப்ளெயின்ட் கொடுத்திட்டானா? 'வாங்க சார்!' என்று அசட்டுச் சிரிப்புடன் சலாம் வைத்தான்.

முள்ளை முள்ளால் எடுக்கணும். லஞ்சத்தை லஞ்சத்தால் மறைக்கணும்.

'ஐயோ' என்றான் சாமந்தியின் புடவையைப் பார்த்து.

பேப்பர்க்காரர்கள் வந்து சாமந்தியின் படம் கேட்டார்கள். தனிப்படம் அவனுடன் கல்யாணப்படம் என்று விதவிதமாய்க் கொடுத்தான். கல்யாணப் படத்தில் அவன் மூஞ்சி அத்தனை எடுப்பாய் இல்லை, காரணம் அவன் முன்பல் கொஞ்சம் எடுப்பு. அவனைக் கத்தரித்துவிட்டு வெளியிட்டார்கள்.

கொடியில் சாமந்தியின் புடைவை. உள்ளாடைகள். கண்ணாடியில் ஸ்டிக்கர் பொட்டு. ஹேர்பின். பெண்ணுக்கே உரிய சமாசாரங்கள். எல்லாம் கையில் எடுத்துப் பார்த்துப் பார்த்து அழுதான். சினிமாக்களில் அப்படித்தான் அழுவார்கள். சுவரில், சிரித்தபடி சாமந்தி படம். இன்னும் அழுகை வந்தது.

இரண்டு வருசம் ஆகிவிட்டது. வேறே கல்யாணம் முடிக்கவேயில்லை. அதற்கே அழுகை வந்தது...

சாமந்தி இறந்த நாள்.

"உன் மனைவியும், உன்னோட அம்மாவும் சண்டை, போடும்போது நீ என்ன செய்வ?"

"பின்னணி இசைக்காக, பாத்திரங்களைக் கீழே போட்டு நொறுக்குவேன்."

- என். உஷாதேவி



"எங்களுக்குப் பத்து லட்சம் ரூபாய் என்பது உங்களுக்கு ஒரு பைசா தானே, உங்கள் பக்தனாகிய எனக்கு ஒரு பைசா நீங்கள் தரக்கூடாதா?" என்று கடவுளைப் பார்த்துக் கேட்டான் பேராசை பிடித்த மனிதன்.

"ஓ! இதோ ஒரு நொடியில் தருகிறேன்" என்றார் கடவுள். "ஆனால் நினைவிருக்கட்டும், எனக்கு ஒரு நொடி என்பது உங்களுக்கு ஆயிரம் ஆண்டுகள்!"

- கே. சங்கர்



காலை தூங்கி முழிச்சதில் இருந்தே ஓர் எண்ணம் அட, இன்னிலேர்ந்து குடியை நிறுத்திட்டா என்ன... சாமந்தி இறந்த நாளன்று ஒரு நல்ல காரியம் செய்தால் போல இருக்கும்.

குடிப்பதை நிறுத்துவது சுலபம். அவனே பலமுறை விட்டிருக்கிறான்.

ஆமாம், விட்டுவிட வேண்டும். நெஞ்சைத் தட்டிச் சொல்லிக் கொண்டான். ஆ, எத்தனை சகத்தான நாள் இது. இன்று முதல் குடிக்க மாட்டேன். குடி நாட்டுக்கு வீட்டுக்கு உயிருக்குக் கேடு. அதனால்தான் மதுக்கடைகளை அரசாங்கமே திறக்கிறது.

உள்ளே மகிழ்ச்சிப் பரபரப்பு. சாமந்தி மேலே சத்தியம். அட, இன்னிக்கு என்ன இன்னிக்கு... இனி நான் குடிக்கவே மாட்டேன்... சூப்பர்!

குடி உயிருக்கு வீட்டுக்கு நாட்டுக்கு கேடு. ஆகவே அவன் அதை விட்டுவிடப் போகிறான். சமூகசேவை இரண்டு!

வெளியே வந்தபோது தெரு பரபரப்பாய் இருந்தது. அலுவலகம் ஆரம்பிக்கும்போது வெற்றிலை பாக்கு, சிகரெட், தாம்பூலம்... எல்லாம் முடித்து மெதுவாக வருகிற ஜனங்கள் யாவரும் வீட்டுக்குக் கிளம்ப சுறுசுறுப்பாகி விடுகிறார்கள், அவனைத் தவிர.

அவனை வரவேற்க வீட்டில் யார் இருக்கிறார்கள்? குப்பை சேர்ந்தால் அதைப் பெருக்கி வெளித்தள்ளக் கூட ஆளில்லை. நுழைகையில் தானே தன்னைக் குப்பையாய் உணர்ந்தான்.

காத்திருந்தான். அவன் பஸ்ஸைத் தவிர இதர பஸ்கள் வந்தாற்போல இருந்தது. என்னாங்கடா இது, என எரிச்சலின் முதல் துளி அவனில் விழுந்தது.

சரி, நடப்போம்... நடையா? வீட்டு வரையிலா?...

வேணாம்டா, நீ இப்படித்தான். நடந்தா தன்னைப் போல சாராயக்கடைக்குப் போயிருவே..

ஆ, அதெல்லாம் வேறே ஆள்கிட்ட. நான் வண்ணாரப்பேட்டை சிங்கராஜ். மன உறுதி மிக்க சிங்கராஜ்.

மெல்ல நடக்க ஆரம்பித்தான், ஆமாம்... வீட்டை நோக்கித்தான்.

அவனைப் பார்த்ததும் பழக்கமான ஒரு நாய் ஓடி வந்தது. வழக்கமாய் சாராயக்கடை வரை அது கூடவரும். கடைவாசலில் உள்ள பெட்டிக்கடையில் பிஸ்கெட் வாங்கிப் போடுவான். "டைகர்!" என்று உருகிப் பெருகினான் அவன். அவனிடமும் பிரியம் செலுத்தும் ஒரு ஜீவன். நாய்கள் நன்றியுள்ளவை.

"டைகர், நான் முடிவு செய்துட்டேன்... இனி நான் குடிக்கப் போவதில்லை."

'யாரைக் கேட்டு இப்படியொரு முடிவெடுத்தாய்', என்கிறாப் போல அது நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்தது. மனைவி இறந்த நாளன்றுகூட குடிக்காதவன் மனுசனா?

இல்லை. இது என் இறுதி முடிவு டைகர்.

நாய் அவனுடன் ஓடி வந்தது. நாய்கள் தான் எத்தனை அறிவுள்ளவை. யாரையாவது நாயே, என்று திட்டினால், அவன் அறிவுள்ளவன் என்று அர்த்தம்!

சாராயக்கடையின் தெருப் பக்கம் வந்ததும் கால்கள் தன்னைப் போல நின்றன. ஒரு கணம் திகைப்பாய் இருந்தது. அறிவுள்ள நாய்... அது இவனுக்கு முன் இடது சந்தில் திரும்பி, அவனுக்காய்க் காத்திருந்தது.

சாராயக்கடையின் தெரு வழியே போனால்தான் என்ன? அவன் மனசு மாறி விடுவானா? ஜஸ்ட் வாசல்வரை போவது, பெட்டிக்கடையில் நாய்க்கு பிஸ்கெட்

✉ நரசிங்க மலையில் ஏறிச் சென்று இறங்கி வந்த உணர்வு மேலிட வைத்தது. நடனத்தின் ஓவியங்களுன் நர்த்தனம் புரிந்தன.

நெய்வேலி, க. சுந்தர்

✉ பிரபஞ்சனின் யதார்த்த நடையும், சொற்கட்டும் மிகவும் அருமை, அமிர்த சரஸ்வதியின் முடிவு சோக மயமாய் மனத்தைப் பிழிந்து விட்டது.

திருநெல்வேலி, திலகம்

✉ இயற்கையின் அழகை ரசிப்பதென்பது எல்லோராலும் முடிவதில்லை. அதற்கும் வரம் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய வரம் பெற்றவள்தான் அமிர்தா. இக்கதையின் ஆசிரியரும் இயற்கையின் அழகை அணு அணுவாக ரசிக்கும் இயற்கைப் பித்தனாகத் தான் இருக்க வேண்டும்.

தஞ்சாவூர்,
வெங்கட் முருகானந்தம்



வரம் பெற்ற அமிர்தா!

✉ பெண்மையின் வாழ்க்கை அலங்கோலத்தைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் பிரபஞ்சன். இவரின் வார்த்தை ஜாலங்கள் சாமானியருக்குச் சற்று கடினமாகவே இருக்கிறது.

பெங்களூர், அ. தாசன்

வாங்கிப் போடுவது... பாவம், அவனை நம்பிக் காத்திருக்கிறது! நம்பிக்கை துரோகம் மகா பாவம்.... அதோடு நேராக வீடு போய்விடுவது.

எதிரே ஒருவன் வேட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு தள்ளாடி வந்தான்.

டைகர் சட்டென்று அவனைப் பார்க்க ஓடியது. அவன் கையில் வடை. ஆ, கட்சி மாறிவிட்டது. ஒரே விநாடியில்.. துரோகி!

எனக்கு யாருமே இல்லை. இந்த உலகத்தில் ஒரு கேடுகெட்ட தெருநாய்கூட என்னைப் புறக்கணித்து விட்டது. என்ன உலகமடா இது?

நாய் அந்தக் குடிகாரன் முன் நின்று வாலை ஆட்டியது.

அதைப் பார்க்கவே மாப்ளைக்குத் துக்கம் விக்கியது உள்ளே. உலகம் வடையில் இருக்கிறது.

ஆ... இப்போது அவன் தானறியாமல் இடப்பக்கம் திரும்பினான்...

அதனாலென்ன? இந்த வழியா எத்தனை மனுஷ மக்கள் போகல்லியா? எல்லாரும் குடிக்கிறார்களா?

திடீரென்று அவன் காலோடு ஓர் உரசல். டைகர்!

அதானே... என்னைவிட்டு ஓடிப்போக முடியுமா? கண்ணே முடியுமா... அதற்கு வடையில் பங்கு கிடைத்ததா தெரியவில்லை.

அவன் நின்றன். 'மாப்ள, இது டேன்ஜர் ஸோன். இதற்குமேல் போகாதே... திரும்பிவிடு..' என்றது உட்குரல்.

நாய் ஓரடி முன்னால் போய் நின்று அவனைத் திரும்பிப் பார்த்து.

நாயா? மனசா?

'அட தைரியமாப் போ. கடைவாசலுக்குப் போ. பிஸ்கெட் வாங்கிப் போடு' அவ்வளவுதான். திரும்பி விட வேண்டும்.

மனைவி - கைத்தாங்கலுடன் ஒருத்தன் சாராயக் கடையிலிருந்து வெளி வந்தான். அவனைக் கொஞ்சியபடி 'பாத்து பாத்து' என அழைத்து வந்தாள் அவள்..

எனக்கு யாருமில்லை. யாருமேயில்லை. சட்டென்று சாராயக்கடைக்குள் நுழைந்தான்.

(தொடரும்)

திருவண்ணாமலை

படங்கள் :

ராஜன்

• சந்திப்புச்...

அன்னதானம்



● மு. நடராசன்,
பாண்டிச்சேரி - 8.

? தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக முன்னாள் கவர்னர் பாத்திமா பீவியைச் சமீபத்தில் சென்னையில் சந்தித்தது பற்றி..?

! 'இவர்கள் சந்தித்தால்'_ கற்பனை உரையாடல் எழுதச் சொல்கிறீரா?

● ஜோதி குமாரி,
சேலம் - 6.

? 'அருகதை இல்ல' என்ற வார்த்தையை முதல்வர் சட்டமன்றத்தில் பிரயோகிக்கலாமா?

! சட்டமன்றத்தில் அதைக் காட்டிலும் காட்டமான சொற்களெல்லாம் பேச அனுமதியும் இடமும் இருக்கிறது; ஆனால் எழுப்பப்பட்ட பிரச்னைக்கோ கேள்விக்கோ பதில் அளிக்க முடியாத சமயத்தில் பேசப்படும் வார்த்தைதான் 'அருகதை இல்லை'!

● பாலு, மதுரை -1.

? சமையல் என்றால் மட்டம் என்று இருந்ததை மாற்றி 'ஹோம் சயின்ஸ்' என்ற பெயரில் பாடமும் கல்லூரியும் ஆரம்பித்து, தொண்டுள்ளம் கொண்டு வாழ்ந்து மறைந்த ராஜம்மாள் தேவதாஸ் பற்றி..?

! அதனினும் முக்கியம், சமையல் மட்டுமே ஹோம் சயின்ஸ் அல்ல என்பதை உணர்த்தும் வகையில் அவர் பாடத்திட்டத்தை அமைத்த சிறப்புதான். முன்னோடியின் மறைவு கல்வித் துறையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்த கல்வியாளர்கள் அனுமதித்துவிடக் கூடாது.



• ... சிறப்பு!

● வ. பத்திரகாளி,
காவல்கிணறு புதூர்.

? ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா வழக்கிலிருந்து நரசிம்மராவ் விடுவிக்கப்பட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

! குற்றத்தை நிரூபிக்குமளவுக்கு வழக்கு வலிமையாக உருவாக்கப்படவில்லை என்றுதான் நீதிமன்றம் கூறியிருக்கிறது. மற்றவை உங்கள் ஊகத்துக்கு.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? ஆபீசில் வேலையே இல்லாமல் வெட்டியாக இருந்து கொண்டு சம்பளம் மட்டும் வாங்கும் அரசு ஊழியர்கள் 83 ஆயிரம் பேர் மத்தியபிரதேசில் மட்டும் இருக்கிறார்களாமே?

! மற்றப் பிரதேசங்களில என்ன வாழ்ந்தது? ஏறக்குறைய அதே கதைதான். ம.பியில் யாரோ துணிச்சலாகக் கணக்கெடுத்திருக்காங்களே; உருப்படியா அந்த ஒரு வேலை அங்கே நடந்திருக்கே!

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? நேரடிக் கொள்முதல் நிலையங்களை மீண்டும் திறப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை என ஜெயலலிதா விவசாயிகளின் வயிற்றிலடிப்பது சரியா?

! தஞ்சை டெல்டா விவசாயிகள் வானம் பார்த்த பூமியையும் கர்நாடக மறுக்கும் காவிரியையும் நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள். உற்பத்தி செய்ததைக் கெடாமல் பாதுகாத்து வைக்கும் வசதி அற்றவர்கள். அவர்கள் உற்பத்தி செய்ததை வாங்கிப் பாதுகாக்க அரசு முன்வராவிட்டால், வியாபாரிகள் நிர்ணயித்த விலைக்குக் கொடுத்து பெரு நஷ்டம் அடைவார்கள். ஜெ. வினை விதைக்கிறார்.

● நீ. ரேவதி, சென்னை - 24.●

? இன்றைய தமிழனால் ஒரு நாள் முழுவதும் வேற்றுமொழி கலவாமல் தமிழில் பேச முடியுமா?

! ஸாரி, கொஞ்சம் டிஃபிகல்ட்!

● ஏ. கருப்பண்ணன், மதுரை - 10. ❑

? இலங்கையில் உள்ளாட்சித் தேர்தல்களிலும் ரணில் விக்ரமசிங்கே கட்சி அபார வெற்றி பெற்

❑ ரூ. 100 பரிசு பெறுபவர்:
ஏ. கருப்பண்ணன்,
47/1, T.B. ரோடு,
மதுரை - 625 010.

• ரூ.50 பரிசு பெறுபவர்:
நீ. ரேவதி,
62, BE காலனி, இரண்டாவது
தெரு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

எதை ஊக்குவிக்கும்..?

றுள்ளது பற்றி...?

! மக்கள் நட்புறவு, சமாதானம், அமைதி இவற்றையே விரும்புவார்கள் என்பதற்குச் சான்று. ஆனால், இந்தச் சூழ்நிலையைப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப் பயன்படுத்தாமல் போனால் ஏற்படக் கூடிய பெரும் ஏமாற்றம், அடுத்த தேர்தலில் பிரதிபலிக்கும் என்பதை ரணில் மறக்கக் கூடாது.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'காங்கிரஸி'ல் மீண்டும் இணைவதைவிட அ.தி.மு.க.வில் சேருவது நல்லது' என்று நினைக்கும் த.மா.கா. தலைவர்களைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

! பணம் பாதாளம் வரை பாயும்; பணத்தாசை பசையுள்ள இடம் தேடும்.

• பே'சலாம்'!



● ஆர். அப்துல்சலாம், திருச்சி-20.

? 'ஜெ வீட்டில் 700 ஜோடி செருப்பு கைப்பற்றப்பட்டதாக கருணாநிதி சொல்வது உண்மைக்குப் புறம்பானது' என்று அமைச்சர் பொன்னையன் கூறியிருக்கிறாரே?

! செருப்புக் கடைக்குப் போய் வீடியோ எடுத்து டி.வியில காட்டினாங்களாம் _ சொல்றாரு! ஆட்சியில் யார் இருக்காங்கன்றதைப் பொறுத்து வழக்குகளின் போக்கு, தன்மை வீரியம் எல்லாமே மாறிடும் என்கிறபோது, பொன்னையன் மீசை மேலே கை போட்டு என்ன வேணுமானாலும் பேசலாம், சலாம்!




• மறைந்த முன்னோடி

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்.

? தராசுக்கு நெருங்கிய தோழி உண்டா?

! உண்டே... தர்ம தேவதை!



• 'விடுதலை' வீரர்!

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? 'முதல்வர் ஜெ — தோழி சசிகலா பெயரில் டாக்டர் 'ஜெ ஜெ — சசிகலா பேரவை' தொடங்கப்பட்டிருப்பது பற்றி...?

! பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்த கதைதான்! 'கலைக்கிறாயா? வழக்கைச் சந்திக்கிறாயா?' என்று அம்மா கேட்டுட்டாங்களே! என்னவெல்லாம் பசையுள்ள கனவு கண்டு பேரவை தொடங்கினாங்களோ! — ஹய்யோ பாவம்!

● கே. கணேசன், சென்னை _ 5.

? சென்னை சென்ட்ரல், எழும்பூர் ஸ்டேஷன்களில் சமூக விரோதிகளைக் கண்காணிக்க பொருத்தப்பட்டிருந்த காமிராக்கள் வேலை செய்யாமல், அதனால் கலர் டி.விகளில் கேபிள் இணைப்பு கொடுத்து ரெயில்வே போலீஸார் சினிமா பார்க்கிறார்களாமே?

! காமிராக்கள் வேலை செய்யாதபோது டி.விக்களையாவது பயன்படுத்தலாமே என்ற யோசனை அபாரமானதுதான் — கடமைகளில் குறுக்கிடாத வரை! காமிரா இயங்காவிட்டாலும் சமூக விரோதிகளைக் கண்காணிக்க போலீஸாரின் கண்கள் உள்ளன. அவை டி.வி. பார்த்துக் கொண்டிருந்து ஏமாந்துவிடக் கூடாது.

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? முதல்வர் ஜெயலலிதாவின் அன்னதான திட்டம் சோம்பேறிகளையும் பிச்சைக்காரர்களையும் தானே ஊக்குவிக்கும்?

! கோயில் பிரசாதம் பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் வழங்கப்படுவது தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம்தான். ஆனால் டேபிள் சாப்பாடு, மினரல் வாட்டர் உள்பட ஆடம்பர விருந்து என்பதெல்லாம் புதுசு. அதுவும் ஆரம்ப நாள் மட்டும்தான். போகப் போக கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிடும்.

நீங்கள் கேட்டவை _ தராசு



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

50 / 88, Panchali Amman Kovil Street,
Arumbakkam, Chennai - 600 106
Tel. Off: 475 5700, 475 1356, 475 5799
Cell No. : 98400 84363 / 98400 42174
Email: svhome1rediffmail.com



• 8 மாங்காய், 12 தென்னை, 2 கொய்யா, 2 சப்போட்டா, 30 தேக்கு மரங்கள் அடங்கிய மனை • 3 வருட இலவச பராமரிப்பு

10800 சதுர அடி Rs.2,25,000/-

பொன் விளையும் பூமி

வாரந்தோறும் குதூகலம், வருடந்தோறும் வருமானம், சிறிய முதலீடு.

காமதேனு பண்ணை

(75 ஏக்கர் பரப்பில் / 4½ கிரவுண்டு பழத்தோட்ட மனைகள்)
காங்குவார் சத்திரம் (ஸ்ரீ பெரும்புதூர் அருகே)

சிறப்பம்சங்கள் : • 5 வருட மரங்கள் காய்க்கும் நிலையில் • வளமையான செம்மண் பூமி • சுவையான நீர் 10 அடி ஆழத்தில் • ஒவ்வொரு மனைக்கும் தண்ணீர்குழாய் • ராஜீவ்காந்தி நினைவிடத்திலிருந்து 15 நிமிட பயணம் • சென்னை—பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை (NH 4) • வழியில் பொழுதுபோக்கு அம்சங்கள் : டேஷ் அன் ஸ்பிளாஷ் நீர் விளையாட்டு அரங்கம், பிளசெண்ட் டேஸ் கேபிள் கார், ரோலர் கோஸ்டர் விளையாட்டுக்கள், ராஜீவ் நினைவகம், தரமான ஹோட்டல்கள், ஹுண்டாய் கார் கம்பெனி மற்றும் செயிண்ட் கோபெயின் கிளாஸ் பேக்டரி • வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீபெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரத்திற்கு மத்தியில் • நன்கு திட்டமிடப்பட்ட மனைகள் • 4வது வருடத்திலிருந்து ரூ.3000/— ஆண்டு பராமரிப்பு செலவு • சுத்தமான பத்திரம்/ நம்பகமான நிறுவனம் • மிக நியாயமான விலை • உடனடி பத்திரப் பதிவு • மனையை பார்வையிட இலவச வாகன வசதி.

BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats" 27, Rathna Nagar,
Off Anna Salai, (Behind Apollo Cancer Hospital),
Teynampet, Chennai - 18.

Ph : 435 7721/ 31/61/81.
Fax.4353183.
Cell : 98400-44018
E-mail: blbestmail@vsnl.net
http://business.vsnl.com/blbestates

நன்மதிப்பில் முதலீடு

சிவகாமியின் சபதம்

பத்தொன்பதாம் அத்தியாயம்

வந்தான் குண்டோதரன்

படைகளின் முழக்கத்தைக் கேட்டதும், சற்றுப் பின்னால் வந்து கொண்டிருந்த ஆயனரும் புத்த பிக்ஷுவும் வேகமாக நடந்து வண்டியை நெருங்கி வந்தார்கள்.

முன்னணிப் படை கண்ணுக்குத் தெரிந்ததும், வண்டிச் சாலையில் ஒதுக்குப்புறமாக நின்றது. சிவகாமியும் அத்தையும் வண்டியிலிருந்து இறங்கி நின்றுகொண்டார்கள். படை வரும் முழக்கம் அத்தையின் காதில் விழாதபடியால், மற்றவர்களைப் போல் அவளிடம் பரபரப்பு இல்லை.

புத்த பிக்ஷு சாலை ஓரத்து மரத்தின் பின்னால் தெரிந்ததும் தெரியாததுமாக நின்றுகொண்டார். அவர் இராஜ வம்சத்தினரைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்பது போன்ற விரதங்கள் கொண்டவர் என்பது தெரியுமாதலால் அவர் மறைந்து நிற்பது பற்றி மற்றவர்களுக்கு வியப்பு ஏற்படவில்லை.

ஆனால், எல்லோருக்கும் மனம் ஒருவாறு கலக்கமடைந்துதான் இருந்தது. வருகிறது என்ன படை? எங்கே போகிறது? எதற்காக?

தெற்கே இருந்து வருகிறபடியால் அது வாதாபிப் படையல்ல என்பது நிச்சயம். பின்னே, யாருடைய படை?

காஞ்சியிலிருந்து கிளம்பி வருகிற வழியில் நம் பிரயாணிகள் பெரும்பாலும் யுத்தப் போக்கைப் பற்றியும், யுத்த

அமரர் கல்கி

முடிவு என்ன ஆகும் என்பதைப் பற்றியும் பேசிக்கொண்டு வந்தார்கள். யுத்தத்தை நினைவூட்டும் காட்சிகளே எங்கெங்கும் தோன்றி வந்தன.

சாலையில் ஜனநடமாட்டம் அதிகமாயிருந்தது. எல்லோரும் தெற்கு நோக்கிப் போகிறவர்களாகவேயிருந்தார்கள். அநேகமாக அவர்கள் அனைவரும் காஞ்சி நகரிலிருந்தும் காஞ்சிக்குச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் யுத்த நிலைமையை முன்னிட்டுப் புறப்பட்டவர்கள். அப்படிப் புறப்பட்டு வந்தவர்களிலே ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், ஆண்டிப்பரதேசிகள், கூனர், குருடர், காபாலிகர் முதலியோர் அதிகமாகக் காணப்பட்டார்கள்.

முக்கியமாகக் காபாலிகர்கள் வழியெல்லாம் பல்லவ இராஜ குலத்தைச் சபித்துக்கொண்டு போனார்கள். காஞ்சி நகரில் கள்ளுக் கடைகளை மூடித் தங்களை நகரை விட்டுத் துரத்திய குமார சக்கரவர்த்தியின் பேரில் அவர்கள் தங்களுடைய சாபங்களுக்குள்ளே மிகக் கடுமையான சாபங்களைப் பொழிந்துகொண்டு போனார்கள். நராதமர்களுக்குள்ளே அதமனான மாமல்ல நரசிம்மன் என்னும் சண்டாளனை ரணபத்திர காளிக்குப் பலி கொடுத்து, தாங்கள் மதுபானம் செய்யும் மாட்டுக் கொம்பிலே அவனுடைய இரத்தத்தை ஏந்திக் குடித்துத் தங்களுடைய பயங்கரமான மரண தாகத்தைத் தணித்துக் கொள்ளப் போவதாக அவர்களில் பலர் உரத்த சப்தம் போட்டு சப்தம் செய்தார்கள். இன்னும் சிலர் மாமல்ல நரசிம்மனையும் தளபதி பரஞ்சோதியையும் சேர்த்துக் கட்டி மயானருத்திரனுக்குப் பிரீதியாக உயிரோடு கொளுத்தி அவர்களுடைய எலும்புச் சாம்பலைத் தங்கள் உடம்பெல்லாம் பூசிக்கொண்டு உஷ்ணம் தணியப் போவதாகச் சபதம் செய்தார்கள். இந்தச் சாபங்கள், சபதங்கள் எல்லாம் பிராகிருத பாஷையிலும் வேறு கலப்பு மொழிகளிலும் செய்யப்பட்டதானது, அந்தக் காபாலிகர்கள் வடதேசத்திலிருந்தும் மேற்குப் பிராந்தியத்திலிருந்தும் வந்தவர்கள் என்பதைத் தெரியப்படுத்தியது.

சிவகாமிக்கு ஆங்காங்கு வண்டியில் பிரயாணம் செய்தபடியாலும், அவளுடைய உள்ளம் வேறு வேறு உலகங்களில் சஞ்சரித்துக்கொண்டிருந்தபடியாலும், அவளுடைய காதில் அந்தப் பயங்கர சாபங்கள் ஒன்றும் விழவில்லை ஆனால் ஆயனருடைய காதில் அவை எல்லாம் கர்ண கடூரமாக விழுந்தன. அவற்றைக் கேட்கச் சகிக்காமல் அவர் காதைப் பொத்திக் கொண்டார்.

புத்த பிக்ஷுவின் செவிகளுக்கு மட்டும் அந்தச் சாபங்கள் எவ்வித அருவருப்பையும் அளித்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, அவருடைய முகத்தின் கடூரத்தை இன்னும் கடூரமாக்கிக்கொண்டு சில சமயம் புன்னகை தோன்றியது.

பிக்ஷு ஒரு தடவை காபாலிகர் கூட்டத்தில் புகுந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு, வெளிவந்து ஆயனரை அணுகியதும், "ஆயனரே! எப்போதாவது நான் புத்த சமயத்தைத் துறந்து சைவனாகும் பட்சத்தில், காபாலிகத்திலேயே சேர்வேன்!" என்றார்.

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த ஆயனர், "சுவாமி! அத்தகைய எண்ணம் தங்களுக்கு ஏன் வர வேண்டும்? புத்த சமயத்தின் மீது தங்களுக்கு என்ன கோபம்? யுத்தங்களினால் ஏற்படும் சங்கடங்களையும் துன்பங்களையும் பார்க்கப் பார்க்க, புத்த பகவான் காட்டிய அஹிம்சா மார்க்கமே உத்தமமான மார்க்கம் என்றல்லவா எனக்கே இப்போது தோன்றி வருகிறது!" என்றார்.

"அதனாலேதான் நானும் சொல்லுகிறேன். நீங்கள் கால சம்ஹார மூர்த்தியைக் கைவிட்டுப் புத்த பகவானை அடைவதாயிருந்தால், அதற்குப் பிரதி



யாகக் காபால ருத்திரமூர்த்திக்கும் ஓர் அடியார் வேண்டுமல்லவா?'' என்று நாகநந்தி கூறியது ஆயனருக்கு மேலும் மனக்குழப்பத்தை உண்டாக்கிற்று.

சாலையில் அபூர்வமாய்த் தெற்கே யிருந்து வரும் பிரயாணிகள் சிலர் காணப்பட்டபோது அவர்களைக் காஞ்சிக்குப் பக்கமிருந்து வருகிறவர்கள் நிறுத்தி "தெற்கே என்ன விசேஷம்?'' என்று கேட்பார்கள். அவர்கள் மறுமொழி சொல்லிவிட்டுக் காஞ்சி நிலைமையைப் பற்றி விசாரிப்பார்கள். இத்தகைய பேச்சுக்களையெல்லாம் நாகநந்தி ஆங்காங்கு நின்று வெகு சுவாரஸ்யமாகக் கவனிப்பார்.

இப்படி ஒரு தடவை கூட்டத்தில் நின்று பேச்சு கேட்ட பிறகு, நாகநந்தி, ஆயனர் சிவகாமி இருவர் காதிலும் விழும்படியாக, "நாம் ஒன்று நினைக்க யுத்ததேவன் வேறொன்று நினைக்கிறான் போலல்லவா தோன்றுகிறது? உத்தேசித்தபடி நமது பிரயாணம் நடை பெறாது போலிருக்கிறதே!'' என்றார்.

"அப்படியா? புத்த தேவர் என்ன கருணை செய்கிறார்? அவருடைய திருவுள்ளம் என்ன?'' என்றார் ஆயனர்.

"அத்தையைப் போல் அப்பாவுக்கும், காது மந்தமாகி வருகிறது!'' என்று கூறிச் சிவகாமி புன்னகை புரிந்தாள்.

அந்த நகைச்சுவையை அனுபவித்த நாகநந்தி செவிடருடன் பேசுவது போன்ற உரத்த குரலில், "ஆயனரே! நான் புத்த தேவரைச் சொல்லவில்லை; யுத்த தேவனைச் சொல்கிறேன்'' என்றார்.

"அப்படியா? யுத்த தேவன் என்ன சொல்கிறார்? நம்மை வழிமறிக்கப் போகிறாரா?''

"அப்படித்தான்!'' என்று சொன்ன நாகநந்தி மறுபடியும் மெல்லிய குரலில் கூறினார்: "பல்லவ இராஜ்யத்துக்கு எதிர்பாராத ஆபத்துக்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. மேற்கே இருந்து கங்க நாட்டுச் சைனியம் படை எடுத்து வந்து எல்லைப்புறத்தில் நிற்கிறதாம். தெற்கே பாண்டிய மன்னர் பெரும்படை திரட்டிக்கொண்டு வருகிறாராம். பாண்டியர் சைனியம் கிழக்குச் சோழ நாட்டு எல்லைக்கே வந்துவிட்டதாம். வடதிசையிலிருந்து வரும் வாதாபி சைனியத்தைப் பற்றித் தான் உங்களுக்கே தெரியும். பல்லவ சைனியம் தப்பிப் பிழைப்பதற்கு இன்னும் ஒரே ஒரு திசைதான் பாக்கியிருக்கிறது...!'

''எந்தத் திசையைச் சொல்லுகிறீர்கள்?'' என்று ஆயனர் கேட்டார்.

"கிழக்குத் திசையைத்தான் சொல்லுகிறேன்; கிழக்கே சமுத்திர ராஜனிடம் வேணுமானால் மகேந்திர பல்லவர் அடைக்கலம் புகலாம்.''

"சமுத்திரத்திலே விழுந்து சாகலாம் என்கிறீர்களா? அடிகளே! உங்களுடைய இருதயம் இப்படி ஈரப் பசையே இல்லாத பாலைவனமாக எப்போது ஆயிற்று?'' என்று ஆயனர் கோபக் குரலில் கூறினார்.

"ஓ! மகா ஸ்தபதியே! என்னை அவ்வளவு நீச குணமுள்ளவன் என்று ஏன் தாங்கள் கருத வேண்டும்? பல்லவ குலம் கடல் தந்த குழந்தையிலிருந்து தோன்றியதாயிற்றே? இப்போது அந்த வம்சத்துக்கு ஆபத்து வந்திருக்கும் சமயத்தில் அந்தக் கடல் அடைக்கலம் தராதா என்று சொன்னேன். கடலில் அடைக்கலம் என்றால் கடலில் முழுகி விடுதல் என்றுதான் பொருளா? கப்பல் ஏறி இலங்கைக்குப் போய்த் தப்பலாமல்லவா? ஆனால், அதற்கும் ஓர் ஆபத்து இருக்கிறது. இலங்கையில் இப்போதுள்ள அரசன் மகேந்திர பல்லவரின் அருமைச் சிநேகிதன்தான். ஆனால், அவனை இலங்கைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளிவிட ஒரு பெருங் கலகம் அங்கே நடக்கிறதாம். பாவம்! பல்லவர்களுக்கு வந்திருக்கும் கஷ்ட காலம் அவர்களுடைய சிநேகிதர்



"களைக் கூடப் பீடிக்கிறதே" என்று கூறி விட்டுப் புத்த பிக்ஷு ஒரு கோரச் சிரிப்புச் சிரித்தார்.

ஆயனர் அப்போதும் விட்டுக் கொடுக்காமல், "எதற்காக மகேந்திர பல்லவர் இலங்கைக்கு ஓட வேண்டும்?" காஞ்சிக்கோட்டை இருக்கிறதல்லவா?" என்றார்.

"ஆமாம்; காஞ்சிக்கோட்டை இருக்கிறது. அதில் எட்டு மாதத்துக்கு முன்பு பயங்கொள்ளிப் பல்லவன் ஒளிந்துகொண்டதுபோல் இப்போது அவனுடைய தந்தையும் ஒளிந்துகொள்ளலாம். வாதாபிப் படை வழி தங்காமல் வந்திருந்தால் கோட்டை ஒரு நொடியில் தகர்ந்து போயிருக்கும். இப்போது கோட்டை பலப்பட்டுவிட்டது. ஆகையால், சில காலம் கோட்டைக்குள் பத்திரமாயிருக்கலாம். வாதாபிப் படை ஆறு மாதமாக வடபெண்ணைக் கரையில் என்ன செய்துகொண்டிருந்தது என்றுதான் தெரியவில்லை!" என்றார் புத்த பிக்ஷு.

இந்த வார்த்தைகள் எல்லாம் சிவகாமியின் செவிகளில் புண்ணில் கோல் இடுவது போல் விழுந்தன.

'கடவுளே! நாக்கிலே விஷமுள்ள இந்த நாகநந்தியின் கர்வத்தை அடக்க மாட்டாயா?' என்று வேண்டிக்கொண்டாள்.

புத்த பிக்ஷுவின் விஷயத்தில் சிவகாமியின் மனநிலை சஞ்சலமுள்ளதாயிருந்தது. அவரிடம் காரணமில்லாத அருவருப்பும் இன்னதென்று தெரியாத பயமும் அவள் மனத்தின் ஆழத்தில் குடி கொண்டிருந்தன. மாமல்லரைப் பற்றி அவர் கூறிய செய்திகளைக் கேட்ட பின் அவரிடம் அவளுடைய அருவருப்பு அதிகமாயிற்று.

இன்னொரு பக்கம் புத்த பிக்ஷுவின் விசாலமான உலக அனுபவமும், ஆழ்ந்த கலைஞானமும் அவரிடம் அவளுக்குப் பக்தியையும் மரியாதையையும் உண்டு பண்ணியிருந்தன. மேலும், தூர தூர தேசங்களெல்லாம் சென்று அங்கங்கே மகாசபைகளில் நாட்டியம் ஆடி, 'பரத கண்டத்தின் ஒப்பற்ற நடனராணி' என்று பெயரும் புகழும் பெறுவது பற்றிப் பிக்ஷு அடிக்கடி கூறி அவளுடைய உள்ளத்தில் திக்விஜயப் பகற்கனவுகளை உண்டு பண்ணியிருந்தார். அதெல்லாம் அவருடைய உதவியினாலேதான் சாத்தியமாகக் கூடும் என்பதும் உலகமறியாத சாதுவான தன் தந்தையினால் ஆகாது என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தன. எனவே புத்த பிக்ஷுவிடம் தன் மனத்தில் குடிகொண்டிருந்த அருவருப்பைப் போக்கிக் கொண்டு அவரிடம் சிநேக பாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவள் முடிவு செய்திருந்தாள்.

ஆனாலும், புத்த பிக்ஷு பல்லவ குலத்தைப் பற்றியும், மாமல்லரைப் பற்றியும் அடிக்கடி கூறிய வசைமொழிகள் அவளுடைய சிநேக முயற்சிக்குக் குறுக்கே நின்று அருவருப்பை வளர்த்து வந்தன.

வாதாபிப் படை, வடபெண்ணைக் கரையில் ஆறு மாதமாக இருந்தது பற்றிப் புத்த பிக்ஷு குறிப்பிட்டதும் சிவகாமி ஆத்திரமான குரலில், "சுவாமி! வடபெண்ணைக்குப் போய் வாதாபிப் படைகளை நீங்களே கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வந்து விடுவீர்கள் போலிருக்கிறதே! பல்லவ குலத்தின் மேல் உங்களுக்கு என்ன அவ்வளவு கோபம்?" என்று கேட்டாள். பிக்ஷு சாந்தமான குரலில், "பல்லவ குலத்தின் மேல் எனக்கு என்னத்திற்கு அம்மா கோபம்? அவர்களுடைய கையாலாகாத்தனத்தினால் இப்போது நாம் நினைத்து வந்தபடி பிரயாணம் செய்ய முடியாமலிருக்கிறதே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. சிதம்பரத்துக்குப் போய் அங்கிருந்து கீழைச் சோழ நாட்டு ஸ்தலங்களைத் தரிசனம் செய்துகொண்டு



நாகப்பட்டினத்தில் நடக்கப் போகும் மகாபுத்த சங்கத்துக்கு உங்களை அழைத்துப் போவதாகச் சொன்னேனல்லவா? இப்போது பாண்டிய சைனியம் கீழைச் சோழ நாட்டில் படையெடுத்து வருவதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் நாம் சோழ நாட்டுக்குப் போவது உசிதமா என்றுதான் யோசிக்கிறேன்'' என்று கூறினார்.

"பின்னே, நாம் என்னதான் செய்யலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று ஆயனர் கேட்டார்.

"கெடில நதிக்கரையில் ஓர் அமைதியான இடம் இருக்கிறது. தங்களுடைய சிற்ப வேலைகளை நடத்துவதற்கும் அங்கே நிறைய வசதி உண்டு. குன்றுகளும் பாறைகளும் ஏராளமாய் இருக்கின்றன. இந்த யுத்தக் குழப்பமெல்லாம் முடியும்வரையில் நீங்கள் அங்கே இருக்கலாமென்று நினைக்கிறேன்'' என்றார் பிக்ஷு.

பிக்ஷுவிடம் வரவரச் சந்தேகம் அதிகம் கொண்டு வந்த ஆயனர் "போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம், சுவாமி!'' என்றார்.

இப்படியெல்லாம் அவர்களுக்குள் இரண்டு தினங்களாகச் சம்பாஷணை நடந்திருந்தபடியால், எதிரே படை வரும் சப்தம் கேட்டதும் ஒருவேளை படையெடுத்து வரும் பாண்டிய சைனியந்தானோ அது என்று ஆயனரும் சிவகாமியும் ஐயுற்றார்கள். ஆனால், முன்னணியில் பறந்த கொடியில் ரிஷபத்தைப் பார்த்ததும் பல்லவர் படை என்று எல்லாருக்கும் தெரிந்துவிட்டது. படை வீரர்கள் எழுப்பிய கோஷங்கள் இதை உறுதிப்படுத்தின.

''வாதாபி அழிக!''

''புலிகேசிக்கு நாசம்!''

''துர்விநீதனுக்கு துர்மரணம்!'' என்னும் கோஷங்களையும்,

''காஞ்சி வாழ்க!''

''மகேந்திர பல்லவர் வாழ்க!''

''மாமல்லரின் வீரத் தோள் வெல்க!'' என்னும் முழக்கங்களையும் மாற்றி மாற்றி அந்த வீரர்கள் எழுப்பிக் கொண்டு கம்பீரமாக நடந்தார்கள்.

இந்தக் குரல் ஒலிகளுக்கு இடையிடையே பேரிகை முதலிய யுத்த வாத்தியங்கள் எட்டுத் திக்கும் எதிரொலிக்கும்படி ஆர்த்தன.

மேற்படி கோஷங்கள் எழுந்தபோது மரத்தின் பின்னால் மறைந்திருந்த நாகநந்தியடிகளின் முகத்தை யாரும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால், படமெடுத்து ஆடும் நாக ஸர்ப்பத்தின் தீக்ஷண்யமான கண்களிலிருந்து தீப்பொறி கிளம்புவது போல் அவருடைய கண்களிலிருந்தும் பொறி கிளம்பிக் கொண்டிருந்ததைக் கவனித்திருக்கலாம்.


படை சின்னப் படைதான்; நாற்பது ஐம்பது குதிரைகளும் இரண்டாயிரம் காலாட்களும் இருக்கலாம். எனவே, அரை நாழிகைக்குள் நமது பிரயாணிகள் நின்றிருந்த இடத்தைத் தாண்டி படை சென்றுவிட்டது.

சற்று முன் கலகலப்பாக இருந்த சாலையில் நிசப்தம் குடிகொண்டது. பெரிய நகரத்திலிருந்து திடீரென்று நிர்மானுஷ்யமான காட்டுக்குள் வந்துவிட்டது போல் தோன்றியது.

படை வீரர்கள் எழுப்பிய கோஷங்களில் ''மாமல்லர் வாழ்க!'' ''மாமல்லரின் வீரத் தோள் வெல்க!'' என்னும் கோஷங்கள் சிவகாமியின் உள்ளத்தில் பெருங்கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன. மாமல்லர் பயங்கொள்ளியாயிருந்தால் பல்லவ வீரர்கள் அவரைப் பற்றி இம்மாதிரி வீர கோஷங்களைச் சொல்வார்களா?

''ஆயனரே, போகலாமா? அசோகபுரம் இன்னும் ஒரு நாழிகை தூரம் இருக்கிறது!'' என்று நாகநந்தியின் குரல் கேட்டது.

''ஆகா! போகலாமே! சிவகாமி!



அருள்வாக்கு

ஏது இன்றியமையாதது, எதெது இல்லாவிட்டாலும் வாழ்க்கை நடத்த முடியும்; எதெதுகள் இல்லாமலும் நம் அப்பன் பாட்டனெல்லாரும் சந்தோஷமாகவே வாழ்ந்தார்கள் என்று ஆலோசித்துப் பார்த்துத் தேவைகளைக் குறைத்துக்கொண்டு வாழ வேண்டும். முதலில் சிரமமாக இருக்கும். சபலங்கள் இழுத்துக் கொண்டு தான் இருக்கும். இருந்தாலும் தாயான அம்பாளை வேண்டிக் கொண்டு, அநுக்ரஹ பலத்தில் தேறித் தெளிந்து ஜயிக்க வேண்டும். அப்புறம்தான் இந்த எளிய வாழ்க்கையில் எத்தனை நிம்மதி இருக்கிறதென்று தெரியும். போக்ய வஸ்துக்களைத்தேவை தேவை என்று சேர்த்துக்கொண்டே போனால் அப்புறம் வீடு பெரிசாகப் பார்க்க வேண்டியிருக்கிறது; அதனால் வாடகைச் செலவு ஏறுகிறது. இப்படி ஒன்றிலிருந்து ஒன்றாக நமக்கே வருமானம் போதாமல் ஆக்கிக் கொண்டால் பரோபகாரம் பண்ணி நம் கர்மாவைக் கழுவிக் கொள்வதெப்படி? அநாவசியங்களை எல்லாம் கழித்துக் கட்டிவிட்டால் நமக்கும் நிம்மதியாக, பிறருக்கும் உதவியாக ஜன்மாவை உயர்த்திக் கொள்ளலாம்.



அம்பாள் தாயாக, அந்த ஒரே தாயாருக்கு நாம் அத்தனை பேரும் குழந்தைகளாக, ஒரு குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் இருந்தால் அவை ஒட்டிக் கொண்டு இருக்கிறாற் போல், ஒருத்தருக்கொருத்தர் உபகாரம் பண்ணிக் கொண்டு வாழலாம். இந்த உபகாரம்தான் என்று generalise பண்ண வேண்டியதில்லை. அவாளவாள் ஸ்திதியில் எது ஸாத்யமோ அந்த உபகாரத்தைச் செய்துகொண்டு ஆனந்தமாக வாழலாம்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்**

வண்டியில் ஏறிக்கொள். அத்தையையும் ஏறச் சொல்' என்றார் ஆயனர்.

சிவகாமி வண்டியில் ஏறாமலே, "அப்பா! இந்தப் படை வீரர்கள் எங்கே போகிறார்கள்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியவில்லை, அம்மா! பார்த்தால், யுத்தத்துக்குப் போகும் படையாகத் தோன்றுகிறது. அந்த வீரர்கள் செய்த யுத்த கோஷங்களைக் கேட்ட போது எனக்குக் கூடக் கல்லுளியைப் போட்டுவிட்டுக் கத்தியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது. எதற்காக இப்படிப் பயந்து ஊரை விட்டு ஓடுகிறோம் என்று வெட்கமாயிருக்கிறது" என்றார் ஆயனர்.

"ஆயனரே! இத்தகைய சஞ்சலம் உமக்கு எப்போது வந்தது? சற்று முன்னால் அஹிம்சா மூர்த்தியான புத்த பகவானிடம் உமது அபார பக்தியைத் தெரிவித்துக் கொண்டீரே?" என்றார் புத்த பிக்ஷு.

அந்தச்சமயத்தில், சாலையில் படை மறைந்த திக்கிலிருந்து ஒரு தனிக்குதிரை வரும் சப்தம் 'டக்டக்' 'டக்டக்' என்று கேட்டது. வர வர அது சமீபத்து வந்தது.

வருகிறது யார் என்று தெரிந்து கொள்வதில் அவர்கள் எல்லாருக்குமே ஆவல் இருந்தபடியால் நின்ற இடத்திலேயே நின்றார்கள்.

குதிரை அவர்களுடைய அருகில் வந்தது. குதிரையின் மேல் இருந்தது இன்னார் என்று தெரிய வந்தபோது ஆயனருக்கும் சிவகாமிக்கும் உண்டான வியப்புக்கு ஆளவேயில்லை.

ஏனெனில், குதிரை மேல் இருந்தவன், அவர்களுடைய அரண்ய வீட்டிற்குப் பரஞ்சோதி வந்த தினத்தில் அவர்களிடம் சொல்லிக் கொள்ளாமலே மாயமாய் மறைந்த குண்டோதரன்தான்.

"குருவே! நான் என்ன தவறு செய்தேன்! என்னை இப்படி அநாதையாய்க் கைவிட்டு விட்டுச் சொல்லாமல் புறப்பட்டு வந்து விட்டீர்களே!" என்று அலறினான் குண்டோதரன்.

(தொடரும்)





• விசிறி சாமியார்

ஆசிரமம் ரகசியங்கள்



'ஜோதி மலை' என்று பெயர் பெற்று விளங்கும் அருணாசலத்தின் தென்புறச்சாரலில் அமைந்திருக்கிறது ஸ்ரீரமணாசிரமம். தியான அமைதி என்று சொல்வார்களே அப்படியொரு நிச்சலன அமைதி நிலவுகிறது அங்கே. இத்தனைக்கும் பக்தர்கள் வந்தபடியும், சென்றபடியும், ஆங்காங்கே அமர்ந்தபடியும் இருக்கின்றனர். ஆனால் அவர்களின் பாத ஒலியோ, ஆடை சரசரக்கும் ஒலியோகூட அங்கே மாயமாய் மறைந்துவிடும் அதிசயத்தை நேரில் கண்டுணர்தலே இன்பம்.

நம் கால்களின் ஊடே, மானுட பயமற்று அமைதியாய் நடந்து போகிற மயில்கள் ஆச்சர்யமூட்டுகின்றன. உலகெங்கிலுமிருந்து அமைதி தேடி வரும் மனிதப் பறவைகளைப் போலவே, ஆசிரம வளாகத்தில் சாந்தமாய்த் திரியும் மயில்கள் தாமே ரமணாசிரமம் தேடி வருகின்றன. ஆசிரமத்தின் உள்ளே மெள்ள நடந்தால், ஸ்ரீரமணரின் தாயார்; அன்னை அழகம்மையாரின் சமாதி, அழகிய சிற்பக் கோவிலாக, முதலில் எதிர்ப்படுகிறது. அக்கோவிலின் முகப்பிலேயே, சிறுவயதில் ரமணருக்கு ஏற்பட்ட மரண அனுபவம், ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் ஒரு சின்னஞ்சிறு கிராமமான திருச்சுழியில், பிறந்த வெங்கட்





ராமனுக்குப் படிப்பில் அவ்வளவாக நாட்டமில்லை. பதினாறாவது வயதில் அவர் தம் சிறிய தந்தையின் வீட்டு மாடியில் உட்கார்ந்திருந்தார். உடலிலே நோய் ஒன்றுமில்லை. ஆனால் திடீரென்று ஏதோ ஒருவித பயம் உள்ளத்தில் எழுந்தது. தான் மரணத்தருவாயில் இருப்பதாகத் தோன்றியது. ஆனால் பெரியவர்கள் யாரிடமும் இதைப் பகிர்ந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வு பற்றி மனத்தில் எழுந்த சந்தேகங்களைத் தாமே தீர்த்துக் கொள்ள விரும்பினார். பிற்காலத்தில் இவ்வனுபவம் குறித்து அவரே விவரித்திருக்கிறார்.

''திடீரென்று ஏற்பட்ட இச்சம்பவம் என்னைத் தீவிர யோசனையில் ஆழ்த்தியது. 'சரி; சாவு நெருங்கிவிட்டது. சாவு என்றால்என்ன? எது சாகிறது? இந்த உடல்தானே செத்துப் போகிறது' என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு, உடனே மரணானுபவத்தை முழு மனத்தோடு, துணிச்சலாய் ஏற்று, அதை எனது உடலில் பாவித்துப் பார்த்தேன். பிணமாய்க் கைகால்கள் விரைத்து சப்தமற்று, சலனமற்றுக் கிடக்கிறது









• ஸ்ரீரமணர்

என் உடல். ஆனால் இந்த உடலுக்கு அப்பாற்கூட 'நான்' என்ற சொரூபத்தின் சக்தியும், தொனியும் ஒலிக்கிறதே! ஆகவே 'நான்'தான் ஆத்மா. அது உடலுக்குள் கட்டுப்படாத ஒரு வஸ்து என்ற முடிவுக்கு வந்தேன். இவையெல்லாம் வெறும் மனப்பிரமையல்ல. நிதர்சனமான உண்மை அனுபவமென்று தெளிவாய் விளங்கியது" என்ற ரமணரின் வார்த்தைகள் அங்கே பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரைமணி நேர அனுபவம்தானே! மரண பயம் வென்று காட்டிய, உடலை மதியாத உயர் யோகியான ரமணரை நமக்குத் தந்தது. ரமணரின் மரணானுபவத்தைப் படித்து முடித்ததும், இதயம் இறகு போல் இலேசாகிறது...

அவரது அன்னையின் ஆலயத்தை வலம் வருகிறோம். பதினாறு வயதில் வீட்டை விட்டு வெளியேறிய தம் மகனைத் தேடி திருவண்ணாமலை வந்த பாசத்தாய், பின்னாளில் ரமணரையே தம் ஞானகுருவாக உணர்ந்துகொண்டு, ஒரு சாதாரண ஆசிரமவாசியாக வாழ்ந்தார் என்பதை அறியும்போது இதயம் சிலிர்க்கிறது. அன்னையின் கோவிலை அடுத்து மகரிஷியின் சமாதி! பேரானந்தம் தேடி அங்கே வருபவர்களின் இதயம் போல விசாலமான ஹாலுடன் தூய்மையாக இருக்கிறது. ஆங்காங்கே தியானத்தில் அமர்ந்திருக்கிறார்கள் உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள். நம் கண்களில் அதிகம் தென்படுவோர் ஐரோப்பிய பக்தர்கள். உலக இன்பங்களில் தோய்ந்து கிடந்துவிட்டு அமைதி தேடி அலையும் சமூகத்தின் பிரதிநிதிகளைப் போல தோற்றமளிக்கும் இவர்கள் எதைத் தேடி இங்கே வருகிறார்கள்?

"நான் மட்டுமல்ல இந்த கேள்விக்கு இங்கே வருகிற யாருக்கும் பதில் தெரியாது. ஆனால் ஆசிரமத்தில் தங்கும்போது அளவற்ற ஆனந்தமும், மன அமைதியும் ஏற்படுவதை அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்வார்கள், நான் உட்பட" என்கிறார் ஆறு வருடமாக திருவண்ணாமலையிலேயே தங்கிவிட்ட பிரெஞ்சு தேசப் பெண்மணி சாந்தல்.

"உளப்பூர்வமாக அமைதி தேடி வருகிறவர்களுக்கு உணவு, உறைவிடம் போன்ற குறைந்தபட்ச வசதிகளைச் செய்து தருவதுதானே எங்கள் பணி! இதற்கு எந்த விதிமுறைகளும் கிடையாது. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், இரண்டு, மூன்று நாட்கள் தங்கிச் செல்கிறார்கள். திருவண்ணாமலையிலேயே தங்கிக் கொண்டு தினசரி வந்து போகிறவர்களும் இருக்கிறார்கள். வர முயன்றும் முடியாதவர்களுக்கு உலகம் முழுவதுமுள்ள ரமணக்கேந்திரங்கள் ஆறுதல் அளிக்கின்றன" என்கிறார் ஆசிரமத்தின் தலைவர் வி.எஸ். ரமணன்.



• சேஷாத்ரி சுவாமிகள்

யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் வெகு அருகிலேயே உள்ளது. திருவண்ணாமலை அக்ரஹாரக் கொல்லைப் பகுதியை நெருங்கும்போதே ஆசிரமத்தின் இதயமாக தாமரை மலரையொத்த வடிவத்தில் தெரிகிறது பிரதான ஆராதனை அரங்கம். ஒரே நேரத்தில் பத்தாயிரம் பக்தர்கள் கூடி பிரார்த்தனை செய்ய ஏற்ற வகையில் மாபெரும் அரங்கமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அரங்கத்தின் நடுவே யோகியாரின் வலக்கை உயர்த்தி ஆசிர்வதிக்கும் முழு உருவச்சிலை.

"என் தந்தை ஒருவரே; நிலைத்து நிரந்தரமாய் அனைத்துமாய் இருக்கிறார். வேறு எதுவுமில்லை. வேறு யாருமில்லை" என்ற அவரது அழுத்தம் திருத்தமான போதனை, பேதமற்று இங்கே வரும் பக்தர்களை ஒன்றாக இணைக்கிறது. தம்மைப் பிச்சைக்காரன் என்று கூறிக்கொண்டு, தம் தந்தையிடம் பிச்சை பெற்று பிச்சாண்டவராக பக்தர்களுக்கு அருள் புரிந்தவரின் சமாதியை அதிஷ்டான மந்திராக நிர்மாணிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஆசிரமம் ஓர் அழகிய தோட்டமாய் உருப்பெற்று வருவதைக் கண்டுகளித்தபடி அங்கிருந்து ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆசிரமம் நோக்கிப் புறப்படுகிறோம்.

அது மதிய வேளை என்பதால் ஆசிரமத்தின் அன்னதானத்தில் பசியாறி வெளியேறிக் கொண்டிருந்தனர் சாதுக்கள். ஆசிரமத்தின் எழில் மிகு நுழைவாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் அரச மரமும், வேம்பும் பின்னிப் பிணைந்து விருட்சமாய் நிற்க அதன் கீழ் நாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருந்து சுவாமிகளின் மஹா சமாதியும் தியான மண்டபமும் மிக அருகாமையிலேயே இருக்கின்றன. சுவாமிகளின் சமாதியை ஒட்டியே இருபத்து இரண்டு மகான்களின் சமாதிகள் இருப்பதாக நம்பிக்கை. ஒரு காலத்தில் இந்தக் கூடம் சுடுகாடாக இருந்ததாகச் சொன்னார் ஆசிரமத்தின் செயலர் இரா. முத்துக்குமாரசாமி.

"ஞானிகள், சித்தர்கள் போன்றோரின் ஜீவ சமாதி சுடுகாட்டிலோ, அல்லது சுடுகாட்டை



• முத்துக்குமாரசாமி



• எஸ்.வி. ரமணன்

ஒட்டியோ இருக்க வேண்டும் என்று சொல்கிறார் திருமூலர். சேஷாத்ரி சுவாமிகள் திருவண்ணாமலையில் அலைந்துகொண்டிருந்த போது அவர் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தங்க மாட்டார். அவர் பின்னாளில் தங்கத் தேர்ந்தெடுத்தது இந்த இடத்தைத்தான். சுவாமிகளின் தீவிர பக்தர்களில் ஒருவரான கோட்டையூர் வீரப்பச்செட்டியார், அடிக்கடி சுவாமிகளைப் பார்க்க திருவண்ணாமலை வந்து செல்வார். அப்படியொருமுறை வந்தபோது இதே இடத்தில் அமர்ந்திருந்த சுவாமிகள், வீரப்ப செட்டியாரிடம் "இங்கே எனக்கொரு புதுவீடு கட்டிக்கொடு" என்று கேட்டிருக்கிறார். செட்டியாரோ குழப்பத்துடன் திரும்பிப் போனார். மறுமுறை அவரைப் பார்க்க எண்ணி திடீரென திருவண்ணாமலை புறப்பட்ட செட்டியார் ரயில் நிலையத்தில் வந்து இறங்கியதும் அன்றுதான் சுவாமிகள் மகா சமாதி அடைந்தார் என்று அவருக்குத் தகவல் கிடைக்கிறது.

அவரால் நம்ப முடியவில்லை. அவசர அவசரமாய் சுவாமிகளின் திருவுடலை வந்து தரிசித்தவருக்கு "புது வீடு கட்டிக் கொடு" என அருளியதன் அர்த்தம் விளங்க, அதே இடத்தில் சமாதி வைத்திருக்கிறார்கள். தாம் சமாதி அடையும் நாளன்றே தம் பக்தரை திருவண்ணாமலைக்கு வரவழைத்த சேஷாத்ரி ஸ்வாமிகள் தம் வாழ்நாள் முழுக்க தீர்க்க தரிசியாகவே விளங்கினார்'' என்கிறார் முத்துகுமாரஸ்வாமி.

இறக்கும் தருவாயில் தம் தாயார் உதிர்த்த அருணாசல மந்திரம் சேஷாத்ரி சுவாமிகளை, திருவண்ணாமலை நோக்கி வழி நடத்த, ஒரு முறையும் அருணாசலத்தின் பஞ்சமுகத்தைப் பார்க்காமலே அப்படியே அச்சாக வரைந்து வழிபட்டவர் இந்த ஞானமகான். அடிக்கடி சிரிப்பதும், மழையில் நனைவதும், வெயிலில் அலைவதும், குப்பைகளில் தூங்குவதும், பிண ஊர்வலத்தில பாடை சுமப்பதும் இவரின் இயல்புகள்.

"தூங்காதே தூங்கினால் எமன் பிடித்துப் போவான்" என்பார். 'ஞானியாகவே விழித்திரு' என்பதுதான் அதன் பொருளாம். சுவாமிக்கு எவரிடத்தும் தனிப்பட்ட நேசமும் இல்லை. வெறுப்பும் இல்லை. பசி, தாகம் இல்லை. ஏனெனில் உடலை மறந்தவர். தங்கக் கை சேஷாத்ரி என்று பிரபலமான சுவாமிகள். இவர் கைபட்டோர் குணமாயினர். கால்பட்ட இடங்கள் செழித்தன. இவர் கடைவீதிக்குச் சென்று கடைகளில் உள்ள கல்லாப்பெட்டியை விசிறி அடித்தால்... லாபம் பெருகும். கன்னத்தில் அறைந்தால் செல்வம் பெருகும்... திருமண வீட்டில் புகுந்தால் மாங்கல்யம் பலப்படும் என்பது வாழ்ந்த, வாழும் சாட்சிகள் சொல்லும் வரலாறு.

ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் ஆசிரமத்திலும் அபூர்வ அமைதி நிலவுகிறது. வடக்கிருந்து யாத்திரை வரும் பக்தர்கள் தங்கிச் செல்ல ஐம்பத்தாறு குடில்களோடு விளங்கி வரும் ஆசிரமத்தில் சாதுக்களுக்கு அன்னதானம் நடக்கிறது. அவ்வப்போது ஏழைகளுக்கு இலவசத் திருமணங்கள் நடப்பதைக் காணலாம். தினசரி ஹோமங்களும் நடக்கின்றன.

இந்தியாவிலேயே அதிக அறக்கட்டளைகளும் ஆசிரமங்களும் இருப்பது திருவண்ணாமலையில்தான் என்கிறது புள்ளி விவரம். அடிக்கொரு ஆசிரமம், தெருவுக்கு நான்கு அறக்கட்டளைகள் எனத் தோன்றி பணம் சம்பாதிக்கும் கேந்திரங்களாக மாறி வருவது புண்ணிய பூமியை மாசுபடுத்துவதற்குச் சமம் என்று நொந்து போய்ச் சொல்கிறார்கள் திருவண்ணாமலைவாசிகள். சில மூன்றாந்தர ஆசிரமங்கள், அறக்கட்டளைகளால், சிறந்த முறையில் இயங்கி வரும் அற நிறுவனங்களின் நம்பகத்தன்மையும் பாதிக்கப்படுவது பெரும் வேதனை.

— ஆர்.சி. ஜெயந்தன்

சப்தங்கள் இல்லாத சங்கீதம்!



கத்தியின்றி ரத்தமின்றிக்
காதலெனும் போர்க்களத்தில்
மத்தகத்து யானை என்னை
மாதரசி பணியவைப்பாள்!

புத்தகமாய்த் தனையாக்கிப்
பொன்மொழியால் எனையூக்கி
வித்தகனாய்ப் புகழ்தேக்கி
வெற்றிவலம் புரிய வைப்பாள்!

எத்துணைதான் குடும்பச்சுமை
இருந்திடினும் பகிர்ந்திறக்கிப்
பத்திரமாய் இல்வாழ்க்கைப்
பயணமதைத் தொடர வைப்பாள்!

முத்தங்களால் குளிப்பாட்டி
மூச்சுக்காற்றில் உடல்துவட்டிச்
சப்தங்களே இல்லாத
சங்கீத விருந்துவைப்பாள்!

சித்திரையின் முழுநிலவாய்ச்
சிந்தையினைக் குளிரவைத்து
இத்தரையில் எழுகதிராய்
என்வாழ்வை ஒளிரவைப்பாள்!

தளவை இளங்குமரன்



செம ஜாலியான குதூகல ஆனந்த சந்தோஷ இன்பம்!

✉ நாடி ஜோசியம், ஜாதகம், எண் ஜோதிடம், வாஸ்து எல்லாம் பார்த்து பகுத்தறிவுச் சிங்கம் சின்னராசுவின் சிலை நிறுவப்பட்டால் அச்சிலை சிரிக்காமல் என்ன செய்யும். தற்கால அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டியது 'சிலே உன் நிலே' சிறுகதை.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியம்

✉ ஒலிநாடா விமர்சனம் எழுதுகிறீர்கள் மகிழ்ச்சி. ஆனால் ஒலிநாடா எங்கு கிடைக்கும்? அதன் விலை என்ன என்று குறிப்பிடுவது கிடையாது. இனிமேல் ஒலி நாடா விமர்சனம் செய்யும்பொழுது அந்த தகவல்களையும் குறிப்பிடவும்.

அரசனங்காடு, ஜி.ராமமூர்த்தி

✉ 'சிரிக்கிறாங்கப்பா!' என நீங்கள் காட்டியிருந்த பஞ்சப் பிரபலங்களின் பஞ்சமில்லாத படா சிரிப்புப் படம் செம ஜாலியான குதூகல ஆனந்த சந்தோஷ இன்பம் தந்தது!

திருவண்ணாமலை, எல்.எம்.மங்கை

✉ நாட்டில் தண்ணீருக்குத்தான் பஞ்சம். செய்திகளுக்குக் கூடவா பஞ்சம்? டீ.வி. தொகுப்பாளினி அர்ச்சனாவின் படத்தை அட்டையில் வெளியிட்டு, இரண்டு பக்கத்தை ஒதுக்கியது படு வேஸ்ட். கல்கிக்குத் தேவைதானா? யோசியுங்கள்.

லால்குடி, இராஜேந்திரன்

✉ வெறும் சினிமா பி.ஆர்.ஓ. மட்டும் என நினைத்திருந்த சுராவுக்குள் இத்தனை இலக்கிய தாகமா!

திருப்பூர், பி. சிவக்குமார் பிரபு

✉ தேன்கூடு நிஜத் தேனைவிட சுவையாக இனிக்கிறது. குட்டிக் கதைகள் ஒரு ப்ளஸ் பாயின்ட்.

திருச்சி, ராஜி ராதா

✉ 'புதிய முதல்வர் பழைய போக்கு' தலையங்கம் தமிழக மக்களின் எண்ண ஓட்டங்களை சி.டி. ஸ்கேன் மூலம் மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியிருந்தது. ஆரோக்கிய அரசியலுக்கு ஆழ்ந்த அடித்தளம் அமைக்கும் ஆணித்தரமான ஆலோசனைகள் அளித்த அற்புதமான தலையங்கம்.

கும்பகோணம், சித்ரா கிருஷ்ணமூர்த்தி


• கூட்டம் கூட்டமாக

கிரிவலம் செல்லும் பாதையில்தான் எத்தனை சிறு தெய்வங்கள், ஆசிரமங்கள், ஜீவ சமாதிகள்...

● இடுக்குப் பிள்ளை யார் கோயில்! சுமார் ஒன்று அல்லது ஒண்ணே கால் அடியே அகலமுள்ள சிறு இடைவெளியில் ஒருவர் உட்புகுந்து வர வேண்டும். உள்ளே பிள்ளையார் சிலையோ அல்லது பீடமோ கிடையாது. தரையில் இரண்டு பாதங்கள் பதித்திருக்கிறார்கள். சித்தர்கள் நவபாஷணத்தால் யந்திரம் செய்து இதனடியில் பிரதிஷ்டை செய்துள்ளார் களாம். அது நல்ல ஆகர் ஷண சக்தி கொண்டதாம். அப்படி உடம்பை மடக்கி, நெளித்து வரும்போது, கிடைக் கும் அதிர்வு அலைகள் உட லுக்கு நல்லதாம். பௌர்ணமி அன்று ஒரு நீண்ட வரிசை இதில் புகுந்து வருவதற்காக காத்துக் கொண்டிருக்கும். அதில் நிற்கும் சிலரைப் பார்த்தால், 'ஐயோ மாட்டிக் கொண்டு விடுவார்களோ' என்று நமக்குப் பதைபதைக்கும்.


• மலைத் தோற்றம்

வலம் வரும் வழியில் வரம் தரும் தெய்வங்கள்!

ஆனால் இது வரை யாரும் மாட்டிக் கொண்டதில்லையாம். 'உன்னால் முடியும் தம்பி' என்று நம்பிக்கையூட்டுகிறார் இடுக்குப் பிள்ளையார்.

● 'சிவ, சிவா' ஆஸ்ரமத்தில் கோமணம் கட்டிக்கொண்டு நின்ற வடிவேலு சாமியைச் சந்தித்தோம்.

"ஆஸ்ரமத்தில் என்ன செய்கிறீர்கள்?" என்றதும் நம்மை அற்பப் பதராகப் பார்த்துச் சிரிக்கிறார். "சும்மாதான் இருக் கோம்..."

"சும்மா என்றால்..?"

"அதுதான் தம்பி, மனசுக்கு வேலை கொடுக்கக் கூடாது. அது வேலை செஞ் சாதானே ஆசை, கோபம், சோகம் எல் லாம் வருகிறது. எனவே மனசுக்கு வேலை கொடுக்காம நிம்மதியா இருக்கோம்" புரிஞ்சு போச்சு சாமி!

● வலம் வரும் பாதையில் உள்ள அஷ்ட லிங்க சன்னதிகளைச் சுமார் பத்து இருபது வருடங்களுக்கு முன்னர் யாரும் உட்புகுந்து பார்த்திருக்க முடியாது. அந்த அளவுக்கு மண் டபங்கள் சிதிலமடைந்து போயிருந்தன. எல்லா சன்னதிகளிலும், திருப்பணி செய்து, பக்தர்கள்

சென்று வருவதற்கு ஏற்ப வசதிகளைச் செய்து தந்ததில் மூப்பனார் சாமிகளுக்குப் பெரும் பங்கு உண்டு. கையில் மஞ்சள் பையை வைத்துக் கொண்டு தள்ளாத வயதிலும் தர்ம சிந்தனை உள்ளவர்களைத் தேடி அலைந்து நன்கொடை பெற்று அஷ்டலிங்க சன்னதிகளையும் ஒழுங்கு படுத்தியவர் இவர்தான். அதில் சிறப்பான விஷயம் என்னவென்றால், ஒரு ரூபாய் கொடுத்தவருக்கும் ஒரு லட்சம் கொடுத்தவருக்கும் சாமிகளைப் பொறுத்தமட்டில் ஒரே மரியாதை தானாம்!

● அஷ்டலிங்கமும் சிவனடியார்களை ஈர்க்கும் என்றாலும் கூட்டம் என்னவோ குபேர லிங்க தரிசனத்திற்காகத்தான். அப்படி ஒரு வரிசை! சன்னதியில் கன்னத்தில் போட்டுக் கொண்டு கையில் இருக்கும் சில்லறையை சாமிக்கு முன் வீசியெறிகிறார்கள். உள்ளே ஒரே சில்லறைக் குவியல். குபேரரைத் தரிசிக்க பொறுமையில்லாதவர்கள், சன்னதிக்கு வெளியே ஐம்பது அடி தொலைவில் கற்பூரம் ஏற்றி வைத்து, 'கவனிச்சுக் கோப்பா' என்று வணங்கி விடைபெற்றுவிடுகிறார்கள். அந்த இடத்தில் 'தங்களுக்காக' சில்லறை வசூல் செய்ய சில கிரிமினல் மூளைகள், நாலணா, எட்டணா என்று சில்லறை போட்டு வைக்கிறார்கள். அதைப் பார்க்கும் பக்தர்கள், வரிசையில் நிற்கும் பொறுமையில்லாமல், "இங்கேயும் காசு போடலாம் போலிருக்கிறது" என்று சில்லறை போடுகிறார்கள். அப்படி விழும் சில்லறைகளை ஸ்வாஹா செய்கிறது இந்த கும்பல். குபேர லிங்கத்தைப் பராமரிக்கும் பொறுப்பிலிருக்கும் ஈரோடு கந்தசாமி சாமிகளிடம் இந்தத் தகிடுதத்தத்தைச் சொன்னபோது 'அப்படியா?' என்று அதிர்ந்து போய்விட்டார்.



● இங்கு மலையே சிவன். கிழக்கு திசையில் இருந்து பார்த்தால் ஒன்றாகத் தெரியும் இந்த மலை, சுற்றும் வழியில் இரண்டாகப் பிரிந்து செல்கிறது. மேற்கு திசையில் இருந்து பார்த்தால் மூன்றாகத் தெரியும். சுற்றி முடிக்கும் இடத்தில் ஐந்து சிகரங்களைக் கொண்டு பஞ்ச முகலிங்கமாக காட்சியளிக்கிறது. சாட்சாத் சிவபெருமானே மல்லாந்து படுத்திருப்பது போல தோற்றம்.

● குபேரலிங்கத்தை அடைவதற்கு முன்னால் மலையை நோக்கி கம்பீரமாக அமர்ந்திருக்கும் அதிகார நந்தியைக் காணலாம். இங்கிருந்து மலையைப் பார்க்கும்போது மலை முகட்டில் பிள்ளையாரைச் செதுக்கி வைத்தது போன்ற தோற்றம் தெரிவது அதிசயம். நந்தியாரை வணங்கும்போது சில நியதிகளைக் கடைபிடிக்க வேண்டும். அவர் முகத்தின் எதிரே குறுக்காக அவரை கடக்கக் கூடாதாம். பின்புறமாக வந்து வணங்கிவிட்டு, பின்னர் அதே வழியில் சென்று விலகிச் செல்ல வேண்டுமாம். "பக்தர்கள் நந்தியின் காதில் தங்கள் விருப்பங்களைக் கூறுகின்றனர் - அவர், சிவபெருமானிடம் சொல்லி, பூர்த்தி செய்வார் என்ற எதிர்பார்ப்புடன்! ஆனால் அதுபோல செய்வது தவறு" என்கிறார் ஈரோடு சாமிகள்.

● கிரிவலப் பாதையில் இருக்கும் வள்ளலார் தெய்வ நிலையத்தில் ப்ரவசனம் செய்




• அதிகார நந்தி





• நடிகை விஜி நினைவுத் திருமண மண்டபம்



• லோபோ மாதா ஆலயம்

யும் அருள் மணி அடிகளாரைப் பக்தர்கள் அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாது. பௌர்ணமி அன்று வேக, வேகமாக வலம் வரும்போது ''அண்ணாமலையாரை மனத்தில் நினைந்து கொண்டு போங்கள். அன்றாடப் பிரச்னைகளைப் பற்றி வம்பளாக்காதீர்கள். இது பிக்னிக் ஸ்பாட் அல்ல' என்று அட்வைஸ் காதில் விழுமானால் அது அருள்மணி அடிகளாரின் குரலாகத்தான் இருக்கும். அவர் அப்போது அடிக்கும் சில காமெண்ட்கள் கசப்பான மாத்திரைகள். மலைப்பாதையில் வசிக்கும் சிவனடியார் திருக்கூட்டத்துக்குத் தினசரி மதியம் வயிறார இலவசமாக கஞ்சி ஊற்றும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது இந்த தெய்வ நிலையம்.

● லோபோ மாதா ஆஸ்ரமம்! அகத்திய முனிவர் மனைவியின் பெயரில் அமைந்த இந்த ஆஸ்ரமம் சென்னையைச் சேர்ந்த அருணாசலேஸ்வரர் பக்தர்களால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு. சென்னை சுற்று வட்டாரத்தில் சிவாலயங்களுக்குச் சென்று கிரிவலப் பெருமையை பக்தர்களுக்கு உணர்த்தி அவர்களை அண்ணாமலையாரைப் பார்க்கவும், கிரிவலம் செய்யவும் தூண்டுகிறது இந்த அமைப்பு. கிரிவலம் வருபவர்களுக்கு அன்னதானமும் உண்டு. ஆனால் உறுத்தல் என்னவென்றால் ஆஸ்ரமத்தில் உள்ள சொகுசு ஏர் கண்டிஷன் அறைகள்.

● கிரிவலப்பாதையில் இன்னமும் சில வருடங்களில் இரண்டு பக்கங்களிலும் பண்ணை வீடு ஆஸ்ரமம் என்று அமைந்து விடும் போலிருக்கிறது. மலையை ஒட்டியும், சாலையின் இடதுபுறம் குறிப்பிட்ட தூரம் வரையிலும் கட்டடங்கள் கட்டக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவு இருக்கிறது. இந்த உத்தரவு நிரந்தரமாக இருக்க வேண்டும் என்கிறார்கள் அண்ணாமலைவாசிகள். இந்த உத்தரவு இல்லையென்றால் இரண்டு பக்கமும் வர்த்தகமயமாகிவிடும் என்று பயப்படுகிறார்கள்.

● பழனி ஆண்டவர் கோயிலில் பௌர்ணமி அன்று அலங்காரம் கண்கொள்ளாக் காட்சி. பிருகு முனிவர் தவம் செய்த இடத்தில் அமைந்திருக்கிறது இந்தக் கோயில். புற்றுக் கோயிலில் வேண்டிக்கொண்டு மஞ்சள் கயிறு சாற்றினால் குழந்தைப் பேறு



• புற்றுக்கோயில்

நிச்சயம். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி, ஆஞ்சநேயர், ராகவேந்திரர், ராஜ ராஜேஸ்வரி என்று மலை வலம் வரும் பாதையில் அருள் தரும் தெய்வங்கள். அடிமுடி சித்தர், இசக்கி சித்தர், பிரம்மானந்தசாமி, ஈசான்ய தேசிகர், பாணிபத்திரர் மற்றும் பல மகான்களின் சமாதிகள். "அண்ணாமலையில் அடிக்கு ஆயிரத்தெட்டு சிவலிங்கம்" என்று சொல்வார்கள். தீவிர பக்தர்கள் திருவண்ணாமலை எல்லையைத் தொடும்போது காலணிகளைக் கழற்றி விடுகிறார்கள்.

● கொஞ்சம் உள்வாங்கி அமைந்திருக்கும் அடி அண்ணாமலையைத் தரிசனம் செய்ய பொறுமையில்லாமல், தெருமுனையில் அவருக்குக் கற்பூரம் ஏற்றிவிட்டு விரைந்து விடுகிறார்கள் பக்தர்கள். பிரம்மதேவனே தமது பாவம் தீர்க்க வேண்டி சிவபெருமானை நோக்கித் தவமிருந்தபோது அவருக்கு ஈசன் காட்சியளித்த இடம்தான் அடி அண்ணாமலை!

● மலைப்பாதையில் நூற்றுக்கணக்கில் காவியணிந்து வாசம் செய்கிறார்கள் சிவனடியார்கள். ஒவ்வொருவர் பின்னாலும் ஒரு கதை இருக்கிறது. ஆசிரமங்களிலும், மடங்களிலும் தினசரி அன்னதானம் இருப்பதால் இவர்கள் வயிற்றுபாட்டுக்குப் பிரச்னையில்லை. பௌர்ணமி நாளில் பத்து, பத்து பேராக வரிசையாக அமர்ந்து பக்தி சிரத்தையுடன் "ஓம் நமச்சிவாய" என்று பாடும்போது பக்தர்கள் பரவசமடைவது இயற்கை.

– கிரி



ஒன்பது கோபுரங்கள், மற்றும் ஏழு பிராகாரங்களைக் கொண்டு 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில். கிழக்கு வாசலில் விண்ணோக்கி வளர்ந்த ராஜ கோபுரம் 216 அடி உயரம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டியது. கிளிகோபுரம், வல்லாளகோபுரம், திருமஞ்சன கோபுரம், அம்மணி அம்மாள்

கொடிமர செலக்ஷனும்;

கோபுரம், மேல கோபுரம், மூலவர் அம்மன் சன்னதிகளின் மேல் உள்ள கோபுரங்கள் என்று நகரின் உயரமான இடத்தில் எங்கிருந்து பார்த்தாலும் கன்னத்தில் போட்டுக் கொள்ளத் தூண்டும் அளவுக்கு கம்பீரமாகத் தெரிகின்றன. கிட்டத்தட்ட ஆயிரத்து நூறு வருடங்களில் இந்த பிரம்மாண்ட ஆலயம் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. பல்லவர், சோழர், போசளர், கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில், பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள். அவற்றைப் பற்றிய முழு விவரங்களும் கோயில் சுவர்களில் கல்வெட்டுகளாக உள்ளன. 19ம் நூற்றாண்டில், 35 இலட்சம் செலவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தவர்கள் தர்ம காரியங்களுக்குப் பெயர் பெற்ற நாட்டுக்கோட்டை நகரத்தார்.


பல அதிசயங்களைத் தன்னுள் கொண்டது இந்த












ஆலயம். குறிப்பாக மூன்று மடப்பள்ளிகள். காலைச் சந்தி நைவேத்யம் ஒரு மடப்பள்ளியிலும், உஷத் காலம், அர்த்தஜாமம் ஆகியவற்றுக்கு நைவேத்யம் மற்றொரு மடப்பள்ளியிலும், மற்ற மூன்று கால பூஜைகளுக்கு மூன்றாவதாக இருக்கும் மடப்பள்ளியிலும் நைவேத்யம் தயாராகிறது. மூலவரின் வெளிப்பிராகாரத்திலேயே வேணுகோபால ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார். இந்த சிவ ஸ்தலத்தில் வைகுந்த ஏகாதசி அன்று

கோபுர வண்ணமும்!

சொர்க்க வாசல் திறப்பது அதிவிசேஷமாகக் கருதப்படுகிறது. சுவாமி வாகனங்களில் வீதி உலா வரக் கிளம்பும்போது ராஜ கோபுர வாயில் வழியாகச் செல்லாமல் பக்கத்தில் உள்ள மற்றொரு வாயில் வழியாகத்தான் வெளியே செல்கிறார். இரவு அர்த்த ஜாம பூஜை முடிந்ததும் மலை வடிவத்தில் வெள்ளி மேருவைத்தான் பள்ளியறை ஸ்வாமியாக இத் தலத்தில் அமைத்திருக்கிறார்கள். இப்படி ஏகப்பட்ட சிறப்புகளைக் கொண்ட இத் திருக்கோயிலுக்கு வருகிற ஜூன் இறுதியில் கும்பாபிஷேகம். எனவே கோயில் புதுப்பொலிவு பெற்றுக் கொண்டிருக்கிறது. வேக வேகமாகத் திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் மண்டபங்களைக் கடந்து கோயில் உள்கட்டுக்குச் சென்றால், ஏதாவது பஜாருக்கு வந்து விட்டோமோ என்று எண்ணும் அளவுக்குப் படக் கடைகள், லாட்டரி சீட்டு கடைகளாக இருக்கும். ஆனால் அவையனைத்தும், இப்போது காலி செய்யப்பட்டுவிட்டன. முக்கியமாக, கருவறை வரை வந்து துரத்தித் தொந்தரவு செய்யும் பிச்சைக்காரர்கள் அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர். ராஜ கோபுரத்தை





ஒட்டி யாரும் கடை போடாத வண்ணம் தடுக்கப்பட்டுள்ளனர். எல்லா சன்னிதிகளின் மேற்கூரைகளுக்கும் புதிய தளம் போடப்பட்டுள்ளது. கோயிலின் உள்ளே உள்ள இரண்டு திருக்குளங்களும் தூர் வாரப்பட்டிருக்கின்றன. ''நூறு சதவிகித திருப்பணி

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

அய்யோடா ஈமெயில்!

ஆஸ்கார் முடிவு 'அய்யோடா' என்றாகிவிட்டது. லகானுக்கு 'பெப்பே' சொல்லிவிட்டார்கள். பாவம், அமீர்கான்! நொந்து போயிருக்கும் அவருக்கு நம்ம ஊர் ஆஸ்கார் கனவு நாயகன் கமல் ஆறுதலாக ஓர் ஈமெயில் அனுப்பினால் என்ன எழுதுவார்? எழுதுங்கள்.

இரண்டு தமாஷ் வாசகங்களுக்குத் தலா நான்கு கிராம் தங்கம் நிச்சயம். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - 8 என்று குறிப்பிட்டு உங்கள் கமெண்டை எழுதி, முகவரியைக் குறிப்பிடுங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : 15.4.2002

ஆசிரியர் கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

செய்கிறோம்" என்கிறார் அறநிலைய உதவி ஆணையாளர் ஜெயராமன். 'ஆலயப் பணியே, அரசுப் பணி' என்று 24 மணி நேரமும் கோயில் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருக்கிறார் இளைஞரான ஜெயராமன்.

பொதுவான ஒரு காரியம் நடக்கும் போது நான்கு பக்கமும் விமர்சனக் கணை கள் வருவது சகஜம்தானே! லட்சக்கணக் கான பக்தர்களை ஈர்க்கும் அருணா சலேஸ்வரர் கோயில் திருப்பணியிலும், அது போன்ற விமர்சனங்கள் வருவது ஒன்றும் ஆச்சர்யமில்லை. சில காலத்துக்கு முன் புயற் காற்றால் கீழே சாய்ந்துவிட்ட கொடி மரத் துக்குப் பதிலாகப் புதிய கொடிமரம் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறது டி.வி.எஸ். நிறுவனம். ஆனால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கும் கொடிமரம் ஆகம விதிப்படி அமைய வில்லை என்று கோர்ட்டுக்குப் போய்விட் டார் பக்தர் ஒருவர்! பின்னர் கேஸ் தள்ளு படியாகிவிட்டது.

"ஆகம விதிப்படி தேக்கு மரத்திலும் கொடிமரம் அமையலாம். டி.வி.எஸ். நிறு வனத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ள கொடிமரம் 62 அடி உயரம், ஐந்தடி சுற்றளவு கொண்டது. ஒரே மரம். அதன் உயரம் மூலஸ்தானத்தின் கோபுரத்தில் உள்ள கலசம் அளவுக்கு இருக்கும்" என்கிறார்கள் அற நிலைய அதிகாரிகள். அதேபோல கோபுரங் களுக்குப் பஞ்சவர்ணம் அடிக்க வேண்டு மென்று காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திரர் சொன்னாராம். ஆனால் வேறு சில மடாதி பதிகளோ ஏக (ஒரே)வர்ணம்தான் அடிக்க வேண்டுமென்றார்களாம். இப்போது எல்லா கோபுரங்களுக்கும் ஒரே வர்ணம்தான் அடிக் கப்பட்டு வருகிறது. "கும்பாபிஷேகம் நடக்கப் போகிறது. இதுபோன்ற சர்ச்சைகள் தேவை யில்லையே" என்கிறார்கள் அதிகாரிகள்.

'அபிஷேகம், கல்யாண உற்சவம், ருத்ர அபிஷேகம் ஆகியவற்றைச் செய்ய வரும் பக்தர்களிடம் கோயில் சிவாச்சாரியார்கள் ஆயிரக்கணக்கில் பணம் பிடுங்கி விடுகிறார் கள்' என்ற புகாரும் இருக்கிறது. ஆனால் வசதியான சேவார்த்திகள் சிவாச்சாரியார் களை மகிழ்வித்து அவர்களுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்ள, கேட்டதைக் கொடுத்து விடுகிறார்களாம். சுவாமி மற்றும் அம்மனுக்கு அபிஷேகம் செய்ய கட்டணம் 1750 ரூபாய். சுவாமி, அம்மன், சண்டி கேஸ்வரர், முருகன், பிள்ளையார் ஆகிய

பஞ்ச மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்ய 3200 ரூபாய்.

"அபிஷேகத்துக்கு நாங்கள் உபயோகிக்கும் பொருட்களின் நீண்ட பட்டியலைப் பார்த்தால் தொகை மிகக் குறைவு என்று கட்டாயம் சொல்வீர்கள். இது தவிர மூர்த்திகளுக்குத் தங்கக் கவசமும் உண்டு. ருத்ர அபிஷேகம் என்றால் தங்கக் கவசம் மற்றும் அபிஷேகக் கட்டணம் (900 ரூபாய்) கட்டிவிட்டு ருத்திரம் சொல்லும் சிவாச்சாரியார்களுக்குத் தனியாக தட்சணை கொடுக்க வேண்டும். சிவாச்சாரியார்கள் எண்ணிக்கைக்கேற்ப தொகை அதிகரிக்கும். மக்கள் நேரடியாக அலுவலகத்துக்கு வந்து பணம் கட்டி அபிஷேகம் செய்ய வேண்டும். குருக்கள் மூலமாகப் பணம் கட்டக் கூடாது" என்று சொல்கிறார்கள் கோயில் ஊழியர்கள்.

கோயிலில் 365 நாட்களும் உற்சவம்தான். சிவன் அபிஷேகப் பிரியர் ஆயிற்றே! எல்லா நாட்களும் அபிஷேகக் கட்டளைகள் இருக்கின்றன.

குருக்கள் எல்லோரும் கண்காணிக்கப்பட வேண்டும் என்கிறார்கள் அண்ணாமலை அன்பர்கள்!

பிராகாரங்களில் திருப்பணி செய்யும்போது கல்வெட்டுச் சித்திரங்களுக்கு எந்த வித ஆபத்தும் இல்லாமல் பார்த்துச் செய்கிறார்கள். உட்பிராகார சுவரில் வீரன் வல்லாளன் குதிரையுடன் மகான் தெய்வ சிகாமணி தேசிக பரமாச்சார்யாரைப் பார்க்க வரும் கல்வெட்டு ஒன்று உள்ளது. அப்படி வரும்போது பாம்பு கடித்து குதிரை இறந்துவிடும். பரமாச்சார்யார் அந்தக் குதிரையை உயிர் பிழைக்கச் செய்வார். திருவண்ணாமலை மடம் என்ற குன்றக்குடி மடத்தை ஸ்தாபித்தவர் தெய்வசிகாமணி பரமாச்சார்யார்தான். இது போன்ற காட்சிகள் சிதையா வண்ணம் திருப்பணி நடக்கிறது. அதே போல ராஜகோபுரத்தின் முன்புறம் உள்ள அலங்கார மண்டபமும் கிடுகிடுவென்று வளர்கிறது. இரண்டரை கோடி செலவு.

இப்போதெல்லாம் பௌர்ணமி தவிர பிரதோஷம், தமிழ்மாதப் பிறப்பு ஆகிய நாட்களிலும் நிறைய பக்தர்கள் கிரிவலம் செய்கிறார்கள். கோயில் திருப்பணியில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கும் நிர்வாகம், கும்பாபிஷேகத்துக்கு முன்னர் கிரிவலப் பாதையையும் சற்று கவனித்து பக்தர்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும்.

— கௌசி



• நூற்றுக்கு நூறு



• உல்லாச ஊர்மிளா

'அழகான கவிதை ஒன்று கிடைக்குமானால், அதற்காகத் தனியே ஒரு விழா கொண்டாடலாம்' என்று வங்காளப் பழமொழி உண்டு. கவிதை போன்ற விழாவே கிடைத்து விட்டால், அதை எப்படி விமர்சிப்பது, என்னவிதமான தொகுப்புரை வழங்குவது என்று திணறல் ஏற்படுமல்லவா? அப்படி ஒரு திணறல் அண்மையில் ஏற்பட்டது.

முத்துச்சுடர் போன்ற அந்த விழா, சென்னை, பரத கலாக்ஷேத்ரா அரங்கில் நடைபெற்ற கல்கி சதாசிவம் நூற்றாண்டு நினைவு விழா!

ரமணியின் கைவண்ணத்தில் அரங்க முகப்பும் மேடையும் அழகு பெற்றன. கல்கி குடும்பத்தாரின் முயற்சியில், கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி என்றாலும், பார்வையாளர்கள் தங்கள் குடும்ப விழாவாகவே நினைத்துக் கொண்டு சிறப்பிக்க வந்திருந்ததை ஒவ்வொரு முகத்திலும் தென்பட்ட குதூகலத்தில் காண முடிந்தது.

''ஏதோ புதுசா பண்ணியிருக்கானாமே...



• அனுராதா-திருப்பூர் கிருஷ்ணன்

மனதில்

மாலை ஆறு மணிக்குத்தான் நிகழ்ச்சி என்றாலும் ஐந்தரை மணிக்கே கலாக்ஷேத்ரா அரங்கம் நிரம்பிக் கொண்டிருந்தது. வி.வி.



ஒலியும் ஒளியும் மிக்ஸ் பண்ணி, சவுண்ட் எஃபெக்ட்ஸ் எல்லாம் கொடுத்து"

"மீரா' 'சகுந்தலை' படத்துலேயிருந்தெல் லாம் கிளிப்பிங்ஸ் போடறாங்களாம். ப்ரொஜக்ஷன் ஸ்க்ரீன் இருக்கே!"

எவ்வளவோ ரகசிய



• பம்பாய் ஜெய்ஸ்ரீ- விஜய்சிவா





• ராம் பிரசாத்

மாக வைத்துக் கொண்டிருந்தாலும், எப்படியோ கசிந்துவிட்டிருந்த தில், ஏகப்பட்ட ஆர்வ விசாரிப்புகள், சுவாரசியத்தைக் கிளறிவிட்டிருக்க... முழு நிகழ்ச்சியையும் வடிவமைத்து, இயக்கியிருந்த கௌரி ராம்நாராயண் "ரொம்ப 'டென்ஸா' இருக்கு" என்று சொல்லிக் கொண்டிருந்தார்,

வாழ்ந்த வந்திருந்த திருமதி ஒய்.ஜி.பி. யிடம்.

முதலில் கலாக்ஷேத்ரா பாணியில் ஒரு பூஜை; முதல்வர் ராஜா ராம் தீபாராதனை காட்டினார். அதைத் தொடர்ந்து கல்கி சதாசிவத்துக்குப் பிடித்த 'நெஞ்சுக்கு நீதியும்' பாடலை, பாலக்காடு ராம்பிரசாத் இறைவணக்கமாகப் பாடினார். பாலக்காடு மணி அய்யரின் பேரனான இவர், 'சக்திவேல், சக்திவேல்' என்று கணீரென்று முழங்கியபோது, அரங்கம் முழுவதும் வீர அலை பாய்ந்து சிலிர்க்கச் செய்தது.

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை சார்பில், அறங்காவலர் சங்கர் ராமச்சந்திரன், தமது வரவேற்புரையையே நன்றியுரையாகவும்

உஜதி வேண்டும்



வழங்கியதில் பத்து நிமிடம் சிக்கனம் பிடிக்கப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனமான நள்ளிரவில் சதாசிவம் பத்திரிகை தணிக்கையை மீறவும் சிறை செல்லவும் தயாராயிருந்ததை நினைவு கூர்ந்தார் சங்கர். விளம்பரம், மக்கள் தொடர்புத் துறை மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கவும் சமுதாய நோக்குடனான விளம்பரங்களை ஊக்குவித்து விருது வழங்கவும் அறக்கட்டளை இயங்கி வருகிறது என்பதை விவரித்து ஆதரவு கேட்டார்.

விளம்பர ஜாலங்களோ, வியாபாரத் தந்திரங்களோ, மார்க்கெட்டிங் மந்திரங்களோ எதுவும் இல்லாத அந்தக் காலத்திலேயே விளம்பர உலகில் பல புதுமைகளைச் செய்த கல்கி சதாசிவத்தின் நினைவாகப் பரிசும் விருது பத்திரமும் வழங்கப்பட்டன. சமுதாய உணர்வு கொண்ட சிறந்த விளம்பரமாக 'ஏர்செல்' நிறுவனத்தின் 'ஜாம்பேட் ஜக்கு' தேர்ந்தெடுக்கப்பட்டு, அதை வடிவமைத்த எச்.டி.ஏ நிறுவனத்துக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு!

'வாகனம் ஓட்டியவாறே செல்போனில் பேசாதீர்கள்' என்ற எச்சரிக்கை விளம்பரமாக அதை எச்.டி.ஏ தயாரிக்க, வெளியிட்ட நிறுவனமோ செல்போன் நிறுவனமான ஏர்செல்! இரண்டு சக்கர வாகனங்களை ஓட்டும்போது ஹெல்மெட் அணிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பிரசாரம் செய்தவர் டாக்டர் பி. ராமமூர்த்தி. அவரே இந்த விழாவுக்குத் தலைமை தாங்கி, விருது பெற்ற விளம்பரத்துக்குப் பரிசும் தந்தது யதேச்சையாக அமைந்த பொருத்தம்.

கல்கி சதாசிவத்தின் பெருந்தன்மை, ஏழைகளுக்கு உதவிய சதாசிவம்-சுப்புலக்ஷ்மி தம்பதியின் வள்ளன்மை; சத்தியவானுக்கு சாவித்ரி போல் எம்.எஸ்ஸுக்கு சதாசிவம் விளங்கிய உயர்வு என்று பத்து நிமிடங்களுக்கு சதாசிவத்தின் பல பரிமாணங்களை விவரித்துப் பேசினார் விழாத் தலைவர் டாக்டர் பி. ராமமூர்த்தி.

"ஐந்து நிமிட சந்திப்பில்கூட, ஆயுளுக்கும் மறக்க முடியாத நகைச்சுவையை உதிர்த்துச் செல்வார் சதாசிவம்" என நூற்றாண்டு நாயகரின் நகைச்சுவை உணர்வைக் கொண்டாடினார்.

தலைசிறந்த விளம்பரத்தைத் தேர்ந்தெடுத்த நடுவர்கள் சாருகேசி, வைத்தியநாத ஸ்வாமி (ஃபேம் அட்வர்டைசிங்), எழுத்தாளர் சுஜாதா ஆகியோருக்கு நினைவுப்பரிசுகள்.

லயோலா கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர் தக்ஷிணாமூர்த்திக்கும், மகளிர் கிறுத்துவ கல்லூரி மாணவி ஜெயஸ்ரீக்கும் தலா ஐயாயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

"இன்றைக்கு இருவருக்கு தரப்படும் உதவித் தொகை, அடுத்த ஆண்டு இருபதாக மறு ஆண்டு இருநூறாக உயரும் நிலைமை உருவாக வேண்டும்" என ஆதரவு கோரினார் நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன்.

அனைவரும் ஆவலுடன் காத்திருந்த அற்புதவேளையும் வந்தேவிட, கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. எம்.எஸ்ஸின் குரலில் 'வந்தே மாதரம்', திரையில் தேசியக் கொடி... சில கணங்களில்... கலாக்ஷேத்ராவின் பாரம்பரிய மேடையின் மையத்தில் மட்டும் ஸ்பாட்லைட்! சுற்றிலும் கும்மிருட்டு... குண்டூசி விழும் சப்தம்கூட கேட்கும் அளவுக்கு நிசப்தம்.... அனைவரது கவனமும் மேடை மீது. நாடகம் தொடங்குகிறது.

தொலைக்காட்சி அறிவிப்பாளர் அனுராதா கண்ணனும், திருப்பூர் கிருஷ்ணனும் நாடகப் பாத்திரங்கள். ஏதோ ஒரு டாக்குமெண்டரி எடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். தேசத் தலைவர்கள் பற்றிச் செய்திப்படம் எடுக்கலாம் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு, ஒரு சிறந்த குடிமகனைப் பற்றிப் படம் எடுக்க முடிவு செய்கிறார்கள் இருவரும்.

முதல் காட்சி இதுதான்!

"நமது நாயகன் அரசியல் தலைவன் இல்லை. கலைஞன் இல்லை. விஞ்ஞானி இல்லை. ஆனால் தன்னலம் கருதாமல்



பொதுநலம் கருதியவன். செய்யும் தொழிலை, திறமையோடு, ஆர்வத்தோடு, கொள்கைப் பிடிப்போடு செய்தவர். ஒரு தனி மனிதனால் தம்மைச் சுற்றியுள்ளவர்களை மேன்மையுறச் செய்ய முடியும், சமுதாயத்துக்கு நன்மை செய்ய முடியும் என்று வாழ்ந்து காட்டியவர்'' என அனுராதா கண்ணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, திருப்பூர் கிருஷ்ணனுக்கு அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று தெரிந்து விடுகிறது.

தொடர்ந்து, கல்கி சதாசிவத்தின் படம் வெண்திரையில் ஒளிர, அது பல்வேறு தோற்றங்களைக் கடந்து கடைசியில் கடுக்கனும் சுருள் முடியும் கொண்ட இளைஞன் சதாசிவமாக மாற... காலம் பின்னோக்கி ஓடுகிறது!

ஜட்காவில் சென்ற சுப்ரமணிய சிவாவைத் துரத்திக் கொண்டே சிறுவன் சதாசிவம் ஓட, அந்தக் காலடி ஓசையும், குதிரை சப்தமும், மூச்சிரைப்பும் நம்மையும் அவர் பின்னாலேயே ஓட வைக்கின்றன. "சுதந்திர தாகம், தேச பக்திப் பிரவாகம் இவற்றைக் கண்முன் நிறுத்தும் பாடலுடன் படத்தைத் தொடங்கலாம். இதோ நமக்கு இசையளித்து உதவ.. பாம்பே ஜெய்ஸ்ரீயும் விஜய்சிவாவும் வந்திருக்கிறார்கள். பாருங்கள்'' என்று கைகாட்டும் இடத்தில் பிரபல இசைக் கலைஞர்கள் இருவரும் வணங்கி நிற்க, கரகோஷம் காதைப் பிளக்கிறது!

'ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா!' என்று இளைய பாரதத்தை வரவேற்கும் பாரதியார் பாடலை இருவரும் மாறி மாறிப் பாட, பாடகர்களின் பரவசம் பார்வையாளர்களையும் பற்றிக் கொள்கிறது.

சதாசிவமே நன்றாகப் பாடக் கூடியவர் தான். பாரதி பாடல்களை வீதி வீதியாய்ப் பாடி தேசபக்தியை ஊட்டியவர் என அறிஞர் அண்ணா சொன்னதாக அறிகிறோம்!

கதர் இயக்கத்தில் ஈடுபட்டபோது சதாசிவம் 'எங்கள் வேள்விக் கூடமீதில் ஏறுதே தீ' என்று பாடி அன்னியத் துணி பகிஷ்கரிப்புச் செய்த காட்சியை இரு பாடகர்களும் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள்!

கல்கி சதாசிவத்தின் வாழ்க்கைச் சம்பவங்கள், இணைந்து நுழைந்து வரலாற்றுச் சங்கிலியாகி ஒலிக்கத் தொடங்க, முன் ஒலிப்பதிவு செய்த பாட்டு, பேட்டி, மேடையில் பாடகர்களின் இசை, இடையிடையே வசனம், திரையில் புகைப்படங்கள், க்ளிப்பிங்ஸ், மேடை ஒளி அமைப்பின் ரசனைமிக்க மாற்றங்கள் என வர்ணஜாலம் காட்டுகிறது நிகழ்ச்சி. ராஜாஜியிடம் சதாசிவத்துக்கு இருந்த விசுவாசத்தை விவரித்து முடிக்கும் கணத்தில் விஜய் சிவா 'பஜகோவிந்தம்' பாடி நெகிழ்விக்கிறார்.

காந்திஜியுடன் சதாசிவத்துக்கு ஏற்பட்ட தொடர்பு குறித்து விவரிப்பு தொடர்கிறது.

ஹிந்து - முஸ்லிம் கலவரத்தால் நாடே நரகமாகிக் கொண்டிருந்த சமயம் (1947), பிர்லா மாளிகையில் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார் காந்திஜி. அவரை வணங்க வந்த



• எச்.டி.ஏ. திருவண ரவி சாலமனுக்கு விருது தரும் டாக்டர் பி. ராமமூர்த்தி

கல்கி சதாசிவம், அந்தச் சோர்வை நீக்க மகள் ராதாவை நடனமாட வைக்கிறார். எம்.எஸ். பாட, 'கன்ஷ்யாம ஆயாரே' என்ற அந்தப் பாடலும் சிறுமியின் நடனமும் அண்ணலின் முகத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு புன்னகையைத் தோற்றுவிக்கிறது. 'அப்படிப்பட்ட பாடலை நம் படத்தில் சேர்க்க வேண்டாமா?' என்று அனுராதா கேட்டு முடிக்கும் முன்பே, கண்ணனைக் கொஞ்சி அழைக்கும் ராதையாகச் சுழன்று சுழன்று ஊர்மிளா ஆடுகிறார்.

நாட்டியத்தின் குதூகலம் அடங்குமுன் இதயத்தைப் பிழிகின்ற 'ஹரிதுமஹரோ' பஜன் பாட வேண்டிய பெரிய பொறுப்பு பாம்பே ஜெய்ஸ்ரீக்கு. அனாயாசமாகப் பாடி கைதட்டல்கள் அள்ளிச் செல்கிறார்.

காந்திஜியிடம் ஈடுபாடு கொண்ட பிறகு தீண்டாமை ஒழிப்பு சர்வமத சமரசம் போன்ற கோட்பாடுகள் சதாசிவத்தின் வாழ்க்கையை வழி நடத்துகின்றன.

வீதியில் கண்ட மசூதியில் நின்று 'அல்லா! அல்லா!' என்ற பாரதி பாடலை அவர் பாடி

னார் என்ற அரிய, புதிய தகவல் அறிகிறோம். அப் பாடலை விஜய் சிவாவின் மெட்டிலும் குரலிலும் கேட்டு வியக்கிறோம்.

ஒரு பத்திரிகை ஆசிரியராக, நிர்வாகியாக, விளம்பரத்துறை வித்தகராக சதாசிவத்தின் திறமையை விவரிக்கையில் பாடல்களுக்கும் இசைக்கும் இடமில்லாது போக, திருப்பூர் கிருஷ்ணனும் அனுராதாவும் தங்கள் உணர்ச்சி மிக்க நடிப்பால் நிகழ்ச்சியின் சுவாரஸ்யத்தைத் தூக்கி நிறுத்துகிறார்கள். பொருத்தமான 'விஷுவல்கள்' வினாடி பிசகாது திரையில் தோன்றும்படி செய்து வரலாற்றுப் பதிவுகளைக் காட்சியாகவும் சாட்சியாகவும் வழங்கிக் கொண்டிருக்கிறார் தொழில்நுட்ப இயக்குனர் ஆனந்த் சிவா.

புறுத்திய கச்சிதத்தையும் இறையுணர்வையும் வெளிப்படுத்துகிறது. வயலினில் முல்லைவாசல் சந்திரமௌலி, மிருதங்கத்தில் கணபதிராமன், புல்லாங்குழலில் சரவணன் இணைந்து, அனுபவித்து வாசிக்கிறார்கள்.

எம்.எஸ்.ஸின் முத்திரைப் பாடல்களான 'மைத்ரீம் பஜத, குறையொன்றுமில்லை' ஆகியவற்றுடன் நிகழ்ச்சி நிறைகிறது.

ஒலிப்பதிவுகளுக்குக் குரல் கொடுத்த சிறுவன் அரவிந்த், சிறுமி கௌரி, சேகர், தொடங்கி சிறிதும் பெரிதுமாகப் பங்களித்த அனைவரும் மேடையில் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்...

ரசிகர்கள் இறுதிவரை கலையாமல் காத்திருந்து மேடைக் குழு இசைக்கும் தேசிய



• பங்களித்த பெருமையுடன்...

இறுதிக் காட்சியில், கல்கியின் மகள் ஆனந்தி மேடையில் தோன்றி எம்.எஸ்ஐ ஓர் அரிய கலைஞராகப் பட்டை தீட்ட சதாசிவம் எடுத்துக் கொண்ட முயற்சிகளை விவரிக்கிறார். சிக்கிய பஜனைப் பாடல், அன்னமாச்சார்ய கீர்த்தனை, சங்கரா பரண ஆலாபனை என்று அந்த இசை வாழ்க்கையின் மைல் கற்களைப் பிரகடனப்படுத்தும் வகையில் பாடல்கள் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. விஜய் சிவாவின் சங்கராபரண ஆலாபனையும் சங்கராச்சார்யம் பாடலும் சதாசிவம், எம்.எஸ். ஸுக்கு அடையாளப்படுத்திய உன்னத உயர்வுகளைத் தொட, ஜெய்ஸ்ரீயின் 'எந்தமாத்ரமு' அவர் வலி

கீதத்தில் மனமும் உணர்வும் ஒன்றிச் சேர்ந்து கொள்கின்றனர்.

ஒரு தனிமனிதரின் சாதனைகளை விவரிக்க ஆர்வத் துடிப்புடன் அர்ப்பணிப்புடன் ஒரு குழு இயங்கியிருப்பது புரிகிறது. அந்த தனி மனிதர் சதாசிவத்தின் சாதனைகள் யாவுமே தன்னலம் கடந்து சமுதாய நலனை, தேச நலனை, மனித நேயத்தை இலக்காக்கி நிகழ்த்தப்பட்டவை என்ற உண்மை மிக அழுத்தமாகப் பதிவாகிறது.

- அனுராதா சேகர்

படங்கள் : வெங்கடேஷ்



ஆளில்லாத ரயில் நிலையம்!

"அருணாச்சலேஸ்வர் ஆலய விழா ஒன்றில் கலந்து கொள்ள தி.மலை வருகை தந்தார் பேரறிஞர் ராஜாஜி. அப்போது (1949) தி.மலை ரயில் நிலையத்தில் பெரியாரைச் சந்தித்தார். அரசியலுக்கு அப்பால் நல்ல நண்பர்களாக விளங்கிய இருவரும், ரயில் நிலையத்திலேயே அரைமணி நேரம் அந்தரங்கப் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்பு, திராவிடர் கழகம் உடைந்து தி.மு.க. உருவாகக் காரணமாக அமைந்தது" என்று தகவல் தருகிறார் சென்னை வாசகரான என். சீனிவாசன்.

திருவண்ணாமலை ரயில் நிலையத்தின் வரலாற்று முக்கியத்துவம் இருக்கட்டும், இன்று கிரிவலமல்லாத மற்ற நாட்களிலும்கூட மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள திருவண்ணாமலையில், அந்நகர் ரயில் நிலையம் ஆளில்லாத ரயில் நிலையமாகக் காட்சித் தருகிறது.

சென்னை, காஞ்சிபுரம், போன்ற நகரங்களுடன் நேரடி இணைப்பு இல்லாதது பெருங்குறை என்றால், விழுப்புரத்திலிருந்து வந்து போகும் ஒரு சில மீட்டர் கேஜ் பாசஞ்சர் ரயில்களையும், திருச்சியிலிருந்து திருப்பதி செல்லும் மீனாட்சி எக்ஸ்பிரஸ் ரயிலையும் விட்டால் மற்ற நேரங்களில் காற்றாடிக் கொண்டிருப்பது மிகப் பெரிய பரிதாபம்.

"பாக்காலாவிலிருந்து திருப்பதிவரை அகல ரயில்பாதை பணி நடந்து வருகிறது. மீனாட்சி எக்ஸ்பிரஸ் பாக்காலா வரை செல்கிறது. திருப்பதியிலிருந்து திருவண்ணாமலை வழியாக திருச்சி மீட்டர் ரயில் பாதையை அகல ரயில் பாதை ஆக்கினால் திருவண்ணாமலை நகர் மற்றொரு திருப்பதியாவது உறுதி. ஆனால் ஒரு கிலோ மீட்டர் அகல ரயில் பாதை அமைக்க ஒருகோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால் இது ஒரு கனவுதான்" என்கிறார் நிலைய கண்காணிப்பாளராக தமது அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் டி.கே. விஜயகுமார்.

"திருப்பத்தூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வேணுகோபால், அமைச்சராக இருந்த பிச்சாண்டி, போன்ற பலரும் இந்த ஊர்க்காரர்கள்தான் என்றாலும் திருவண்ணாமலை அகல ரயில்பாதைக்கோ, இதர முக்கிய நகரங்களோடு இணைப்பதற்கோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை. மாவட்டத் தலைநகரம் என்ற மரியாதைக்காக முதலில் குறைந்தபட்சம் கணிப்பொறி முன்பதிவு மையத்தையாவது இங்கே கொண்டு வரலாம்" என்று கோரிக்கை வைக்கிறார் திருவண்ணாமலைவாசி மோகன்.






• மோகன்




• விஜயகுமார்



• படப்பிடிப்பில்...



• ராஜஜோதி



• ஜெயகுமார்

மலை அண்ணாமலை!

'ரெடி... ஸ்டார்ட் கேமரா... ஆக்ஷன்' என்ற கோடம்பாக்கத்துக் குரல் கிரிவலப் பாதையில் கேட்கவே ஆர்வமாய்த் திரும்பினோம். குகை நமச்சிவாயர் கோவில் அருகே, மலையடிவாரத்தில், காவி தரித்த முனிவர்கள் கையில் தண்டம், கமண்டலம் சகிதம் உலவிக்கொண்டிருக்க அதைக் கேமராவில் சுருட்டிக்கொண்டிருந்தனர் ஜெயகுமாரும், ராஜஜோதியும். திருவண்ணாமலையைச் சுற்றிச் சுற்றி, சுறுசுறுப்பாக நடந்து வரும் இந்தப் படப்பிடிப்பு 'அருணாசல மகிமை' மெகா தொலைக்காட்சித் தொடருக்காக.

மயிலாடுதுறை அருகேயுள்ள குத்தாலத்தைச் சேர்ந்த ராஜஜோதி, பழனி இசைக்கல்லூரியில் படித்தவர். இந்து அறநிலையத்துறையில் சுருக்கெழுத்தராக பணிபுரிந்து வரும் அவரது மனைவி தமிழரசி, திடீரென, திருவண்ணாமலைக்குப் பணிமாற்றம் செய்யப்பட, மனைவியுடன் ராஜஜோதி, திருவண்ணாமலையில் குடியேறியிருக்கிறார். வந்த இடத்தில் திருவண்ணாமலையின் ஆன்மிக வரலாறு, அவரை மிகவும் பாதித்துவிட, ஏவி.எம். முருகனிடம் நேர்முகச் செயலாளராகவும், அவரிடம் இணை இயக்குனராகவும் இருந்த ஜெயக்குமாரைச் சந்தித்திருக்கிறார். அவர் கொடுத்த உத்வேகம் 'அருணாசல மகிமை' தொடருக்கான விதை ஊன்றிவிட்டது. ஐந்தாண்டுகள் உழைத்து 'அருணாசல மகிமை' தொடருக்கான ஸ்கிரிப்டை உருவாக்கியிருக்கிறேன்'' என்கிறார்கள்.

அடுத்த கார்த்திகை தீபம் முதல் முன்னணி தொலைக்காட்சியில் ஒளிபரப்பத் திட்டமாம்!

ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத | சிவசிவ | ஸ்ரீ இராமநாதஸ்வாமி சஹாயம்



இராமர் பூஜித்து வரங்களைப் பெற்ற இராமேஸ்வரத்தில் மாதாமாதம் அமாவாசையன்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



ஆன்மீக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீராமநாதசுவாமி உடனிருந்து அருள்பாலிக்கிறார். ஸ்ரீராமபிரான் இராவணனை வென்று இலங்கையிலிருந்து திரும்பியதும் சீதாதேவியாருடன் ராமேஸ்வரம் வந்து, அங்கு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட விரும்புகிறார். அப்போது சீதாதேவியார் மணலால் பிரதிஷ்டை செய்துவைத்த சிவலிங்கமே கர்ப்பக்கிரகத்தினுள் இன்று காட்சியளிக்கிறது. மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவவிஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாகதோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்புமிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் இத்திருப்பணியை தொடங்கியுள்ளோம். புண்ணியபூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற நெய் விளக்கேற்றும் பணியிலும் நாமும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- ★ தங்கள் சார்பாக நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.
- ★ ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், நெய் தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்த நாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட 'கோடி தீர்த்த' சொம்பும், வலம்புரி சங்கும் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ இராமநாதசுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபம் ஏற்றி அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து வருடங்கள் பிரசாதமும், "ஆன்மீகம்" மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீமத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

அன்னதானம் செய்ய விரும்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் அமாவாசையன்று நெய் தீபம் ஏற்றுகிறோம். பதினாறு வகை இறைவழிபாட்டில் மிகச் சிறப்பாகச் சொல்லப்படுவது தீபவழிபாடாகும். இராமேஸ்வரத்தில் தீபமிடுவது மிகுந்த புண்ணியத்தைத்தரக்கூடியது. தாங்கள் என்ன வேண்டுதலுக்காக தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசையன்று தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

நெய் தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானப் பணியும், தீப வழிபாட்டுப் பணியும் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி

Cheque/D.D/M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 4616311 E-mail: sivasiva@vsnl.net



ஸ்ரீ இராமநாதசுவாமி

இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்தால் அழியாத புண்ணிய பலனைப் பெறலாம்!

சாரல்

"வெளியுலகம்னா என்ன?" என்று கேட்ட, புது மனைவியைப் பார்த்து, சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

ரயில் கிளம்பிய நேரம் முதல் தொடர்ந்து நான் கேட்ட கேள்விகளுக்கு, இந்து கொடுத்த பதில்கள் ஏமாற்றமளிப்பதாகவே இருந்தன.

"புத்தகமெல்லாம் படிப்பியா இந்து?"

"ம்... எங்கப்பா கடைக்கு வர்ற பழைய புத்தகம் ஏதாச்சும் கையிலே கிடைச்சா படிப்பேன்."

"ம்... நியூஸ்பேப்பர்?"

"அய்யே... நியூசுன்னாலே எனக்குப் பிடிக்காது. டீவிலே நியூஸ் ஆரம்பிச்சவுடனே சேனலை மாத்திடுவேன்."

"தி. ஜானகிராமன், அசோகமித்திரன்... இவங்கள்லாம் யாருன்னு தெரியுமா...?"

"தெரியாது."

"சுஜாதா... பிரபஞ்சன்?"

"ம்ஹூம்... தெரியாது. யாரு இவங்கள்லாம்?"

"ம்... இந்தியா சுதந்தரம் அடையறதுக்காக போராடினவங்க."

"அப்படியா?" என்று அப்பாவியாகக் கேட்டாள் இந்து.

மண்டு! நம்புகிறது.

"அய்யோ, அவங்கள்லாம் எழுத்தாளருங்க..."

"ஓஹோ..."

கடவுளே.. தேடித் தேடி புத்தகங்கள் படிக்கும், எனக்கு, இப்படி ஒரு மனைவியா? இலக்கிய ரசனையற்ற பெண்ணுடன் வாழ்நாள் முழுவதையும் எப்படிக் கழிக்கப் போகிறோமோ?

"வெளியூருக்கெல்லாம் போயிருக்கியா?"

"எப்பவாவது எங்க மாமா வீட்டுக்குத் தஞ்சாவூர் போவோம். ஒரு தடவை எங்க ஸ்கூல்ல, பெங்களூர் டூர் அழைச்சுட்டுப் போனாங்க."

"நீயும் போனியா?"


"பேர் கொடுத்திருந்தேன். கிளம்பற அன்னிக்கு சாயங்காலம் திடீர்னு வயசுக்கு வந்து போக முடியலை" வெட்கத்துடன் கூறினாள் இந்து.

எப்படிப் புரியும்படி சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. புத்தக ரசனையும் இல்லை. சங்கீதமும் பிடிக்காது என்று முதலிரவன்றே சொல்லிவிட்டாள். நான் ரசிக்கும் எதையுமே ரசிக்காத ஒரு பெண்ணுடன் வாழப்போவது குறித்து சலிப்பாக இருந்தது.

ரயில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்க, வெளியே பார்த்தேன். பேட்டவாய்த்தலை. சட்டென்று மனசுக்குள் உற்சாகம் கொப்பளித்தது. இன்னும் அரைமணி நேரத்தில் எங்கள் ஊர் வந்துவிடும். நாங்கள் குடும்பத்தோடு திருச்சிக்கு வந்து பத்து வருடங்கள் ஆகியிருந்தாலும், இன்னும் எனக்கு எங்க ஊர் என்றால் பிறந்து, வளர்ந்து, பி.எஸ்சி வரையில் படித்த ஊர்தான்.

அரை டவுசரை பிடித்தபடி குமாருடன் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடியது, வயசுப் பெண்களால் சலனமடைந்து, 'இன்னும் சூரியன் உதிக்கவில்லை. எனக்குத் தெரியும். நீ இன்னும் விழித்திருக்க மாட்டாய்' என்பது போன்ற சில்லறைத்தனமான கவிதைகள் எழுதியது... வீட்டுக்குத் தெரியாமல் சினிமா போனது... எல்லாம் அங்குதான்.

ட்ரெய்ன் மீண்டும் கிளம்ப, திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. நாங்கள் திருச்சியில் கிளம்பும்பொழுதே மழையை எதிர்பார்த்தேன். வானம் அப்படி இருட்டியிருந்தது. சடசடவென்று வேகமாக மழை பெய்ய ஆரம்பிக்க, கதவுகள், ஜன்னல்கள் எல்லாம்



ஜி.ஆர். சுரேந்தர்நாத்

சாத்தப்பட்டன. எங்க ஊர் வருவதற்குள், மழை நின்று விட வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். மழை விட்டால்தானே கதவைத் திறந்து என் புதுமனைவியிடம் எங்க ஊரைக் காண்பிக்க முடியும்.

பார்த்துட்டு என்ன பண்ணுவா? அப்படியான்னு ஒரு கேள்வி கேட்பா. அவ்வளவுதான்... என்ற எண்ணமும் தோன்றியது.

இருப்பினும், உற்சாகத்துடன் இந்துவிடம் எங்க ஊரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன்.

"பி.எஸ்ஸி, படிக்கறவரைக்கும் ஒரு ஊர்ல இருந்தோம்னு சொல்லியிருக்கன்ல... அது இந்த ரூட்லதான் இருக்கு. இன்னும் ஒரு அரை மணி நேரத்துல வந்துரும்" என்றேன்.

"அப்படியா?"

"ப்ச்... இப்ப பார்த்து மழை பெய்யுது... வர்றப்ப உனக்கு காட்டணும்னு நினைச்சேன்."

"ரொம்ப பிடிச்ச ஊரா?"

"இருக்காதா... இருபது வருஷம் வளர்ந்த ஊராச்சே.. ஒரு லைன் வீட்டுலேதான் குடியிருந்தோம். செட்டியார் காலனின்னா ஊருக்கே தெரியும். வரிசையா அஞ்சு வீடு. கடைசி வீட்டுல நாங்க. பக்கத்துல குமார் வீடு. நேத்துகூட வந்திருந்தானே வீட்டுக்கு... அப்புறம் முன்னாடி பட்டாணிக் கடைக்காரம்மா வீடு. எல்லோர் வீட்டுலேயும் என் வயசு பசங்க, பொண்ணுங்கதான். செம ஜாலியா இருக்கும். காம்பௌண்ட் சுவர் முன்னாடி பசங்க விளையாடற மாதிரி சின்னதா ஒரு டவர்கூட இருக்கும். ட்ரெய்ன்லேயிருந்து பார்த்தாலே தெரியும்" என்று கூறிவிட்டு இலேசாக ஜன்னலை உயர்த்தி மழை நின்றுவிட்டதா என்று பார்த்தேன்.

அதற்குள் பக்கத்திலிருந்தவர், "மூடுங்க சார்... சாரலடிக்குது" என்று கத்த, வேகமாக ஜன்னலைச் சாத்தினேன். தொடர்ந்து ஊர்க்கதையைச் சொன்னேன்.

"சினிமா பாக்க அலைஞ்சது அந்த ஊர்லேதான். அவ்வளவு ஈஸியா சினிமா பார்த்துட முடியாது. அப்பா டெர்ரர். சினிமால்லாம் பாக்கறதா இருந்தா, அவரு ஒரு படம் பாத்துட்டு வந்து, அவருக்கு பிடிச்சிருந்தாதான் நாங்க போகலாம். ஊரே கொண்டாடற படம் அவருக்குப் பிடிக்காது. 'சூரக்கோட்டை சிங்கக்குட்டி'னு ஒரு படம் கேள்விப்பட்டிருக்கியா? பிரபு நடிச்சது. 'காளிதாசன்... கண்ணதாசன்'னு ஒரு பிரமாதமான பாட்டுகூட இருக்கு."

"இல்லே... நான் அதிகமா படம் பார்த்ததில்லே. அப்பா விட மாட்டாரு. மொத்தமா தியேட்டர்லே ஒரு பத்து படம் தான் பாத்திருப்பேன்.

"சரியாப் போச்சு... அந்தப் படம் பாக்கணும்னு ஒரே அடம். அப்பா விடமாட்டேன்னுட்டாரு. குமார் இருக்கான்ல... 'நந்தா' படத்துலே சூர்யாவுக்கு, ராஜ்கிரண் உபதேசம் பண்ணின மாதிரி, ரயில்வே டிராக்லே நடந்துகிட்டே, "நாம்ப நியாயமா கேட்டோம். அவங்க விடலே. எதுவும் கிடைக்கலேன்னா விட்டுறக்கூடாது. நாளக்கி மத்தியானமே ஸ்கூல் கட் அடிச்சிட்டுப் போறோம்"ன்னான். மறுநாள் மத்தியானம் சக்தி தியேட்டர்லே படம். இடைவேளைலே யாரும் பார்த்திடக்கூடாதுன்னு, புத்திசாலித்தனமா செய்யறதா நினைச்சி, நோட்டுக்கை விரிச்சு மூஞ்சிலே வைச்சு மூடிகிட்டேன். அதுலேதான் வினையே வந்தது..."

"என்னாச்சு?"

"நோட்டுக் அட்டைலே கமலோட பேர் எழுதியிருந்துச்சு. அதை எங்கப்பா ஃப்ரண்டு ஒருத்தரு பாத்துட்டு, நோட்டுக்க எடுத்து, என்னைப் பார்த்தாரு... அப்புறம் என்னா... சாயங்காலம் வீட்டுலே அர்ச்சனைதான்."

இந்து சத்தமாகச் சிரித்தாள்.

"இதைவிட பெரிய ஜோக் ஒண்ணு... நாங்க கமல் ஃபேன்ஸ். 'விக்ரம்' படம் வந்தன்னைக்கே பாக்கணும்னு கேட்டோம். ஒரே அடம்... அப்படியும் விடலே. அட போங்கடான்னு, நானும் குமாரும் மேட்னி பாத்துட்டு வர்றோம். காலனி 'கேட்டு'கிட்டயே எங்கம்மாவும், குமார் அம்மாவும் நிக்கிறாங்க."

"என்ன... தெரிஞ்சிடுச்சா?"

"அதில்லே... நீங்க ரொம்ப அடம் புடிச்சீங்கன்னு, மத்தியானம் சாப்பாட்டுக்கு அப்பா வந்தப்ப, ஃபர்ஸ்ட் ஷோ 'விக்ரம்' பார்க்க, பர்மிஷன் வாங்கிட்டோம். கிளம்புங்கன்னு சொல்றாங்க. நானும், குமாரும் திருதிருன்னு முழிக்கிறோம்."

இந்து பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி, "அப்புறம்..." என்றாள்.

"வேறே வழி.. அப்படியே திரும்பி, மறுபடியும் போய் 'விக்ரம்' படம் பார்த்தோம்."

இந்து ரசித்துச் சிரித்தாள்.

"ப்ச்... இன்னும் மழை பெஞ்சுகிட்டிருக்கு. அடுத்து எங்க ஊர் வருது. உன்கிட்ட காட்ட முடியாது போலிருக்கே" என்றேன் இந்துவிடம் கவலையாக.

"ஜன்னலைச் சாத்துங்க சார்... சும்மா, சும்மா, தொறந்துக்கிட்டு..." என்று ஒருவர்



"ரெண்டு லட்சம் கேட்கிறீங்களே அடகு வைக்க வீடு இருக்கா...? நகைகள் இருக்கா?"

"துப்பாக்கி மட்டும்தான் இருக்கு!"

- தஞ்சை தாமு

குரல் கொடுக்க, வேகமாக ஜன்னலைச் சாத்தினேன்.

நான் இந்துவிடம் தொடர்ந்தேன்.

''எங்க ஸ்கூல்லே காவேரினு ஒரு பொண்ணு... நல்ல அழகு... நாங்க ரெண்டு பேரும் நல்லா படிப்போம். எப்பவும் சேர்ந்தே இருப்போம். அப்ப எட்டாவதோ, ஒன்பதாவதோ படிக்கிறோம். அப்பா ஒரு தடவை, 'என்னடா... காவேரியைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?'னு கேட்டாரு''

''அய்யோ... சொல்றப்பவே மூஞ்சில சந்தோஷத்தைப் பாரு... ஐ லவ் யூல்லாம் சொல்லிக்கிட்டீங்களா?'' என்றாள் இந்து.

''அடச்சீ... இந்தக் காலத்து பசங்க மாதிரியா... அதெல்லாம் இல்லை. அடிக்கடி கண்ணால பேசிப்போம். புதுசா ட்ரெஸ் போட்டுக்கிட்டு வந்தா, க்ளாஸ் ரூம்லே நல்லாருக்கான்னு அவ ஜாடையா கேட்பா... இப்படியெல்லாம் சின்ன, சின்ன சந்தோஷம்.''

''அடடடடா.. சூப்பர்... அப்புறம்...?''

''ஸ்கூல்ல பிளஸ் டூ முடிஞ்சதும் அவளை திருச்சிலே காலேஜ் ஹாஸ்டல்ல சேர்த்துட்டாங்க 'டச்' விட்டுப் போச்சு.''

''அப்புறம் அவளைப் பார்க்கவே இல்லையா?''

''ம்... ஒரேயொரு தடவை, தீபாவளியன்னைக்குப் பார்த்தேன். நான் சினிமாத் தியேட்டருக்குப் போய்க்கிட்டிருக்கேன். எதிரே யார் வீட்டுக்கோ பலகாரம் கொடுக்கறதுக்காக மஞ்சள் நிற தாவணியில் வந்தா. 'நல்லாயிருக்கியா காவேரி?'ன்னேன்., 'ம்'னு சொன்னா. ''என்னை எப்பவாச்சும் நினைச்சுப்பியான்னு'' கேட்டேன். ''ம்... இப்பவும் புது டிரஸ் போடறப்ப எல்லாம் உன்னை நினைச்சுப்பேன். ஸ்கூல்ல, க்ளாஸ் ரூம்லே, உன்கிட்ட ஜாடைலே நல்லாருக்கான்னு கேப்பன்ல... இன்னைக்குக் காலைலகூட நினைச்சுகிட்டேன்'னா... அவ்வளவுதான். அதுக்குப் பிறகு அவளைப் பார்க்கவே யில்லை.. அவங்கப்பாவுக்கு டிரான்ஸ்ஃபரா யிருச்சு.''

மழை விடவில்லை. ஜன்னலைத் திறந்தால் கத்துவார்கள். ட்ரெய்னும் நின்றுவிட்டது.

மிக இலேசாக, ஜன்னலை உயர்த்திப் பார்த்தேன். ஜோராக மழை பெய்து கொண்டிருந்தது.

''சை... உனக்குக் காட்டலாம்னு எவ்வளவு ஆசையா இருந்தேன்..''



''நம்ம தலைவர் வித்தியாசமா, நம்ம மாநிலத்தை இந்தியாவுலேயே ஒன்பதாவது மாநிலமா மாற்றுவோம்னு சொல்லியிருக்காரே?''

''ஒன்பதுதானுங்க அவங்களுக்கு ராசியான நம்பர்!''

- சச்சின் சக்திவேல்

''உங்க ஊர் வந்துடுச்சா?'' என்று இந்து கேட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, ட்ரெய்ன் கிளம்பிவிட்டது.

''ம்...'' என்று சோகத்துடன் கூறிய என்னை, சில வினாடிகள் உற்றுப் பார்த்த இந்து, விருட்டென்று எழுந்து, கம்பார்ட்மெண்ட் கதவை நோக்கி நடந்தாள்.

''ஏய், எங்க போற?''

''கதவைத் திறக்கப் போறேன்.''

''ஏய்... ரிசர்வ்டு கோச்... கத்துவாங்க.. கதவைத் திறந்தா பயங்கரமா சாரல் அடிக்கும்.''

''பரவாயில்லை'' என்ற இந்து வேகமாக கதவைத் திறந்தாள். சடசடவென மழைத் துளிகள் உள்ளே விழுந்தன.

நனைந்தபடி, வெளியே பார்த்தாள் இந்து. தூரத்தில் மழை நீர். நடுவில் கட்டடங்கள்... அந்த டவர்... எல்லாம் தெரிந்தன.

''ஏய்... யாரும்மா அது... அறிவில்லே..'' என்று ஆளுக்கு ஆள் கத்த, இந்து பொருட்படுத்தாமல், ''அந்த டவர்தானே நீங்க சொன்னது...'' என்று கூறிவிட்டு, ஊர் மறையும்வரை பார்த்துவிட்டுதான் கதவை மூடினாள்.

''ஏன் இந்து... இப்படி லூசு மாதிரி பண்றே..''

''நீங்க எவ்வளவு ஆசை, ஆசையா சொன்னீங்க... அந்த ஊரப் பாக்கணும்னு எனக்கு மட்டும் ஆசை இருக்காதா?'' என்ற இந்துவின் முகத்தை உற்றுப் பார்த்தேன்.

பிரியத்துடன், இந்துவின் கைவிரல்களை இறுக்கப் பற்றிக் கொண்டேன். மழைச் சாரலில் விரல்கள் நனைந்திருந்தன. என் மனசுக்கூட இப்பொழுது இந்துவை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ○

‘பௌர்ணமி வெளிச்சத்தில் கிரிவலம் வந்தால் கிட்டாத வரமென்று எதுவுமில்லை’ என்கிறார்கள் பல்லாண்டுகளாக கிரிவலம் வந்து அருட்கொடை பெற்ற பக்தர்கள். ஆனால், ‘ஒவ்வொரு கிரிவலமும் எங்களுக்

கிரி வலமா? கிலி வலமா?

பக்தர்கள் குமுறல்



குச் சவால் தான்’ என்று குமுறும் வாசகர் கடிதங்களும் வந்து குவிந்தன. ஆட்சியாளர்கள், மாவட்ட நிர்வாகம், ஆலய நிர்வாகம் போன்றோரின் கண்களைத் திறக்கும் என்ற நம்பிக்கையோடு அத்தகைய கடிதங்களிலிருந்து தேர்வு செய்யப் பட்டவையும் இந்த கதம்பத் தொகுப்பில் உண்டு :

வழிகாட்டும் பாடல்

திருமலையை எவ்வாறு வலம் வர வேண்டும் என்பதற்கு வழி காட்டுகிறது இந்த அருணாசலப் புராணப் பாடல்.

செங்கை வீசாமற் சோராது வகையாற் சிரத்திற் கூப்பி

மங்கையர் பதிதர் நீச கறுப்பிலார் வடிவுநோக்கா

தங்குறு மடியினோசை செவிப்புகாத ரசமாதர்

திங்களை யிரண்டுஞ் சென்று நடத்திடுஞ் செயல்போல் சென்று ...

மலையைச் சூழ்ந்திருக்கும் தேவதைகளைப் பணிந்து வணங்கிச்

சட்டையும், போர்வையும் இல்லாமல் மலைவலம் வருதல் வேண்டும். குடை பிடிக்காமல் காலணியின்றி, பயம், கோபம், சோகம் இவற்றை நீக்கி, வாகனங்களில் ஏறாமல் தாம்பூலம் தரியாமல், உணவை வெறுத்து சிந்தையை சிவன்பால் செலுத்தி

நிதானமாய் வலம் வருதல் வேண்டும்.

- ஆர்.ஆர்.சாமி, திருவண்ணாமலை

எது தெய்விகம்?

கிரிவலம் வரும் பக்தர்களின் குறிக்கோள் கடவுளின் அருள் பெறுவதே! இதை பிக்னிக் ஸ்பாட் போன்றும், தேகப் பயிற்சி செய்ய தேர்ந்த இடம் என்ற எண்ணத்தோடும், சினிமா, அரசியல், அடுத்த வீட்டு விவகாரம் என்று அரட்டை அரங்கம் நடத்திக் கொண்டும், வழி நெடுகிலும் எதையாவது தின்று கொண்டும், குறிப்பாக பான்பராக் போட்டுக் கொண்டும் புகைபிடித்த படியும் வலம் வருவது ஒரு போதும் தெய்விகம் ஆகாது.

- எஸ். சிவசுப்ரமணியம், சென்னை - 88

அன்னதானத்துக்கு மட்டும்தான் அறக் கட்டளையா?

கிரி வலப் பாதையில் பௌர்ணமி தினத்தன்று இதர சிறு



வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், கார்களும், வேன்களும் போட்டிப் போட்டுக் கொண்டு சீறிப் பாய்ந்து அணிவகுப்பது, பக்தர்களின் வயிற்றை மட்டுமல்ல, பக்தியையும் கலங்கடித்து விடுகின்றது.

திருச்சி, பாண்டிச்சேரி பகுதிகளிலிருந்து வரும் வாகனங்களை, ஊருக்கு வெளியே, சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் தடுத்து நிறுத்தி, போக்குவரத்து காவல் துறையினர் கிரிவல பக்தர்களை இறக்கிவிட்டு விடுகிறார்கள். இதனால் எத்தனை அவதி. மேற்கண்ட ஊர்களிலிருந்து வரும் வாகனங்களை, காந்தி நகர் வரை அனுமதித்து பக்தர்களை இறக்கிவிட்டபின் புறநகர்ப் பகுதியில் பார்க்கிங் செய்ய அனுமதிக்கலாமே!



- இரா. வளையாபதி,

தோட்டக்குறிச்சி

தேவை தனிப்பாதை!

கிரிவலப் பாதையில் இயங்கிவரும், பெங்களூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, வேலூர், தர்மபுரி செல்லும் பேருந்து நிலையத்தை நிரந்தரமாக இடமாற்றம் செய்ய வேண்டும். அல்லது பௌர்ணமி பேருந்து நிலையம் என்ற பெயரில் இயங்கிவரும் தற்காலிகப் பேருந்து நிலையத்தை இவர்கள் கிரி வல தினத்தன்று கட்டாயமாகப் பயன்படுத்த உத்தரவிட வேண்டும். அதுவும் முடியவில்லையெனில், அண்ணா நுழைவாயிலிலிருந்து செங்கம் சாலை வரை, பக்தர்கள் டிராஃபிக் பயமின்றி இறைவனை மட்டும் மனத்தில் வைத்து வலம் வர வசதியாக, சாலையைப் பிரித்து, பக்தர்களுக்கென்று தனியே கட்டை கட்டி, நிரந்தர தனிவழியை ஏற்படுத்தித்தர வேண்டும்.

- சிவகுமார், (ஸ்ரீராம் சிட்ஸ்), திருவண்ணாமலை

பெண்களுக்காக...

ஆண்களுக்கு நிகரான எண்ணிக்கை

யில் பெண்களும் கிரிவலம் வருகிறார்கள். ஆனால் பெண்களுக்கென்று கிரிவலப் பாதை வழியில் எங்குமே, பிரத்யேக கழிப்பிடம் கிடையாது. இதனால் மறைவிடம் தேடித் தனியே செல்ல வேண்டிய அவலம் நிலவுகிறது. அவசரத் தேவையாக இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு கழிப்பிட வசதி செய்து கொடுத்தால், புண்ணியமாகப் போகும்.

- இரா. இளங்கோவன், நெல்லிக்குப்பம்.

மிதிபடும் சிவபெருமான்!

கிரிவலத்தன்று திருவண்ணாமலையில் கற்பூரம் விற்பதுபோல் வேறெதுவும் விற்பது இல்லை. கிரிவலப் பாதையில் ஒவ்வொரு லிங்கத்தின் முன்னிலையிலும் கற்பூரம் ஏற்றும்போது, நடுரோட்டிலேயே ஏற்றி விடுகிறார்கள். இதனால் கிரிவல பக்தர்கள் படும்பாடு சொல்லிமாளாது. தவிர கற்பூரம் இருந்த உரையை நடுரோட்டிலேயே வீசி எறிந்து விடுகிறார்கள். சிவன் படம் போட்ட அந்த உறைகள், பக்தர்களின் காலில் மிதிபடுவது வேதனை தரும் காட்சி.

- எஸ். ப்ரியா, கோவை

இரக்கம் காட்டுங்க சாமி!

நான் பல ஆண்டுகளாக கிரிவலம் வருபவன். கோவில் அருகே உள்ள தனியார் குளியலறை மற்றும் கழிப்பிடங்கள் போதுமானவையாக இல்லை. இதனால் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு, கால் வலிக்க வரிசையில் நின்று கொண்டு பலரும் வேதனைப்படுவதைப் பார்க்க கஷ்டமாக உள்ளது. உடனடியாக கோவில் நிர்வாகம் கழிவறை மற்றும் குளியலறை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அல்லது நகரசபை கொஞ்சம் இரக்கப்படலாம்.

- பா. சீனிவாசன், காகிதபுரம், கரூர்

முகத்தில் அறையும் இலைகள்!

அய்யன் அருணாசலம் தொடங்கி, சந்திரன், இந்திரன் எனப் பலப்பல தேவர்கள், ரிஷிகள், சித்தர்கள் கிரிவலப் பாதையில் வலம் வருவதாக ஐதிகம். அத்தகையப் புனிதப் பாதையில், சாப்பிட்ட எச்சில் இலைகள், பிளாஸ்டிக் குவளைகள், பாலித்தின் பைகள், காலி தண்ணீர்ப் புட்டிகளை வீசியெறிந்து, புண்ணியத்துக்கு பதில் பாவத்தைக் கட்டிக் கொள்கின்றனர். குறிப்பாக எச்சில் இலைகள் காற்றில் பறந்து வந்து முகத்தில் விழுவது சர்வசாதாரணம். இது போன்ற குப்பைகளைச் சேகரிக்க அங்காங்கே பெரிய அளவிலான பிளாஸ்டிக் (சென்னை ஓனிக்ஸ் போல) தொட்டிகளை வைத்து கிரிவலப் பாதையின் புனிதம் காக்க வேண்டும். பலரும் அன்னதான அறக்கட்டளை தொடங்கி, கிரிவல பக்தர்களுக்கு உணவளித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். கிரிவலப் பாதையில் பல இடங்களில் அன்னதானத்தில் எஞ்சிய உறைப் பொட்டலங்கள் சிதறிக் கிடப்பது சர்வசாதாரணம். கிரிவலப் பாதையில் குப்பைகள் அகற்றி 'சுத்தம் செய்யவென்று அறக்கட்டளை அமைத்து ஆக்கபூர்வமாகச் செயல்பட பலரும் முன் வர வேண்டும்.

-எஸ். சந்திரமோகன், திருவல்லிக்கேணி

காதைத் துளைக்கும் ஆபத்து!

கிரிவலப்பாதை முழுவதும், அம்பாசிடர் கார்களில் பக்தர்களை மோதுவதுபோல வந்து ஒலி பெருக்கி மூலம், காதைத் துளைக்கும்படி விளம்பரம் செய்து லாட்டரி விற்பவர்களின் அராஜகம் சொல்லிமாளாது. ஒரு கோடி, ஐந்து கோடி, ஒரு கிலோ தங்கம் என கூவி பக்தி மனநிலையில் இருக்கும் பக்தர்களின் கவனத்தைச் சிதற அடிக்கிறார்கள். அதேபோல கேசட் விற்பனை செய்பவர்களின் ஆக்கிரமிப்புக்கும் காட்டுக் கூச்சலுக்கும் கிரிவலப் பாதையில் தடை விதிக்க வேண்டும். கண்ணகி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது காணாமல் போன இவர்கள் மீண்டும் வந்திருப்பது யாருடைய தயவில்? அரசு நடவடிக்கை எடுக்குமா?

- மோகன், திருவண்ணாமலை

வெறும் காத்துதாங்க வருது!

கிரிவல பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. ஆனால் கிரிவலப் பாதையில் போதிய குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒவ்வொரு லிங்கத்துக்கும் (எட்டுலிங்கம்) பக்கத்தில் குடிநீர் வசதி செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டலாம். ஆனால் தண்ணீர்த் தொட்டிகளிலிருந்து வெறும் காற்றுதான் வருகிறது. கிரிவலப் பாதையிலிருக்கும் கிராம

''ஸ்டேஷனுக்கு முன்னாடி நிறுத்தியிருந்த நம்ம 'ஜீப்'பைக் காணலை சார்..?''

''பதறாம நில்லுய்யா. நம்ம பக்கிரிதான் பத்து நிமிஷம் வண்டி வேணும்னு, எடுத்துட்டுப் போனான்..!''

- எம். அருள்மூர்த்தி

பஞ்சாயத்துக்களாவது அந்தந்த பகுதிகளில் குடிநீர் வசதி செய்து கொடுக்கலாம். ஆலய நிர்வாகத்தையோ அரசையோ நம்பி பயனில்லை.

- கே. விஸ்வநாத், பெங்களூர்

குப்பைக் கிடங்கும் சுடுகாடும்

கிரிவலப் பாதை முடிவடையும் ஈசானிய லிங்கம் கோவில் அமைந்துள்ள வழித் தடத்தைத் தூய்மை படுத்துதல் மிக மிக அவசியம். காரணம் நகரின் ஒட்டு மொத்த குப்பையும், இந்த இடத்தில் கொட்டப்பட்டு எரிக்கப்படுவதால், சுற்றுப்புறக்காற்று கெட்டுப் போய் பக்தர்கள் மூச்சுத் திணற வேண்டியுள்ளது. போதாக்குறைக்கு ஈசானியலிங்கக் கோவில் அருகிலேயே உள்ள சுடுகாட்டு துர்நாற்றமும் சேர்ந்து கொள்ள, பக்தர்களின் நிலை இன்னும் மோசமாகி விடுகிறது. நகரசபை கவனிக்குமா?

- மு. சுபாஷினி, திருவண்ணாமலை.

போலீஸ் பூத் எங்கே?

மாசி மகத்தன்று எனது சகோதரியுடன் கிரிவலம் சென்றிருந்தேன். அவர் திடீரென்று மூர்ச்சையாகிவிட்டார். கிரிவலப் பாதையில் முதலுதவி கோர வழியில்லாமல் தவித்தேன். அரசோ அல்லது தனியார் சேவை நிறுவனங்களோ கிரிவலப் பாதையில் முதலுதவி முகாமோ அல்லது ஒயர்லெஸ்சுடன் கூடிய நடமாடும் முதலுதவிக் கூடமோ நடத்த வேண்டியது அவசியம். அன்றே முதியவர் ஒருவர் தடுக்கி விழுந்து காலில் காயம்பட்டதைக் கண்கூடாகக் கண்டேன். தவிர, எங்களுக்கு முன்னால் நடந்து சென்று கொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண்மணி தமது மகளுடன் இருட்டில் ஒதுங்கினர். கொஞ்ச நேரத்தில் அவரது தங்கச் சங்கிலியை யாரோ பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். ஆனால் ஏற்கெனவே நடந்து களைத்துப் போயிருந்த பக்தர்களால் திருடர்களைப் பின் தொடர்ந்து ஓட முடியவில்லை. கிரிவலப்பாதையில் மோட்டார் சைக்கிளில் காவலர் கண்காணிப்பு மட்டுமல்ல போலீஸ் பூத்தும் அவசியம். இதை மாவட்ட காவல் துறை புரிந்து கொள்ளுமா, இல்லை. கிரிவலம் கடைசி வரை கிலிவலம் தானா?



- ராஜாத்தி கண்ணன், வேலூர்

தரிசனம் கட்!

கிரிவலம் வரும் பக்தர்களில் தொண்ணூறு விழுக்காட்டினர், கோவிலுக்குச் சென்று மூலஸ்தான தரிசனம் செய்வது இல்லை. காரணம் அதற்குரிய ஏற்பாட்டை, கோவில் நிர்வாகம் சரிவரச் செய்வதில்லை. கிரிவலத்தன்று தர்ம தரிசன வரிசையில் மட்டுமல்லாத, இருபது ரூபாய் டிக்கெட் வரிசையிலும் குறைந்தபட்சம் மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டும். வயதானவர்கள், பெண்கள், மிகவும் வேதனையுடன் கால் கடுக்க வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. சிபாரிசு கடிதத்துடன் வருபவர்களுக்கு மட்டும் உடனடி தரிசனம்! நியாயம்தானா?

- மகேஸ்வரி மதியழகன், கரூர்

அடிப்படையே ஆட்டம் டோய்!

திருவண்ணாமலையின் போக்குவரத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்ற அடிப்படைத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை, போக்குவரத்து துறை யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் கிரிவலம் முடித்து மன நிறைவுடன் புறப்படும் வெளியூர் பக்தர்கள், பேருந்துகளில் ஈக்கள் மாதிரி அடைந்து கொண்டு குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் காத்துக் கிடக்க வேண்டும். எந்தப் பேருந்து எப்போது புறப்படும் என்று நேரக் காப்பாளர் யாரும் சொல்வதில்லை. அப்படியே பேருந்து புறப்பட்டாலும் மெல்ல மெல்ல நகர்ந்து முக்கிய சாலைக்கு வந்து சேரவே ஒரு மணி நேரமாகிறது.

பேருந்துகள் வெளியே வரும் வழியும், கிரிவலம் வரும் வழியும் ஒன்றாக இருப்பதால் பக்தர்களை நிறுத்திவிட்டு, பேருந்துகளை வெளியே கிளப்பிச் செல்ல முடியவில்லை. மணிக்கணக்காக மக்கள் விலங்குகள் போல அடைபட்டுக் கிடப்பதும், காத்துக் கிடப்பதும் பெரும் வேதனை. பேருந்து நிலையத்துக்குள் வரும் பேருந்துகள் உடனுக்குடன் கிளம்பிவிட்டால் இந்தத் தேக்கநிலை இருக்காது. ஆனால் யார் இதையெல்லாம் நெறிப்படுத்துவது?

- தி.க.சந்திரசேகரன், திருப்பத்தூர்

இக்கரையில்

விது

மின்னியின் அரங்கேற்றம் நன்றாக முடிந்ததாக ராஜி மின்-அஞ்சல் அனுப்பியிருக்கிறாள். 'நீ இல்லாதது ஒரு குறை,' என்று கடிதத்தை முடித்திருக்கிறாள். எனக்கும் வருத்தம்தான். ஆனால், டெல்லியில் இன்னும் கொஞ்ச நாள் தங்குவதற்குக் காரணம் இருக்கிறது. அம்மாவுடன் வெளிப்படையாகப் பேசுவதே 'கௌன்சலிங்' போலத்தான். இவ்வளவு நாளாய்ப் பூட்டி வைத்திருந்த சிறு வயது உணர்ச்சிகளைப் பகிர்ந்து, வெளியேற்றுவது முக்கியம்.

அம்மாவிடம் அந்த வயதிலேயே இப்படிப் பேச முடிந்திருந்தால்.. நினைவைத் தடுக்க முடியவில்லை. எத்தனையோ இழப்புகளைத் தவிர்த்திருக்கலாம். ரமேஷுடன் சண்டை முற்றிய காலங்களில், யூ.எஸ். வாழ்க்கை முறை மேல் பழி போட்டிருக்கிறேன். குடும்ப அமைப்பு எனக்குத்தான் ஒத்து வரவில்லையோ என்று நினைத்திருக்கிறேன்.

ஆனால், இங்கு அம்மாவிடம் பேசிய பிறகு தெளிவாகப் பார்க்க முடிந்தது. என் ஆழ்மனதுப் பிரச்னை இது. எங்கு போனாலும் என்னைத் தொடர்ந்திருக்கும். அம்மாவின் சொந்தக் கதையைக் கேட்ட பிறகு, குடும்பம் பற்றி இருந்த கொஞ்ச நம்பிக்கையும் பறந்து போனது.

அப்போது ரஞ்சிக்கு எழுதினேன்: "பொருளாதாரச் சுதந்தரமும், சமூகத்தில் ஓரிடமும் தானாகவே தேடிக் கொண்டவள் நீ. குடும்பம் என்ற சமூக அமைப்பின் பாதுகாப்பு உனக்கும் கூடத் தேவையா?"

ரஞ்சியின் பதில். "என் உழைப்பினால் உருவாக்கிக் கொண்ட ஓர் அடையாளமும் வாழ்வும் எனக்கு உண்டு. க்ரிஸ்ஸை





காஞ்சனா தாமோதரன்

அதில் ஒரு பகுதியாக்கிக் கொள்கிறேன். க்ரிஸ்ஸுக்கும் அது போலவே. ஒருவரால் மற்றவரின் தனி அடையாளத்தை மதிக்க முடிகிறது. தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் மனப்பலமும் இருப்பதால், அடுத்தவர் வெற்றியைப் பார்த்துச் சந்தோஷப்படவும், தோல்வியின் போது தோள் கொடுக்கவும் முடிகிறது. அகங்காரமோ தாழ்வு மனப்பான்மையோ போட்டியோ காழ்ப்போ ஏற்பட்டிருந்தால், மனமும், மணமும் முறிந்திருக்கும். நிச்சயமாக.

"எனக்கு ஏன் குடும்பம் தேவை என்று கேட்கிறாய். நம்பிக்கையும் அன்பும் சம நட்பும் நிறைந்த ஒரு புகலிடம் அது. இல்லையெனில், அன்றாட வாழ்வின் இயந்திரத்தனம் என்னைப் பிழிந்து சக்கையாக்கித் துப்பியிருக்கும்.

"இது என் தனிப்பட்ட சூழலினால், என் அனுபவத்தினால் நான் எழுதுவது என்பதை மறக்காதே. எனக்குச் சரியானதுதான் உனக்கும் சரி என்று சொல்ல மாட்டேன். விது, நீ எதையுமே ஆழமாய் யோசிப்பவன்.

27

பொதுச் சித்தாந்தங்களை அலசினால் பொதுவான பதில்கள்தான் கிடைக்கும். உனக்கு என்ன தேவை என்று நினைத்துப் பார்."

ராஜியை நினைத்துப் பார்க்கிறேன். உறங்கும் ஐந்து மணி நேரத்தைத் தவிர, மற்ற நேரத்தை வேலைக்கே அர்ப்பணித்து விட்ட குமார். வீட்டையும் மின்னியையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பில் இது வரை மூழ்கியிருந்த ராஜி. இனி

மேற்படிப்பைத் துவங்கப் போகும் ராஜி. அவள் சிரிப்புக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் ஏதோ ஒரு தேடல். அதற்கு இப்போது திசை யில்லை. காலத்தில் திசைகள் புரியக்கூடும். ஆனால், இது ராஜியின் தனிப்பட்ட வளர்ச் சியின் அடுத்த கட்டம் என்பது மட்டும் நிச்சயம்.

தனிப்பட்ட வளர்ச்சி. இது எனக்குச் சிறு வயதில் போதிய அளவு இல்லை. இப்போது அதற்கு ஈடு கட்டிக் கொண்டிருக்கிறேன். அம்மாவிடம் பேசும் ஒவ்வொரு கணமும் ஒரு வளர்ச்சி யுகம். அவள் சொல்வதை மட்டும் இல்லை. யார் பேசுவதையுமே இப் போது தெளிவாய்க் கேட்க முடிகிறது. என் காதில் எப்போதும் சலசலத்துக் கொண் டிருந்த சொந்தக் குழப்பங்கள் விலக விலக, மற்றவர்களின் உலகங்களைப் பற்றி நினைத்துப் பார்க்க முடிகிறது.

ரமேஷ், பல வருடங்களாக அவர் வாழ்ந்த வாழ்க்கையும், குழந்தைகள் வாழ்க்கையும், என் வாழ்க்கையும் வீணாகிப் போனதை எப்படி ஈடுகட்டுவது. இங்கு வந்திருக்கும் போது அவர் சொன்னது நினைவுக்கு வரு கிறது: "தப்பு என் மேலேயும்தானே, விது. இவ்வளவு அழுத்தம் உனக்குள்ளே இருக் கிறது புரியாம இத்தனை வருஷம் குப்பை கொட்டியிருக்கேனே!"

உண்மைதான். ஆனால், இவரை முழு தாய்க் குற்றம் சொல்ல முடியாது. என் மனச் சுவர்கள் எனக்கும் அம்மாவுக்கும் மட்டுமே தெரிபவை. ஆழத்தில் புதைந்து கிடப்பவை. அவை வெளியே தெரியாமல் நடந்து கொள்வது எனக்குப் பல வருடத்துப் பழக் கம். முறையான 'கௌன்சலிங்' எனக்குத் தேவைதான். சுவர்களை இடித்துப் பாலங் கள் கட்ட ஆரம்பிக்க.

நான் சிரித்தபடியே பதில் சொன்னேன். "அந்தப் புஸ்தகம் ஞாபகமிருக்கா, ரமேஷ்? ஆண்களும் பெண்களும் எவ்வளவு வித்தியாசமானவங்கன்னு சொல்ற புஸ்தகம்... ஹும்ம்ம்...'மென ஆர் ஃப்ரம் மார்ஸ், விமென் ஆர் ஃப்ரம் வீனஸ்.' ('ஆண்கள் செவ்வாய்க் கிரகத்திலிருந்து வருவோர், பெண்கள் வெள்ளியிலிருந்து வருவோர்')

"பூமிக்கு வந்து சேர்ந்தப்புறம் எல்லாரும் மனுஷங்களா இருந்தா சரி," என்று ரமேஷ் சிரித்தது நினைவுக்கு வருகிறது.

அனுகா

இது எனக்குப் பிடித்த காலம். பூக்கும் வசந்தம். டாக்வுட், க்ரேப் மர்ட்டில், செர்ரி மரங்கள் எல்லாம் பெரிய பெரிய பூங் கொத்துகளாய் நிற்கின்றன. அடர்ந்த பூக் களுக்கும் அடியில், தங்கள் பிறப்பை எதிர் பார்த்துச் சுருண்டிருக்கும் இலை மொட் டுக்கள். மரத்துக்கும் வேலிக்குமாய்த் தாவிக் கொண்டிருக்கும் பெரிய அணில்கள். வசந் தத் தூவானம் முடிந்து சூரியன் வெளியே வந்திருக்கிறது. தோட்டத்துப் புல் தரை, பாதங்களின் அடியில் ஈரமாய்ச் சொத சொதக்கிறது. அந்த ஒலியை ரசித்துக் கொண்டே நடக்கிறேன்.

மின்னியின் அரங்கேற்றம் நன்றாக முடிந்தது. அழகாய் இருந்தாள். நிகழ்ச்சிக்குப் பிறகு மேடையில் பேசினாள் - கலை என்பது கலாசாரத்தின் ஒரு வெளிப்பாடு என்றெல்லாம் அவளுக்கு இன்னும் 'கலா சாரம்' என்ற வார்த்தை மேல் ஒரு மயக்கம். நாங்கள் எட்டாம் வகுப்பிலும், ஒன்பதாம் வகுப்பிலும் உலகக் கலாசாரங்கள் பற்றிப் படித்து அலசியது போதாதாம். இன்னும் புரிந்து கொள்ள வேண்டுமாம். 'நம் கலா சாரத்தில்...' என்று சொல்லியே ராஜி ஆண்ட்டி அவளை அடிக்கடி விரட்டுவதால் வந்த ஆர்வமோ?

மின்னி கலாசாரம் பற்றி ஒரு குறிப்பு தந்தாள். "தொடர்ந்து மாறும் மனநிலை. எங் கிருந்தாலும், யாராக இருந்தாலும், கண் ணுக்குத் தெரியாத ஒன்றோடு போர் செய்வது மாதிரிதான் அது. முதல் தலை முறை இந்திய - அமெரிக்கனாய் இருப்பதால், எனக்குப் பல போர்க்களங்கள்."

அமெரிக்கக் கலாசாரம் என்று மின்னி



"திருடனைத் துரத்திக்கிட்டே ஓடினேன். டக்குனு அவன் சினிமா தியேட்டருக்குள்ளே பூந்துட்டான்; நான் திரும்பி வந்துட்டேன்!"

"ஏன்?"

"நான் அந்தப் படத்தை ஏற்கெனவே பார்த்துட்டேனே!"

- சரவணபவன்

எதை நினைக்கிறாளோ. உலகமே வந்து குடியேறி விட்ட தேசத்துக்கு ஒரு முகம்தானா இருக்க முடியும்? அமெரிக்கனோ, இந்திய - அமெரிக்கனோ, எந்த முத்திரை குத்தினாலும், நான் அதே 'அனுகா'தான். ஆனால், மின்னி சொன்னதன் அடிப்படை சரி. என் சூழலோடு உரசும்போதுதான் நான் யார் என்று எனக்கே தெளிவாகத் தெரிகிறது.

அம்மா இந்தியாவில் இருந்தபோது நிறைய நண்பர்களாகச் சேர்ந்து 'ரோலர் ஸ்கேட்டிங்' போயிருந்தோம். இவர்கள் எல்லாரும் எத்தனை நாள் இப்படிக் கூட்டமாய் வெளியே போகச் சம்மதிப்பார்களோ. காடு போல் இயற்கைப் பூங்கா. சைக்கிள் ஓட்டவும் 'ரோலர் ஸ்கேட்' செய்யவும் வசதியான பல மைல் நீளப் பாதைகள். ஸ்கேட்டிங் முடிந்ததும் புல்தரையில் உட்கார்ந்து 'ஸ்கேட்'டைக் கழற்றிக்கொண்டிருந்தேன்.

"ஹாய்!" என்று சிரிக்கும் ஆலனின் குரலைக் கேட்டவுடனேயே மனத்துக்குள் வழக்கமான படபடப்பு. நிமிர்ந்து பார்த்தேன். சூரிய ஒளியில் கண் கூசியது. ஒளியின் நடுவே முகம் தெரியாத நிழல் உருவமாய் ஆலன். ஏதோ மின்னல் மாதிரி என்னுள் இறங்கியது அந்தக்கணத்தில்.

விரும்புதல், விரும்பப் படுதல். அதற்கான தேடல். என்னுள் இருக்கும் இந்த மெல்லிய தேடலின் இன்றைய வடிவம்தான் ஆலன். இது தற்காலிகமா, நிரந்தரமா என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. ஆனால், இப்போதைக்கு இவன் நண்பனாகவே நின்று விடட்டும். என் முடிவு.

உணர்வுகள் இயல்பானவைதான். ஆனால், என் வாழ்க்கைக்கு எது எது, எப்போது முக்கியம் என்று அறிவுடன் தேர்ந்தெடுப்பது நான்தான்.

ரஞ்சி

அனுகா குறுக்கும் நெடுக்குமாய்த் தோட்டத்தில் உலவிக் கொண்டிருப்பது மாடியிலிருந்து தெரிகிறது. இந்தியாவிலிருந்து நான் திரும்பி வந்ததும் என்னை இறுகக் கட்டிக் கொண்டாள். முகத்தில் இறுக்கம் இல்லை. தெளிவு. எனக்குக் கொஞ்சம் நிம்மதி.

மின்னியின் அரங்கேற்றம் நன்றாக முடிந்தது. மின்னி, ராஜி, குமார் எல்லாரின் உழைப்பும் தெரிந்தது. நல்ல கூட்டம். நிகழ்ச்சி முடிந்த பிறகு, ஓரமாய்ப் பவன் மின்னியிடம் பூங்கொத்து கொடுத்ததும், மின்னியின்



"சுண்டலுக்கு நீ காசு கொடுக்கும்போது அந்த சுண்டல்காரன் உன்னை முறைச்சுப் பார்த்தானே, ஏன்?"

"நான் வீண் செலவு செய்தா என் அப்பாவுக்குப் பிடிக்கவே பிடிக்காது, டார்லிங்!"

- பொன் இலக்கியா

முகத்தில் ஒரு தனி ஒளி பூத்ததும், அதைப் பார்த்து ராஜியின் முகம் சுருங்கியதும் ஒருகணத்தில் நடந்தவை. இது எப்படிப் போகும் என்பது மின்னியையும் ராஜியையும் குமாரையும் பொறுத்தது.

விது எழுதியிருக்கிறாள்: "நான் அங்கு வந்த பிறகும் கொஞ்ச காலம் தனிக் குடித்தனமாகவே இருக்கலாம் என்று நினைக்கிறேன். ரஞ்சி, ரமேஷும் நானும் இத்தனை காலமாகக் கொட்டிய கோபங்களும் வார்த்தைகளும் இருவருக்குமே உடனே மறைந்து போகாது. முதலில், ரமேஷும் நானும் ஆரோக்கியமான நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். என் கடந்த காலத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைத்த பிறகு, எல்லாம் சரியாகும் என்று நம்புகிறேன். என் எம்.பி.ஏ படிப்பை மறந்துவிட்டு, குழந்தைகளுக்கான 'கௌன்சலிங்' வேலை செய்ய விரும்புகிறேன். இன்றைய உலகத்தில் இது ஒரு முக்கியத் தேவை என்பது என் அனுபவப் பாடம். இதற்காகத் தனிப்பட்ட மேல்படிப்புத் தேவைப்படலாம்."

ராஜியும் மேற்படிப்புக்குப் போகிறாள். தனக்கென்று ஏதாவது செய்யும் நேரம் இது என்கிறாள். படிப்புதான் சரியான பதிலா என்று தெரியாது. ஆனால், இது ஒரு தொடக்கம்.

சில நாடுகளில் எங்கள் நிறுவனம் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி ஏ.ஜே.யுடனும், அந்தந்த நாட்டு நிறுவனத் தலைமைகளுடனும் ஆழமாகப் பேச ஆரம்பித்தா



சில வாசகக் கேள்விகளுக்குப் பதில்கள்

1. அத்தியாயம் 11: பாடல் வரிகளைப் பாடல் வேகத்துக்கு ஏற்றது போல் திரையில் நகரச் செய்யும் டி.வி.வி என்று ஆலனின் பள்ளி விழாக் காட்சியில் வருகிறது. இது கற்பனையா?

இல்லை. தொழில் நுட்பம் இருக்கிறது.

2. அத்தியாயம் 17: அனுகா இந்த வயதிலேயே 'டேட்' செய்யக் கூடாது. நண்பர் கூட்டமாக மட்டும் போகலாம் என்றும், நிறைய விதிமுறைகள் போடுவதாகவும் காட்டுகிறீர்கள். அமெரிக்காவில் இப்படியா?

எங்கள் குடும்பத்தின் அமெரிக்க நண்பர்கள் பலரும் குழுவாகச் சேர்ந்து தங்கள் 'டீனேஜ்' பையன்கள், பெண்களுக்குச் சொல்லியிருப்பது இது. அமெரிக்க முறைப்படி பார்த்தால் இது புதுமை என்பதால் கதையில் இடம் பெற்றது. இந்த மாதிரிப் பெற்றோர் சிறுபான்மைதான். 'டேட்டிங்' அனுமதிக்கும் பிற பெற்றோருமே சில அடிப்படை விதிகள் போடுகிறார்கள். குழந்தைகளின் சுதந்தரத்தைத் தாங்கள் மதிக்கும் அதே சமயத்தில், தங்கள் வீட்டில் தங்கும் வரை தங்கள் விதிமுறைகளைக் குழந்தைகள் மதிக்க வேண்டும் என்பது பல பெற்றோர்களின் குழந்தை வளர்ப்புச் சித்தாந்தம்.

3. அத்தியாயம் 21: ரோமிலா தாப்பர் பற்றி?

உலக அளவில் மதிக்கப்படும் இந்திய வரலாற்றாளர், பேராசிரியை. சரித்திரங்களைப் புரிந்து கொள்ளப் பல வேறுபட்ட கோணங்களும் பார்வைகளும் தேவை. இவருடையது ஒரு பார்வை. சில சமீபத்தியப் புத்தகங்கள். Cultural Pasts: Early Indian History (2001). உலக வர்த்தக அரங்கில் இந்தியாவுக்குப் பெருமை சேர்ப்பவர்களில் ஒருவரான 'இன்ஃபோசிஸ்' தலைவர் நாராயணமூர்த்தி உள்படப் பலரது கட்டுரைகளும் அடங்கிய India Another Millenium (2000) என்ற தொகுப்பு.

நன்றியும் வணக்கமும்

1. கவிதை வரிகளுக்கு (கதையில் தோன்றும் வரிசையில்) ஃபாப்லோ நெருடா (லத்தீன் அமெரிக்க ஸ்பானிஷ்), டேவ் மேத்யூஸ் (யு.எஸ்.), வைரமுத்து, ஒனிட்ஸுரா (ஜப்பானீஸ்), புசான் (ஜப்பானீஸ்), பியாரியம் வர்பர்டோனி (உருது), கல்யாண்ஜி, பாரதி, கமலா தாஸ் (கேரளம்), கண்ணதாசன், பாரதிதாசன்.

2. ராகம் சார்ந்த மெட்டுகளுக்கு: ஜி. ராமநாதன், டி. சலபதிராவ், ஏ.எம். ராஜா, எம்.எஸ். விஸ்வநாதன்/விஸ்வநாதன்-ராமமூர்த்தி, கே.வி. மகாதேவன், இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான்.

3. வாசகர்களுக்கும் ஓவியர் ஷியாமுக்கும், 'கல்கி' ஆசிரியர் குழுவுக்கும்.'

யிற்று. நஷ்டம் ஏற்படத்தான் செய்யும். ஆனால், நீண்ட காலப் பார்வையில் நான் செய்வது சரி என்பது தெளிவாகிவிட்டது. நஷ்டத்தை ஈடுகட்ட, வளர்ந்த நாடுகளிலேயே ஏதாவது செய்ய முடியுமா என்று ஒரு குழு ஆய்வு நடத்தப் போகிறது. நான் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள இன்னும் மூன்று மாதங்கள்.

செல்வியும் நண்பர்களும் மின்-அஞ்சல்கள் அனுப்புகிறார்கள். தங்கையும் திருமதி வர்மாவும் மாணவர் சிறுதொழில் திட்டத்துக்காக நாங்கள் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியல் போட்டிருக்கிறார்கள். நானும் நடுவே அங்கே போகலாம். நீளப்பட்டியல். அதிகம் எதிர்பார்க்காதே என்று திருமதி வர்மா எச்சரிக்கிறார். எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

நினைத்துப் பார்க்கிறேன். வாழ்க்கை நிகழ்வுகளில் பல, வெறும் நிகழ்வுகளாகவே நின்று விடுகின்றன. சில நிகழ்வுகள் மட்டும் தான் அடிப்படைப் பார்வையையே மாற்றி, அனுபவங்கள் ஆகின்றன. இந்த இந்தியப் பயணம் அப்படிப்பட்ட அனுபவம். எனக்கும் விதுவுக்கும் ராஜிக்கும் இது புதிய துவக்கங்களுக்கான நேரம்.

பக்கத்தில் க்ரிஸ்ஸின் குரல். ""அனுகா நடந்தே புல்தரையைத் தேய்த்து விடுவாள் போலிருக்கிறது. போய்ப் பேசுவோமா?"" புன்சிரிப்புடன் சேர்ந்து நடக்கிறோம்.

(நிறைந்தது)

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : இந்த வாரம் மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பெருகும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் தலைகீழா நின்னாவது முடிச்சுடுவீங்க. ரேடியோ, வீடியோ, டீவி., துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நன்மை உண்டு. பேச்சில் நிதானம் வேணும். பொருளாதார நிலை சாதாரணமாதான் இருக்கும். கொடுக்கல் வாங்கல்ல விழிப்போடு செயல்படறது நல்லது. உஷ்ண சம்பந்தமான உபாதைகள் ஏற்படலாம்.




ரிஷபம் : இதுவரை கண்டும் காணாமலிருந்த நண்பர்களும் உறவினர்களும் இப்ப ஓடோடி வந்து உதவப் போறாங்க. திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். ஆன்மிகம் பக்கம் மனம் போகும். குடும்பத்துல 'டும்டும்' நடக்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு நன்மை உண்டு. அதிக உழைப்பு, அலைச்சலிருக்கும். உடல் நலத்துல கவனம் வையுங்க. முன்ன பின்ன தெரியாதவங்ககிட்ட பழகும்போது எச்சரிக்கை வேணும். கணவன் மனைவிக்குள்ள சிறு சிறு பிரச்னைகள் வரும். பொறுமை அவசியம்.



மிதுனம் : எல்லா கிரகங்களும் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால உங்கள் ஆற்றல், சாமர்த்தியம் வெளிப்படும். எதிர்ப்புகள் அகலும், மதிப்பும் அந்தஸ்தும் உயரும். இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் குறையும். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வரும். அரசியல்வாதிகள் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கெல்லாம் முன்னேற்றம் உண்டு. புதிய பொறுப்புகள், பதவிகள் வந்து சேரலாம். பண விஷயத்துல விழிப்போட இருங்க. செலவு எகிறும். ஆடம்பரச் செலவை தவிர்த்திடுங்க.



கடகம் : பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை ஏற்படும். பார்ட்டி, பங்ஷன்னு அலைவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. வேலை இல்லாம இருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். வேலையில இருக்கறவங்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு உண்டு. துணிச்சலான காரியங்கள்ல ஈடுபாடு அதிகரிக்கும். விளையாட்டு, வழக்கு விவகாரங்கள்ல வெற்றி உண்டு. திறமை வெளிப்படும். மக்களால் சஞ்சலம், பிரச்னைகள் உண்டாகலாம். ஜாக்கிரதை.



சிம்மம் : எதிர்ப்புகள் அகலும். மனசுல துணிச்சல் பிறக்கும். நல்லவங்க உங்களுக்கு உதவ வருவாங்க. குடும்பத்துல சுப காரியம் நடக்க வாய்ப்பிருக்கு. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். சினிமா, நாட்டியம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி உண்டு. மனை, வீடு, நிலம் மூலமாக லாபம் வரும். வியாபாரிகளுக்கு லாபம் பல வழிகள்ல வரப் போகுது. மாணவர்கள் படிப்புல முழு கவனம் செலுத்துவது நல்லது.



கன்னி : இந்த வாரம் அப்படி இப்படித்தான் இருக்கும். சின்ன சின்னத் தடைகள் வரலாம். டென்ஷன் ஆகாதீங்க. கணவன் மனைவி உறவில் சலசலப்பு வரும்.




சின்ன நந்திதா தாஸாக நடித்த 'அழகி' ஸ்ருதிக்கு (கும்பராசி) விளையாட்டில் வெற்றியாமே!

கருத்து வேறுபாடு ஏற்படலாம். விட்டுக் கொடுத்து பழகுறது நல்லது. குடும்பத்துல பிரச்னைகள் தலை தூக்கும். எதிர்ப்புகள் இருந்தாலும் சமாளிப்பீங்க. பணம் கொடுக்கல் வாங்கல்ல விழிப்போட இருங்க. புதிய முயற்சிகள்ல இறங்காதீங்க. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.



துலாம் : உங்கள் மதிப்பு, அந்தஸ்து செல்வாக்கு உயரும். முக்கியமான எண்ணங்கள் நிறைவேறப் போகுது. குழப்பங்கள் அகலும். மனசுல தெளிவு பிறக்கும். அரசு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான திருப்பம் வரும். நிர்வாகத் திறமை அதிகரிக்கும். முக்கிய பதவிகள் பட்டங்கள் வந்து சேரும். கணவன் மனைவிக்குள்ள சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம். பேச்சில நிதானத்தைக் கடைப்பிடிக்கிறது நல்லது. புதியவங்க கிட்ட பழகும்போது எச்சரிக்கை அவசியம். சாப்பாடு விஷயத்துல கட்டுப்பாடு அவசியம். பயணம் தவிர்ப்பது நல்லது.




விருச்சிகம் : பத்திரிகை, எழுத்து, கணிதம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி உண்டு. கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. திரவப் பொருட்கள் லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க நலமடைவாங்க. சிறு சிறு பிரச்னைகள், கருத்து வேறுபாடுகள் வரலாம். செய்யும் தொழிலில் முழு அக்கறையுடன் எதையும் நிதானமாகவும் பக்குவமாகவும் சமாளிப்பது நல்லது.




தனுசு : உங்க முகத்துல வசீகரம் கூடும். எடுத்த காரியத்துல வெற்றி பெறுவீங்க. பண நடமாட்டம் திருப்தி தரும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். பெண்கள் புதிய நகைகள், ஆடை அலங்காரப் பொருட்கள் வாங்க வாய்ப்பிருக்கு. சுபகாரியங்களுக்குப் போகச் சந்தர்ப்பம் வரும். தெய்வ, தர்ம பணிகளில் மனம் ஈடுபடும். தொழில் பண்றவங்க லாபம் அடையலாம். அரசாங்க விவகாரங்கள்ல ஆதாயம் உண்டு.



மகரம் : சூரியன், புதன் சுக்ரன், கேது எல்லாரும் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால உங்க செயல்திறமை, சாமர்த்தியம் வெளிப்படும். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவும் பாராட்டும் பெறுவாங்க. நீண்ட நாளா எதிர்பார்த்திருந்த முக்கியமான காரியங்கள் இப்ப நடக்கும். நண்பர்கள், உறவினர்கள் பக்க பலமாக விளங்குவாங்க. பெண்களுக்கு வழக்கமான பலன்கள் தடைபடாது. எதிலேயும் முழுமையான பலனை எதிர்பார்க்க முடியாது. சிறு சிறு சங்கடங்கள் வரலாம். உஷாரா இருங்க.



கும்பம் : மனசுல உற்சாகம் பிறக்கும். எதிரிகள் விலகிப் போவாங்க. பொருளாதார நிலை திருப்திகரமா இருக்கும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. கொடுக்கல் வாங்கல் இனங்கள்ல ஆதாயம் உண்டு. மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க எல்லாம் நிறைவேறப் பெறுவாங்க. விளையாட்டு விநோதங்கள்ல வெற்றி உண்டு. அலைச்சல் அதிகரிக்கும். சின்னச் சின்னப் பிரச்னைகள் ஏற்படும். பயணத்தைத் தவிர்த்திடுங்க.



மீனம் : உங்க முகவசீகரம், திறமை, சாமர்த்தியம் வெளிப்படப் போகுது. பொது நலப் பணிகள்ல ஈடுபாடு கூடும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நன்மை உண்டு. பெண்களுக்கு உற்சாகமான வாரமிது. புதிய நண்பர்கள் கிடைப்பாங்க. எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் ஓடிப் போவாங்க. உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வரலாம். அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரிகள் அகலக் கால் வைக்க வேண்டாம். எதிலும் நிதானம், பொறுமை அவசியம்.

ஏப்ரல் 3 முதல் 9 வரை

அக்னிசர்மா பக்கம்

மறையிறைஞ்சும் சேவடிகள்!

'பல வித யோக முயற்சிகளில் ஈடுபட்டு, செயலடங்கி, சித்தத்தைக் கட்டுப்படுத்தி, குண்டலினி சக்தியைத் தூண்டி, மூலாதாரத்துடன் ஒன்றும் சிரமமெல்லாம் எதற்கு?' என மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பிப் பாடியவர் அருணகிரிநாதர். 'இந்த முயற்சிகளில் செலவிடும் சக்தியையும் நேரத்தையும் முருகன் திருவடிசரணங்களைப் பற்றும் எளிய காரியத்தில் செலுத்தினால் போதுமே, அவனால் ஆட்கொள்ளப்படும் உயர்வு தானே நம்மைத் தேடி வந்து விடுமே!' என்று சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் எடுத்துச் சொன்னவர்.

'சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேர மட்டில்' என்று தொடங்கும் திருப்புகழ் வெகு அழகானது. அவன் திருவடி நினைவே ஆலயம் என்பது கருத்து.

முருகனின் திருவடிச் சிறப்புக்குச் சான்றாக விளங்கும் தலம் பொன்மலை. கோவை அருகேயுள்ள மருதமலையிலிருந்து பொள்ளாச்சி செல்கிற சாலையில் 21 கி.மீ. தொலைவில் உள்ளது இத்தலம். 'கிணத்துக் கடவு' என்றும் 'கனக கிரி' என்றும் பெயர் கொண்ட சிற்றூர்.

இயற்கை எழில் சூழ்ந்த பிரதேசத்தில் அமைந்த ஊரின் நடுவே இருக்கிறது அந்தச் சிறு குன்று. அறுநூறு அடி உயரம். மேலே ஏறிச் செல்ல, பாறைகளைச் செதுக்கி படி அமைத்திருக்கிறார்கள். படியேறும் முன் குன்றை வலம் வந்தால், ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு சிறு மலைகள் இருப்பதைக் காண்கிறோம்.

இங்கேயும் படியேறுகையில் இடும்பன் இருக்கிறார்! அவர் சந்நிதியில் வணங்கிவிட்டு மேலே போகிறோம். வேலாயுதசுவாமி கோயில் என்ற பெயருடன் குன்றின் உச்சியில் இருக்கிற கோயிலின் இரு பக்கங்களிலும், வற்றாத இரண்டு சுனைகள் – கரை காணாத அவன் கருணைக்கும் அருளுக்கும் சாட்சியாக அமைந்திருக்கின்றன. முதல் சுனையில் நீராடிவிட்டுக் கோயிலை வலம் வரவேண்டும் என்கிறார்கள். அதன் பின்னர் இரண்டாவது சுனையில் நீராட வேண்டுமாம். முருகனைக் காண்பதற்கு முன்னரே அவன் கருணையில் நனைந்து அருளில் திளைத்துவிடுகிறோம்!

உள்ளே... கிழக்கு நோக்கிய வாயிலையொட்டி கொடிமரம். கருவறைக்கு நேர் எதிராக கோலமயில். மகா மண்டபத்தைக் கடந்து இடது பக்கமுள்ள விநாயகரை முதலில் வந்தனை செய்கிறோம்.

மூலஸ்தானத்து வேலாயுதசுவாமி ஒயிலே வடிவமாக கிழக்கு நோக்கி நிற்கிறார். வேல் பிடித்த வலக்கரம்; தண்டாயுதமும் இருக்கிறது. இடக்கரம் இடுப்பில் பொருந்தியிருக்கிறது. விழிகளின் கருணையில் சிக்குண்டு அவற்றிலிருந்து நம் பார்வையை அகற்ற முடியாமல் திணற வேண்டியிருக்கிறது. தீபமங்கள ஜோதியில் அவன் திருமுடியும் வதனமும் கண்டு சிலிர்த்து, பார்வை அந்த விசேஷ திருவடிகளில் போய் நிலைக்கிறது.


இத்தலத்து முருகனுக்கு அருணகிரி நாதர் பாடியுள்ள திருப்புகழ் வர்ணனைதான் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

பரிதிமதி நிறைய நின்றசோ
தென்வொளிரு முனது துங்கப்
படிவமுக மவைகள் கண்டுத்
தகமேவும்

படர்கள் முழு வதும கன்றுட்
பரிவினொடு துதிபு கன்றெற்
பதயுகள மிசைவ ணங்கற்
அருள்வாயே

"சூரிய சந்திரர்கள்போல் பிரகாசிக்கிற

குருஜி ஏ.எஸ். ராகவன்




உனது பரிசுத்தமான திருமுகங்களைக் கண்டு, மனத்தில் இருத்தி, துன்பங்கள் முழுதும் நீங்கப் பெற்று, உள்ளத்தில் அன்பு மீதூற உன்னைத் துதித்து, ஒளிபொருந்திய உனது திருவடிகளை அடைய, நீயேதான் அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டுகிறது இத் திருப்புகழ்.

பொன்மலை முருகன் பேரில் பாடப்பட்டதாகக் கிடைத்திருக்கும் ஒற்றைத் திருப்புகழ் இது! 'அரிவையர்கள் தொடரு மின்பத்' எனத் தொடங்குகிறது. வேலாயுதசாமியின் தோற்றப் பொலிவையும் திருவடிச் சிறப்பையும் ஒருசேர வியக்கிறது.

கருவறையிலிருந்து அகன்று வர மனமில்லைதான். ஆனால் கோவிலை முழுதும் காணவேண்டுமல்லவா.

அர்த்த மண்டபத்தின் வலப்புறம் வருகிறோம். அங்கே ஆனந்த நடராஜனாக



பிறை சூடிய அண்ணல் காட்சி தருகிறார். இடப்புறத்தில் அவரே சோமாஸ்கந்த மூர்த்தியாக உமையோடு சேர்ந்து முருகனைக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார்.

உத்ஸவ மூர்த்தங்களிடையே வேலாயுத சுவாமி வள்ளி தேவஸேனா சமேதராக காட்சி தருகிறார். இச்சா சக்தியின் வடிவமான வள்ளிப் பிராட்டியின் செந்தாமரைத் திருவடிகளில் அவன் பணிந்து வேண்டிய அழகிய வரலாறு, திருவடித் தலமாகச் சிறப்புப் பெற்ற இத்தலத்தில் நமக்கு ஞாபகம் வருகிறது.

இறந்த வெளிப் பிராகாரத்தைக் கடந்து, பின்புறமுள்ள பிறைக் கோயிலில் வைத்து வழிபடப்படுகின்ற அவன் திருப்பாதங்களைக் காணச் செல்கிறோம்.

குன்றுதோறும் விளையாடிச் சிவந்த அந்தப் பாதங்களின் சிறப்பைப் பாடாதவர்களே இல்லை.

'விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்' என்றும் 'தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என் பாவடி யேட்டிலும் பட்டதன்றோ படிமா வலிபால் மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச் சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே' என்றும் 'உபயசதுர் மறையின் முதல் நடு முடிவின் மணம் நாறு சீரடியே' என்றும் அருணகிரி நாதர் ஒருவரே பலவாறாகப் பாடிய பாதங்கள்.


அப்பாதங்கள் பொன்மலையில் பதிந்த வரலாறு சுவாரஸ்யமானது. மறை (வேதம்) கொஞ்சும் பாதங்கள் என்றும் மறை இறைஞ்சும் பாதங்கள் என்றும் சிறப்பிக் கப்பட்ட சேவடிகள்.

ஆதியில் பொன்மலையில் முருகனது திருப்பாதங்களின் சுவடுகள் மட்டுமேயிருந்தனவாம், அவை அமைந்திருக்கும் இடத்தை முருகனே ஓர் அன்பரின் கனவில் குறிப்பிட்டுக் காட்டியதாகவும் தலவரலாறு கூறுகிறது.

சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர், அருகிலுள்ள புரவிப்பாளையம் எனும் கிராமத்தில் ஒரு சிறந்த முருக பக்தர் இருந்தார். பழநி ஆண்டவனைத் தினமும் தரிசித்து தவமுறையில் வழிபட்டு வர வேண்டும் என்று ஆவல் கொண்டார். பழநிக்குச் சென்று ஒரு நண்பரின் வீட்டில் தங்கினார்.

அங்கு அவரது விருப்பத்திற்கு அநேக இடையூறுகள் விளைந்தன. மனம் நொந்து ஊர் திரும்பும் வழியில் ஷண்முக நதியும் திடீரெனப் பெருக்கெடுத்தது. அன்பர் மிகவும் மனம் வருந்தி முருகப் பெருமானை மனமுருகி வேண்டினார். அவர் கனவில் முருகன் தோன்றி, பழநி வந்து தன்னை தரிசிக்க இயலாமைக்கு வருந்த வேண்டாம் என்று சொல்லி தன் திருவடிச் சுவடுகள் பொன்மலையிலேயே பதிந்துள்ள இடத்தைக் குறித்துக் காட்டி, அந்த மலையிலேயே தனது திருவடிச் சுவடுகளுக்கு அருகே ஓர் ஆலயம் அமைக்குமாறும் கட்டளையிட்டார். நாளடைவில் மைசூர் மன்னர் உதவியால் பொன்மலையில் இருந்த பழைய கோயில் புதுப்பிக்கப்பட்டு வேலாயுத சுவாமியும் சிலையுருவில் அங்கிருந்து அருள் புரியலானார்.

சந்தன மரம் இங்கு தலவிருட்சமாகக் கருதப்படுகிறது. ஆனால் தற்சமயம் இம்மரத்தைக் காண முடியவில்லை.



வெளிப்பிராகாரத்தில் வலம் வரும் போது ஆலயத்தின் கற் சுவர்களில் ஆங்காங்கே மீன் சின்னமும், வேல் சின்னமும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவை ஆதி காலத்தில் கோயில் திருப்பணிகளில் பாண்டியர்கள் பங்கு கொண்டு தங்களது கலைத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளனரோ என்று தோன்றுகிறது.

விசேஷ நாட்களில் சந்தனக் காப்புடன் வேலாயுத சுவாமி – ராஜாவாகவும், வேடனாகவும், சிவனாகவும் காட்சி தரும் திருக்கோலத்தை பார்த்துக் கொண்டேயிருக்கத் தோன்றும்.

மாதந்தோறும் கிருத்திகையும், ஆண்டு தோறும் தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்தசஷ்டி ஆகிய திருவிழாக்கள் பெருமளவில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மலையடிவாரத்தில் கல்யாண மண்டபமும் பக்தர்கள் தங்க வசதிகளும் உண்டு.

இழந்த கண் பார்வையை இத்தலத்து முருகனால் மீண்டும் பெற்ற ஒரு வயோதிக பக்தரின் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கிறது. 27 ஆண்டுகளாகவே கண் பார்வை இழந்த அந்த வயோதிகர் "விழிக்குத் துணை முருகனின் திருமென் மலர்ப் பாதங்களே" என்று உறுதியான நம்பிக்கையுடன் வேலாயுத சுவாமியையும் அவன் திருவடி படிமங்களையும் வழிபட்டு வந்தார். தாம் சேமித்து வரும் பணங்களையெல்லாம் முருகனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வந்தார். ஒரு வைகாசி விசாகத்தன்று முருகன் அவர் கனவில் தோன்றி ஆணையிட்டபடி, தட்டுத் தடுமாறி படிகளில் தவழ்ந்தே மலைக் கோயில் அடைந்து வேலாயுதன் சந்நிதியில் நின்று மனமுருகி வேண்டினார் – கண் இமைகள் திறந்தன. கண் ஒளி பெற்று எதிரே வேலாயுதனைத் தரிசித்து மகிழ்ந்து முருகனுக்கு அடிமையாகி விட்டார்.

பொன்மலை வேலாயுதனின் திருவுருவமும், அவனது திருவடி தரிசனமும் மனத்திற்கு நிறைவு தருகிறது. பிறவா வரம் தரும் வேலவன் கருணாம்ருத சரணங்கள் இமைப் பொழுதும் நெஞ்சிலிருந்து நீங்காத இடம் பிடித்துக் கொள்கின்றன.

"ஒற்றுமையைப் பயன்படுத்திக் கொள்வேன்!"

உள்ளத்துக் குப்பைகளை உதறிவிட்டு, பிறவி வெள்ளத்தைக் கடக்க, சிவனருள் தேடி வரும் பக்தர்களைத் திரும்புகிற பக்கமெல்லாம் திருவண்ணாமலையில் பார்க்க முடியும். கூடவே எங்கு நோக்கினாலும் குப்பைகள், கூளங்கள், புழுதிப் புகை கிளம்பும் சாலைகளையும் பார்க்கலாம். 1996-லேயே மாவட்டத் தலைநகராகி விட்ட திருவண்ணாமலை நகரின் பாதாள சாக்கடைத் திட்டம் ஒரு பெருங்கனவாய்த் தொடர்வதால் தெருவெங்கும் சாக்கடைக் கால்வாய்கள். இதனால் பகலிலும் கொசுக்களின் தாக்குதல் சகஜம்! இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்துபோகும் தலத்தில் பிளாஸ்டிக் பைகள், குவளைகள் போன்றவற்றுக்கு இன்றும் தடை விதிக்கப்படவில்லை. இப்படி திருவண்ணாமலையின் பிரச்னைப் பட்டியல் வெகுநீளம். நகராட்சி என்ற ஒன்று இங்கே செயல்படுகிறதா என்பதே தெரியாத நிலை. தி.மு.கவும், அ.தி.மு.கவும் மாறி, மாறி நகர சபையைக் கைபற்றியிருக்கிறார்கள். இந்த முறை தி.மு.கவின் கைக்கு அதிகாரம் கைமாற, மாநிலத்தில் அ.தி.மு.க ஆட்சி. நகரசபைத் தலைவர் ஸ்ரீதரன் மிக இளையவராக இருக்கிறார். ஆனால் எப்படிச் செயல்படுகிறார்?

"நகரில் குப்பைகள் தேங்கிக் கிடப்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நகராட்சியில் வெறும் நூற்று நாற்பத்தாறு துப்புரவுத் தொழிலாளர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். இவர்களை வைத்துக் கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்தி வருகிறோம். அதே போல தேவையான வாகனங்கள் இருந்தும், போதிய ஓட்டுனர்கள் இல்லை. புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தடை இருக்கிறது. எனவே முன்னாள் ராணுவத்தினர் மூலம் குப்பை வாகனங்களை இயக்க முடிவு செய்து விட்டோம். நான் பொறுப்பேற்றதும் உடனடியாக பிளாஸ்டிக்குக்குத் தடை விதித்து தீர்மானம் போட்டிருக்கிறோம். சிவப்பு, பச்சை நிறத்தில் குப்பைக் கூடைகளைக் கொண்ட டிரைசைக்கிள் மூலம் வார்டுதோறும் பிளாஸ்டிக் குப்பைகளைத் தனியே சேகரிக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்.



"பாதாளச் சாக்கடைத் திட்டத்துக்குக் கழிவுநீர் சேமிப்புக்குளம் அமைக்க நாலு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. முதல்கட்டமாக இதற்கு ரூபாய் ஏழு லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். விரைவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற, மாவட்ட நிர்வாகம் நகரசபையின் கூட்டுக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளும் என நம்புகிறோம்.

"திருவண்ணாமலையைப் பொறுத்த வரை பொதுக்காரியம் என்றால் கட்சி, அரசியல்பாகுபாடு இல்லாமல் ஒத்துழைப்பு தருகிறார்கள். இந்த ஒற்றுமையைப் பயன்படுத்தி... அடுத்த இரண்டாண்டுகளில் பெரும்பாலான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்போம்" என்கிறார் ஸ்ரீதரன்.


ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஸஹஸ்ரநாமம்



(ஸஹஸ்ரநாமாவளி, அருணாசலேஸ்வரர் பதிகம், உண்ணாமுலையம்மன் பதிகம், தீபதரிசனக் கும்மி வெள்ளிரத சேர்வை, அருணாசல அக்ஷரமணமாலை முதலியன அடங்கியது)

விலை : ரூ. 12.00

திருஅண்ணாமலை சுப்ரபாதம் போற்றி



பாடியவர் :
வாணி ஜெயராம்

விலை : ரூ. 35.00

வெளியிடுவோர்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

10, கபாலீஸ்வரர் சன்னதி தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600 004. ✆ 494 0376, 494 2530
போடி நிவாஸ், தபால் நிலையம் எதிரில்
மாதுங்கா மும்பை 400 019 ✆ 414 1344
email : giritrading@vsnl.com
website : www.giritrading.om

பருக பருக ஆனந்தம் அதிக ஆனந்தம்

சுத்தமான தஞ்சாவூர் டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

கல்யாணங்களுக்கும் சுபகாரியங்களுக்கும்

100% பியூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:

ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

இலவச டோர் டெலிவரிக்கு தொடர்பு
கொள்ளவும்:(சென்னை) : **8444725, 8442667**

டெல்லி, மும்பை, கொல்கத்தா.

E-mail:coffeeps@md3.vsnl.net.in

Pilgrim and Picnic package tours by

Panicker's Travel (Regd).

(Leading tour operators in India) Recognized by Govt. of India (Dept. of Tourism)
Gurudwara Road, Karoal Bagh, New Delhi - 5. Ph: 5723125/3395/7749/5786074

REGULAR TOURS

Delhi & New Delhi (A/C & Non A/C)
Daily 8.30amto5.30 pm & 9.00 am to 6.00pm
Taj Mahal-Agra-Mathura
(Daily 6.00 am return 10.00 pm same day)
Sunday / Monday Spl trip with Fathepur Sikri
No Service on Friday as Taj Mahal is Closed.
Haridwar-Rishikesh-Laxamn Jhools
(Daily 9.00 pm return next day 8.00pm)
Mussoorie-Haridwar-Rishikesh
Dep Tuesday & Friday
Jaipur-Ameer Fort-Jandar Mandar
Dep Wednesday & Saturday
Jaipur-Agra-Mathura
Dep Monday & Friday
7 days Rajasthan tour-Jodhpur-Udaipur-Mt.Abu-Pushkar-Ajmeer-Jaipur Dep every Friday 6.00am
Shimla-Chandigarh-Kurushetra
Dep Monday & Thursday
Accommodation will be provided where ever necessary.

SEASONAL TOURS

Kulu-Manali-Rohtang Pass-Shimla-Chandigarh-Pinjore Garden
(7 days every Friday 6.00pm)
Vaishnodevi-Amritsar-Wagha Border-Katra-Dalhouse-Manali
(8 days every Monday 6.00pm)
Manikaran-Manali-Pinjore Garden-Chandigarh 5 days every Monday 6.00 pm
Shri Badrinath-Kedarnath Yatra
Dep every Monday & Friday.
Char Dham-Badri-Kedarnath-Gangothri-Yamunothri
(12 days tour Dep every 2nd Friday-Monthly once)
Gangothri-Yamunothri-Gowmukh Yatra
8 days Dep every 1st Monday of May-June & Sep-October.
Kasi-Gaya-Allahabad-Agra-Mathura
Dep Every Monday 5.30am.
"Gods Own country" Tour (Kerala)
Thekkady-Munnar-Kovalam-Tvm-Guruvayoor-Kochi
Dep Every Wednesday & Friday
Badri-Kedarnath-Yamunothri-Gangothri-Kasi-Allahabad
Trip Provided with Food and Accommodation

A Cozy place you Love to Stay
PANICKER'S GUEST HOUSE - 5/22.W.E.A. Karol Bagh.
New Delhi-5. Ph-5725307 / 308 / 309. Fax: 011-5737034

We undertake Hotels, Resorts, House Boats, Air & Rail Bookings

For Booking & Enquiry Contact Our Office

A.G-3, 'Brigade Majestic'1st Main (Kalidasa)Road, Gandhi Nagar, Bangalore-9. Ph: 2257787 Fax:080-2280653
Email-panickersblr@yahoo.com

No. 22, 2nd Floor, 'Prince Plaza', 46, Pantheon Road, Egmore, Chennai -8, Ph: 8553010 / 4921 / 2028
Fax: 044 - 8551123. Email-panickerschennai@vsnl.net

தீக்குச்சி

"நா இனிமே போயி அவங்க மூஞ்சியிலே விழிக்க மாட்டேன்."

தீர்க்கமாகச் சொன்னாள் கலைச்செல்வி. மனத்தில் தேங்கிக் கிடந்த கோபமும் வெறுப்பும் வார்த்தைகளில் வடிகால் தேடிக் கொண்டன.

"நல்லாயிருக்குடி நியாயம். நாயாப் பேயா வேலை செஞ்சு குடுத்துட்டு போனஸ் கேட்கிறதுக்கு யோசிக்கிறயாக்கும்?" படபட வெனப் பொரிந்தாள் வேலம்மா.

"ஆமா, இப்பப் போயி கேட்டவுடனே கொடுத்துட்டுத்தான் மறு வேலை பார்ப்பாங்க. பங்குனிப் பொங்கலுக்கு முதல் நாள் வரை வேலைக்குப் போனாத்தான் போனஸ் கொடுப்பாங்க. உனக்கு ஒண்ணும் தெரியாது. பேசாம இரும்மா. இப்ப நீ எழுந்திருச்சு சாப்பிட வா..." பேச்சைத் திருப்ப முயன்றாள் அவள்.

ஆனால் வேலம்மாவிடம் பலிக்குமா? வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டு மறுபடி யுத்தத்துக்குத் தயாராவது போல் வந்து கட்டிலில் உட்கார்ந்தாள்.

"ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி... எப்படியும் நீ நாலு மாசத்துக்குக் குறையாம வேலை பாத்திருப்பே. அதைக் கணக்குப் பண்ணி கேட்க வேண்டியது தான்..."

"அது வந்து... ஒண்ணும் எனக்கு நிறைய வேணாம்..." குடத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டாள் கலைச்செல்வி.

தனியே புலம்ப ஆரம்பித்தாள் வேலம்மா.

'புருஷன்காரன் தச்சு வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிக்கிறான். இவ போய்த் தீப்பெட்டி ஆபீசுல தீக்குச்சி அடைக்கணும்னு அவசியமில்லைதான். போக வேணாம்னு சொன்னாக்கூட 'ஆமா வீட்டுலயே உட்கார்ந்துக்கிட்டு இருக்கச் சொல்றயாக்கும். தீப் பெட்டி அடைச்ச கை சும்மா நிக்குமாக்கும்'னு சொல்லி கிளம்பிடுவா. அப்படிப்பட்டவ இப்ப அவங்க மூஞ்சியிலே முழிக்க மாட்டேன்னு சொன்னா என்ன அர்த்தம். போன வாரம் இந்த செல்லம்மா வந்து சொல்லவுந்தே எனக்கே தெரியும்...'

வாசலில் செருப்பு சப்தம் கேட்டது. சைக்கிளை ஓரமாய் நிறுத்திக் கொண்டிருந்தான் முத்துராசு.

மருமகனுக்கு மரியாதை கொடுக்கும் முகமாக 'டக்'கென்று எழுந்து சமையலறைக்குள் போய்விட்டாள்.

"செல்வி!"

"அவ தண்ணிக்குப் போயிருக்கா..."

மாமியாரின் குரல் கேட்கவும் கட்டிலில் உட்காரச் சங்கடப்பட்டு, வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடக்க ஆரம்பித்தான்.

சமையலை முடித்து அடுப்புத் தணலில் வெந்நீர் போட்டுவிட்டுப் போயிருந்தாள் கலைச்செல்வி. புகை மட்டும் மெல்லிய இழைகளாய்க் கிளம்பிக் கொண்டிருந்தது. தணலின் வெப்பமாய் வேலம்மாவுக்குள் செல்லம்மாவின் பேச்சு கனன்று கொண்டிருந்தது.

"உன் மருமகன் எங்க தீப்பெட்டி ஆபீசுக்கு வந்தாரு அத்தே."

"ம்... எதுக்காம்?"

"உன் மக இப்ப வேலைக்கு வர்றதில்லேல்ல..."

"அப்படியா ஏன்?"

"நான் என்னத்தைக் கண்டேன். இப்ப எல்லா தீப்பெட்டி ஆபிசுகள்லேயும் வேலை கம்மிதான். நாங்க ஏதோ போய்ட்டு வந்துட்டிருக்கோம்..."

"அது சரி... வேலையில்லாம சும்மா எதுக்கு ஆபிசுக்குப் போயிட்டுன்னு நின்னிருப்பா..."

"என்கிட்டக்கூட அப்படித்தான் சொன்னா அத்தே..."

ஆனால் உண்மை அதுவல்ல என்பதை மறைமுகமாகக் கூறின செல்லம்மாவின் கண்களும் குரலும்.

"ஆமாமா... நமக்கெதுக்கு அவுக பாடு..."

மேல் பூச்சாகச் சமாளித்தாலும் மனம் சமாதானமாகவில்லை. செல்லம்மா சொல்ல வந்ததே வேறு விஷயமென்று தெளிவாகத் தெரிந்தது.

"ஆமா... என் மருமகன் எதுக்கு வந்தாரு?"

"பொங்கல் போனஸ் கேட்டுப் போகலாம்னு வந்திருப்பாரு. முதலாளிகூட ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்தாரு..."

"ம்... ம்..."

"வேலைக்கு வரச் சொல்லுங்க, போனஸ் கொடுத்திருவோம். ஏதோ தெரியாத்தனமா தப்பு நடந்திடுச்சு. இனி அப்படி நடக்க விடாம பார்த்துப்போம். அந்த ஆளையும் கண்டிச்சு வைச்சிருக்கேன்னு முதலாளி சொல்லிட்டிருந்தாரு."

"ம்..."

"அவன் யாருன்னு இவர் கேட்டாரு..."

"ம்...ம்..."

"அதெல்லாம் தெரிஞ்சு என்ன செய்யப் போறீங்க. வீணா தகராறுதான்னு முதலாளி சொல்லிட்டிருக்கும்போதே உன் மருமகன் சைக்கிளை எடுத்திட்டு 'விர்'ருன்னு போயிட்டாரு..."

ஆபிசில் என்ன நடந்ததென்று தெளிவாகத் தெரியவில்லை. எல்லா இடங்களிலும் மோசமான ஆளுங்க இருக்கத்தான் செய்யறாங்க. நாமதான் ஒதுங்கிப் போகணும்.

இது பற்றி மேலும் செல்லம்மாவிடம் கேட்க மனம் ஏனோ விரும்பவில்லை. ஒன்றைப் பத்தாக்கிச் சொல்லிவிட்டால்!

மருமகனிடமும் கேட்க முடியாது. என்னதான் நல்லவனாகவும் பொறுமையுள்ளவனாகவும் இருந்தாலும் மனசுக்குள் இந்த மாதிரி மனைவியைப் பற்றிய தவறான கருத்தை அடைகாத்துக் கிடந்தால் வாழ்க்கை நரகமாகிவிடுமே.

முத்துராசு இன்னமும் நடந்து கொண்டுதானிருந்தான். மின் விசிறியின் கடகட சத்தம் மட்டும் மிகையாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"சாப்பிடறீங்களா தம்பி...?"

"இல்லே அத்தே. அவ வரட்டும்."

வேலம்மாவுக்கு அதற்குமேல் பொறுக்க இயலவில்லை.

"தம்பி... நீங்களாச்சும் போயி அவ போனஸ் பணத்தைக் கேட்கக் கூடாது. நானூறு ரூபாய்கிட்டே வரும்..."

"இரண்டு நாள் முந்தி போய்க் கேட்டேன். இவ வேலைக்கு வந்தா தர்றேங்கிறான். இவ



போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறா, நமக்கென்ன..''

முதலாளி சொன்னதை முழுசாய்ச் சொல்ல அவனுக்கு மனம் ஒப்பவில்லை போலும். சுருக்கமாய் முடித்துக் கொண்டான்.

''அப்படிச் சொன்னா எப்படியாம்? வேலைக்குப் போறதும் போகாததும் நம்ம இஷ்டந்தே. அவன் குடுக்க வேண்டிய காசை விட்டெறிய வேண்டியதுதான்.. நீங்க இப்ப சாப்பிட்டு என்கூட வாங்க நாம போய்க் கேட்போம்.''

நான்கு மணிக்கு மூவரும் தீப்பெட்டி ஆபிசை அடைந்தனர். புங்க மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆர்வமின்றி வந்தான் முத்துராசு.

சுற்றிலும் காற்றில் கருமருந்து வாசனை கலந்திருந்தது. ஒரு சின்ன அறையில் ரைஸ் மில் மாதிரி ஒரு மோட்டார் குறைந்த ஒலியில் இயங்கிக் கொண்டிருக்க, பொட்டாசியம் குளோரேட், பாஸ்பரஸ் கலந்து மருந்துக் கலவை நடந்து கொண்டிருந்தது.

முத்துராசு வழி நடத்த, தாயும் மகளும் போலியான தயக்கம் காட்டி, ஆபிஸ் ரூம் வாசலில் நின்றார்கள்.

எப்படி ஆரம்பிப்பது என்று விளங்காமல் முதலாளியின் முகம் பார்த்தான் முத்துராசு.

மூவரையும் முழுசாய்ப் பார்த்து எதிரில் கிடந்த ஒரு பெஞ்சில் உட்காரும்படி சுவராஸ்யமின்றி சைகை காட்டிவிட்டு ஃபோனில் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தார் முதலாளி.

''நீங்க அனுப்புன குச்சி மூட்டை ஒண்ணும் சரியில்லை. உடைஞ்ச குச்சிகளும் குப்பையுமா கெடக்கு. பணம் அதுக்கு மேலே அஞ்சு பைசா கூட தரமாட்டேன். ஏற்கெனவே இங்கே ஃபயராகி முதலுக்கே மோசமாகிக் கெடக்கு. ம்... ம்... அதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்..'' ஃபோனை 'டக்'கென்று வைத்துவிட்டு அதே வெறுப்போடு,

''என்ன?'' என்றார் இவர்களைப் பார்த்து.

''என் மகதான் கலைச்செல்வி, போன மாசம் வரை வேலை பார்த்திருக்கா. போனஸ் குடுத்திங்கன்னா நல்லாருக்கும்..''

''அப்படி ஒண்ணும் சட்டம் கிடையாது. ஒழுங்கா வேலைக்கு வர்றவங்களுக்குத்தான் போனஸ் கொடுப்போம்.''

கலைச்செல்வி அந்தக் கம்பெனியைப் புதிதாய்ப் பார்ப்பதுபோல் மிரட்சியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வரிசையாக உட்கார்ந்திருந்த பெண்கள் சம்மணமிட்ட கால்களைச் சக்கையால் இணைத்து, அதிலுள்ள பல் போன்ற இடைவெளிகளை, இடது உள்ளங்கையில் ஒழுங்குபடுத்திய குச்சிகளை வலது கை பெருவிரலுக்கும் நடுவிரலுக்குமிடையே கொஞ்சமாய் எடுத்து நிரப்பிக் கொண்டிருந்தார்கள்.

கலைச்செல்வி உட்கார்ந்திருந்த இரண்டாவது வரிசை முதல் இடத்தில் சுப்புலட்சுமி உட்கார்ந்திருந்தாள். மருந்து பூசிய கட்டை, கொண்டிகள் நீக்கி தளர்த்தப்பட்டு நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்தது. அந்த குச்சிகளை உருவி சைடு அடித்த தீப்பெட்டிக்குள் சிறைவைத்தவண்ணமிருந்தாள். வேலையோடு வேலையாக இவளைப் பார்த்துச் சிரிக்கவும் செய்தாள்.

லேபில் ஒட்டிய பெட்டிகளை ட்ரேயில் கொட்டி வெயிலடிக்குமிடத்தில் வைக்கப் போனார்கள். பலரும் செல்வியைச் சிநேகமாய்ப் பார்த்து விலகிப் போனார்கள்.

வேலம்மா இப்போது விஷயத்துக்கு வந்தாள். '' நீங்க போனஸ் கொடுக்காட்டியும் பரவாயில்லே. என் மக ஏன் வேலையிலிருந்து நின்னா. அதுக்கு என்ன காரணம்?''

''இப்ப எதுக்கு அதெல்லாம்...?''

''ஏதோ பிரச்னை நடந்திருக்கு. எனக்குத் தெரியும். அந்தாளு யாரு? அவனை முதல்லே வரச் சொல்லுங்க..''

''இப்ப என்ன சண்டை போடறதுக்குன்னு வந்திருக்கிங்களா?''

''நாங்க ஒண்ணும் இளிச்சவாயங்க இல்லே..''

கலைச்செல்விக்கு தர்ம சங்கடமாக இருந்தது. அம்மா இந்தப் பேச்சை எடுப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை அவள்.

தூரத்தில் நின்று இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த கணக்குப் பிள்ளை அவர்களை நோக்கி விரைப்போடு வந்தான்.

''தமிழாசிரியர் அடிக்கடி ஜோக் சொல்லி பாடம் நடத்துறாராம்... நீ என்னடான்னா 'போர்'ன்னு அலுத்துக்கிறே..?''

''அரை நிமிஷம் ஜோக் அடிச்சுட்டு அதுக்கு அரை மணி நேரம் விளக்க உரை கொடுக்கிறாரே!''

- லலிதா செல்லப்பா

"நான்தாம்மா. இப்ப என்ன செய்யணும்கிறே" என்றான் மிடுக்கு குறையாமல்.

"ஏன்யா, வேலை பார்க்குற பொண்ணுங்ககிட்டே இப்படித்தான் நடந்துப்பீங்களா?" கோபமாய்த் திரும்பினான் முத்துராசு.

"ஏங்க, நீங்க சும்மாயிருங்க." அவன் கைகளைப் பிடித்து அமர்த்தினாள் செல்வி.

அவனை நாலு அடி அடித்தாலும் தேவலை போலிருந்தது வேலம்மாவுக்கு.

"எப்படி நடந்துக்கணும்னு எங்களுக்குத் தெரியும். யாரும் சொல்லித்தர வேணாம். வேலை பார்க்குற இடம்னா முன்னே பின்னே இருக்கத்தான் செய்யும். அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகணும்.

"அட்ஜஸ்ட் பண்ணிப் போகணுமா. அதுக்கு வேறே ஆளைப்பாரு..." என்றாள் செல்வி தன் பங்குக்கு.

"யாரும் என்னைத் தள்ளி நில்லுன்னு சொன்னது கிடையாது."

"இப்ப என்ன நடந்துருச்சுன்னு மொத்தமா வந்து ஆர்ப்பாட்டம் பண்றீங்க?" என்றார் முதலாளி.

"இனியும் என்னய்யா நடக்கணும். பொம்பளை புள்ளைக்கிட்டே எப்படி நடந்துக்கணும்னு தெரிய வேணாம். இந்த விஷயம் அவ புருசன் வரைக்கும் போயிருச்சு. அவர் மனசு என்ன பாடுபடும்..."

"என்னம்மா நீங்க. ஊரு உலகத்துலே நடக்காதது நடந்துட்ட மாதிரி கத்துறீங்க. இங்க நான்தான் கணக்குப் பிள்ளை. எல்லோருக்கும் வேலையைப் பகிர்ந்து கொடுக்குறது என் கடமை. இந்த வெளிநாட்டுக்காரன் தீப்பெட்டி மார்க்கெட்டுக்கு வந்ததிலேருந்து வேலையும் சுருங்கிப் போச்சு."

"அதுக்காக அடைக்கக் கொடுத்த கட்டையைத் திருப்பி வாங்கிக்குவீங்களாக்கும். அப்படியொண்ணும் நான் வேலை செய்ய வேணாம்" செல்வி முகம் சிவக்கக் கத்தினாள்.

"நீ சுறுசுறுப்பான பொண்ணுதான். நிறைய அடைக்கக் கூடிய திறமைசாலிதான். ஆனா மத்தவங்களுக்கும் கூலி வர்ற மாதிரி வாய்ப்பு கொடுக்கணுமில்லே. அதான் அன்னிக்கு அப்படிச் செய்ய வேண்டியதாப் போச்சு."

பால் பொங்கி வருகையில் தண்ணீர் தெளித்து அடங்கிய மாதிரி சிறிது நேரம் அமைதியாக இருந்தது அந்த இடம். வேலம்மாவும் முத்துராசும் அவரவர் கற்பனை செய்து வைத்திருந்த காட்சியை அழித்துக் கொண்டிருக்க வேண்டும்.

மேஜை டிராயரில் கிடந்த ரிஜிஸ்டரைத் திறந்து சரி பார்த்து நோட்டும் சில்லறையுமாக எடுத்து நீட்டினார் முதலாளி.

"இந்தாங்கய்யா போனஸ். வேலைக்கு வர்றதும் வராததும் உங்க விருப்பம்."

"பொங்கல் கழிச்சு வேலைக்கு வர்றேன் அண்ணாச்சி." என்றாள் செல்வி.



மூவரும் வெளியில் வந்தார்கள்.


"நான் பட்டறை வரை போயிட்டு வர்றேன்" முத்துராசு சைக்கிளை எடுத்துக் கொண்டு டவுன் பக்கம் பறந்துவிட்டான்.

"ஏம்மா, வேலையைவிட்டு ஏன் நின்னுட்டேன்னு என்கிட்டே கேட்டா நான் சொல்ல மாட்டேனா?" கலைச்செல்வி கேட்டாள்.

"நான் கேட்பேன், நீயும் சொல்லுவே. அது முக்கியமில்லே. ஆபிசுல நடந்தது சாதாரண விஷயம்தான். ஆனா நீ அதை உன் புருசன்கிட்டே சொல்லாம மறைச்சிட்டே. அதை அவரே போய்க் கேட்டு அரைகுறையா தெரிஞ்சுக்கிட்டாரு. அது விபரீத கற்பனையை வளர்த்து மனசே புண்ணாயிருக்கும். இப்ப வெளியே தெரியாவிட்டாலும் நாளடைவிலே புற்று நோய் மாதிரி வளர்ந்து வாழ்க்கையைச் சீரழிச்சுடும். உன் புருஷன் மனசுல ஏற்பட்டிருக்கிற இந்தக் காயத்துக்கு என்ன மருந்து போடுவே? அதுக்கு இதுதான் சரியான சிகிச்சை. உனக்கு ஒண்ணும் புரியாது, பேசாம வா" என்றபடி நடந்தாள் வேலம்மா. ●



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)





வழங்குகிறோம் ஜண்டு கோல்டன் மஞ்சள் நிற பாம். தலைவலியைப் போக்கிடும், ரூ. 2.44* சேமித்திடும்.

இப்போது ஜண்டு கோல்டன் மஞ்சள் நிற **10 கிராம்** பாமின் விலை ரூ. 12/-. அதே சமயம் மற்ற மஞ்சள் நிற **9 கிராம்** பாம்கள் உங்களுக்குக் கிடைக்கிறது ரூ. 13/- என்ற விலையில். ஜண்டு கோல்டன் பாம் தலைவலியைப் போக்குவதோடு உங்கள் செலவையும் குறைத்திடும். இது மட்டுமல்ல. இதை வழங்குவது ஜண்டு நிறுவனம்.

*ஒவ்வொரு 10 கிராமிலும்

வருகை தாருங்கள் : www.zanduayurveda.com

FCB+ULKA 17034 TAM

Registered with the Registrar of Newspapers of India under No. 1041/97 * Registered No. TN/Chief PMG-141/2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka